

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | அக்டோபர் 01, 2015 | புரட்சி 14 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00

## குற்றவாளிகளே நீதிபதிகளாக முடியாது

# போர்க் குற்றம்: உள்நாட்டு விசாரணை பயன் தராது!

அய்.நா.வின் மனித உரிமைக் குழு அறிக்கை ஈழத்தில் தமிழர்கள் மீதான போர்க் குற்றங்களை விசாரிக்க கலப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. சிங்கள நீதிபதிகள், சர்வதேச சட்ட நிபுணர்கள் அடங்கியதே கலப்பு நீதிமன்றம். இலங்கை அரசு உள்நாட்டு விசாரணையை மட்டுமே ஏற்க முடியும் என்று பிடிவாதமாக மறுக்கிறது. கடந்த காலங்களில் சர்வதேச விசாரணைக்கு ஆதரவாக இருந்த அமெரிக்கா, இப்போது அய்.நா.வில் முன்மொழிய உள்ள தீர்மானத்தில் இலங்கை அரசின் ஒப்புதலுடன் தான் அமெரிக்காவின் தீர்மானம் இருக்கும் என்று கூறிவிட்டது. உண்மையில் இலங்கை வரலாற்றில் இதுவரை அங்கே நடத்தப்பட்ட எந்த உள்நாட்டு விசாரணையும் முழுமையாக தோல்வியையே சந்தித்து வந்திருக்கின்றன.

1963-லிருந்து 2013 வரை இலங்கையில் ஏறத்தாழ 18 விசாரணை ஆணையங்களை இலங்கை அரசு நியமித்திருக்கிறது. இதில் பெரும்பாலானவை. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பானவை, எந்த ஒரு ஆணையமும் முறையாக செயல்படவில்லை.

முதன்முதலாக 1963ஆம் ஆண்டு அன்றைய ‘சிலோன்’ ஆளுநராக இருந்த வில்லியம் கோபால்லவா, ஒரு விசாரணை ஆணையத்தை நியமித்தார்.1959ஆம் ஆண்டு அந்நாட்டின் பிரதமராக இருந்த எஸ்.டபுள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகா, சிங்கள புத்த பிக்குவால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலையில் சர்வதேச சதி இருக்கிறதா என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட இந்த விசாரணை ‘கலப்பு நீதிமன்ற’ விசாரணை தான். அன்றைய “சிலோன்” உச்சநீதிமன்ற நீதிபதியோடு அய்க்கிய அரபு குடியரசு நாட்டைச் சார்ந்த நீதிபதி ஒருவரும், கானா நாட்டு நீதிபதி ஒருவரும் சேர்ந்து விசாரிப்பார்கள் என்று இலங்கை அரசு அறிவித்தது. விசாரணை தோல்வியிலேயே முடிந்தது.

இராஜபக்சே - ஒரு ஏமாற்று விசாரணையை அறிவித்தார். 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிய அந்த நாட்டில் நடந்த 16 கொடூரமான மனித உரிமை மீறல்களை விசாரிக்க ஆணையம் நியமிக்கப்பட்டது. திரிகோண மலையில் 5 தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டது; மூதூரில் 17 தொண்டு நிறுவன ஊழியர்கள் கொல்லப்பட்டது ஆகியவையும் இதில் அடங்கும். இந்த விசாரணை முறையாக நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்க சர்வதேச சட்ட நிபுணர்களைக் கொண்ட “சர்வதேச சுயேச்சையான முக்கிய பிரமுகர்கள் குழு” அமைக்கப்பட்டது.

இந்தியாவின் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.என்.பகவதி - இந்தக் கண்காணிப்புக் குழு தலைவராக இருந்தார். அய்.நா.வின் மனித உரிமைக் குழுவின் முன்னாள் தலைவர் ஒருவரும் இடம் பெற்றிருந்தார். இவர்களை நியமித்ததே இராஜபக்சே தான். ஆனால், இந்த சர்வதேச பிரமுகர்கள் குழு, விசாரணை காலத்திலேயே பாதியில் தங்கள் பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டுவிட்டனர்.

“விசாரணையில் வெளிப்படைத் தன்மை இல்லை; பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவி கிடைக்கவில்லை; சாட்சிகளுக்கு பாதுகாப்பு இல்லை; இலங்கை அரசுத் துறைகள் ஒத்துழைக்க மறுத்ததோடு, அரசும் ஆணையம் சுதந்திரமாக செயல்பட நிதி ஒதுக்கீடு செய்யவில்லை” என்று வெளிப்படையாகவே நீதிபதி எஸ்.என்.பகவதி குழு அறிக்கை வெளியிட்டு, இலங்கையை விட்டு வெளியேறியது, விசாரணை எவ்வளவு மோசமாக நடந்தது என்பதற்கு ஒரு சான்று. திரிகோணமலை கடற்கரையில் அமர்ந்திருந்த 5 தமிழ் மாணவர்களை சிங்கள அதிரடிப் படை 2006 ஜனவரி 20ஆம் தேதி எந்தக் காரணமும் இன்றி சுட்டுக் கொன்றது. அதில் ஒரு மாணவர் ராஜிஹான். இவரின் தந்தை மனோகரன், அய்ரோப்பிய நாடு ஒன்றில் மருத்துவராக பணிபுரிந்தார். தனது மகனை அதிரடிப் படை எப்படி சுட்டது, எப்படி சித்திரவதை செய்தது என்பதை விசாரணை ஆணையத்தில் அய்ரோப்பிய நாட்டிலிருந்து ‘வீடியோ பதிவு’ வழியாக சாட்சியமளித்தார். உடனே துணைக் கோள்கள் வழியாக சாட்சியமளிக்க அரசு செலவு செய்யாது என்று நிதி வழங்க அரசு மறுத்துவிட்டது. இப்போது இலங்கையில் போர்க் குற்ற விசாரணை மன்றம் அமைக்கப்பட்டால், தனக்கு பாதுகாப்பு இருக்காது என்பதால் சாட்சி சொல்ல வர இயலாது என்று மனோகரன் மறுக்கிறார்.

தில் குக்சன் என்ற தமிழர் கைது செய்யப்பட்டு, வவுனியா, அனுராதபுரம், மகரா சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு ஜூலை 2012இல் மகாரா மருத்துவமனையில் மரணமடைந்தார். அவரது தந்தை பெயர் முத்துராசா. அண்மையில் வானொலி ஒன்றுக்கு அவர் பேட்டி அளிக்கையில், இலங்கையில் நீதிமன்றம் அமைக்கப்பட்டால், தன்னால் சாட்சி சொல்ல வர இயலாது என்று கூறியிருக்கிறார்.

போர்க் குற்றங்கள் படுகொலைகளை நடத்திய அதிரடிப் படையினர், இராணுவத்தினர், சிங்கள அரசின் பாதுகாப்போடு இருக்கும் நாட்டில் விசாரணை எப்படி நேர்மையாக நடக்க முடியும்?

இப்போது அதிபராக உள்ள மைத்திரிபால சிறிசேனா தான் 2009ஆம் ஆண்டு போரின் இறுதி கட்டத்தில் இராணுவத் துறையின் பொறுப்பை ஏற்றிருந்தார்.

இப்போது சிறீலங்கா சுதந்திர கட்சி, அய்க்கிய தேசியக் கட்சி இரண்டும் இணைந்து ஆட்சி அமைத்திருந்தாலும் இதற்கான ஒப்பந்தம் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும்தான். அதற்குப் பிறகு ஆட்சி நிலைத்து நீடிக்குமா என்பது கேள்விக் குறி. இத்தகைய சூழலில் போர்க் குற்ற விசாரணை தொடர்ந்து நடக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? உள்நாட்டு விசாரணை என்பது ஏமாற்று நாடகமே!

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை போடாதே

# குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் கழகம் ஆர்ப்பாட்டம்





**13.9.2015** அன்று நடைபெற்ற கன்னியாகுமரி திராவிடர் விடுதலைக் கழக மாவட்டக் குழுக் கூட்டத்தில் அரசு அலுவலகங்களிலுள்ள கற்பனை கடவுளர் படங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் அகற்றவும், ஆயுத பூஜைப் போன்ற மதப் பண்டிகைகளை கொண்டாடவும், தடைவிதித்த அரசாணையையும், உயர்நீதிமன்றத் தீர்ப்பையும் அமுல்படுத்தக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 25.9.15 வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில் மாவட்ட கழகத் தலைவர் வழக்குரைஞர் சதா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

தோழர்கள் தமிழ் மதி, நீதி அரசர், சூசையப்பா, சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட இராம. இளங்கோவன் ஆகியோர் போராட்டத்தை விளக்கிப் பேசினர். ‘அரசு அலுவலகங்களை பூஜை மடங்களாக்காதே’ என்று முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நெல்லை மாவட்ட கழகம் சார்பாக மதியழகன், சாந்தா கலந்து கொண்டனர். குமரேசன் தலைமையில் ஆதித் தமிழர் பேரவையினரும், ஜான் விக்டர்தாஸ் தலைமையில் ஆதி திராவிடர் முன்னேற்றக் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர். சமூக ஆர்வலர்கள் செ. போஸ், ஜோ. தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மாவட்டப் பொருளாளர் மஞ்சுக் குமார் நன்றி கூற ஆர்ப்பாட்டம் முடிவுற்றது.

தொடர்ந்து மாவட்ட தொழிலாளர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் இராம. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். தலைவராக நீதிஅரசர், செயலாளராக சிவச்செல்வம், பொருளாளராக மோ. விஷ்ணு அறிவிக்கப்பட்டனர்.

**குமரி மாட்டக் கழகத்தின் பொறுப்பாளர்கள்**

கன்னியாகுமரி மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம் தக்கலை ஜோகில்ஸ் அரங்கில் 6.9.15 அன்று காலை 9.30 மணிக்கு துவங்கியது. கூட்டத்தில் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நீதிஅரசர் வரவேற்றார். மாவட்டத் தலைவர் ஜா. சூசையப்பர் தலைமை உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் சதா வாழ்த்தி பேசினார். மாநில அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, ‘பெரியாரியல்’ என்ற தலைப்பில் 2 மணி நேரம் உரையாற்றினார். மதியம் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. பின்னர், பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், கன்னியா குமரி மாவட்டத்தில் ‘சாதீயம்’, ‘நாத்திகம்’ ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவாற்றினார்.



கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். மாவட்டத் தலைவர் - வழக்குரைஞர் வே. சதா, மாவட்டச் செயலாளர் - தமிழ் மதி, பொருளாளர் - மஞ்சுக் குமார், பெரியார் தொழிலாளர் கழக மாவட்டத் தலைவர் நீதி அரசர், குழித்துறை ந. தலைவர் ஜே.கே. தாமஸ்.

**தலையங்கம்**

## நேபாளத்தில் ‘இந்து’ மத ஆட்சி ஒழிந்தது!

*உலகின் ஒரே ‘இந்து’ நாடு என்று பார்ப்பனியம் பெருமையுடன் பறைசாற்றி வந்த ‘நேபாளம்’ – மதச்சார்பற்ற நாடாகி விட்டது. ‘இந்து மன்னர்’ ஆட்சி நடந்தது. அந்த மன்னர் விஷ்ணுவின் ‘மறு அவதாரம்’ என்று, மக்களை பார்ப்பனியம் நம்ப வைத்தது. மனு சாஸ்திரமே நாட்டின் சட்டமாக இருந்தது. மன்னர் ‘க்ஷத்திரியர்’; அவர் ‘பிராமண புரோகிதர்’ காலில் விழுந்து ஆசி பெற வேண்டும். சங்கராச் சாரி பார்ப்பனர்கள், தங்களின் தாய் நாடாக நேபாளத்தைக் கருதி வந்தனர்.*

*1994ஆம் ஆண்டு முதல் ‘மனு தர்ம’ மன்னராட்சிக்கு எதிராக மாவோ யிஸ்டுகள் ஆயுதம் தாங்கியப் போராட்டத்தைத் தொடங்கினர். 2006இல் ஆயுதப் போராட்டத்தை கை விட்டு, அரசியல் பாதைக்குத் திரும்பினர். அதைத் தொடர்ந்து, 2008ஆம் ஆண்டு 239 ஆண்டுகால மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டு, மக்களாட்சி முறையைக் கொண்டு வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவு எடுக்கப்பட்டது. ‘மதச்சார்பற்ற’ கொள்கையின் அடிப்படையில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் அமைப்பை உருவாக்குவதில் கருத்தொற்றுமை உருவாகவில்லை. இறுதியாக கருத்தொற்றுமை உருவாகி யது. 601 உறுப்பினர்களைக் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில் கடந்த செப்டம்பர் 16ஆம் தேதி புதிய அரசிய லமைப்புக்கு வாக்கெடுப்பு நடந்தது. பங்கேற்ற 532 உறுப்பினர்களில் 507 பேர் இந்து பார்ப்பனிய மன்னர் ஆட்சியை ஒழிக்கும் புதிய அரசியல் அமைப்புக்கு ஆதரவாகவும், 27 பேர் எதிராகவும் வாக் களித்தனர். புதிய அரசியல் சட்டத்தின்படி நேபாளம் 7 மாநிலங்களைக் கொண்ட மதச்சார்பற்ற நாடாக மாறியுள்ளது.*

*நேபாள தென் பகுதியில் உ.பி., பீகார் எல்லையை ஒட்டி வாழும் மாதேசி, தரு என்ற சமூகப் பிரிவினர், புதிய அரசியல் சாசனத்தை ஏற்காமல் போராடி வருகிறார்கள். ‘இந்து இராஷ்டிரத்தை’ இந்தியாவில் நிறுவிட ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் தீவிரமாக ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்தி வரும் சூழலில் நேபாளத்தில் ‘இந்து’ ஆட்சியை ஒழித்து மலர்ந்துள்ள மதச்சார்பற்ற ஆட்சிக்கு வெளிப்படையான ஆதரவு தர பா.ஜ.க. ஆட்சி தயங்குகிறது. மாதேசி, தரு சமூகத்தினர் போராட்டங்களுக்கு மறைமுகமான ஆதரவை நல்கி வருகிறது. தங்களின் பிரதிநிதித்துவம் குறைந்து விட்டது என்றும், இரண்டாம் தர குடிமக்களாகி விட்டோம் என்றும், மாதேசி, தரு பிரிவினர் நடத்தும் போராட் டத்தை ஆதரித்து, அதற்கேற்ப அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும் என்று நேபாளத்தின் அதிபர் ராம்பரன் யாதவை இந்திய தூதர் நேரில் சந்தித்து வலியுறுத்தி யிருக்கிறார். மோடி ஆட்சி, நேபாள சிறு பான்மையினருக்காக காட்டும் துடி துடிப்பை அண்டை நாடான இலங்கை யிடம் அங்கே வாழும் தமிழர்களுக்காக ஏன் காட்ட மறுக்கிறது என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது.*

*மதத்தின் பெயரால் அமையும் ஆட்சிகள் மக்கள் விரோத ஆட்சி களாகவே இருக்கும். பல இஸ்லாமிய நாடுகளில் மனித உரிமைகள் முற்றாக நசுக்கப்பட்டு, பெண்கள் அடிமை களாக நடத்தப்படும் செய்திகளும் இஸ்லாமிய மத அடிப்படை வாதிகளின் மதவெறி செயல்பாடுகளும் நாகரிக சமூகத்துக்கு தலைகுனிவையே ஏற்படுத்தி வரு கின்றன.*

*மதங்களின் ஆட்சிகளும் அதன் காலத்துக்கு ஒவ்வாத பழமைவாதங்களும் நிலைத்து நீடிக்கவே முடியாது.*

*பார்ப்பனிய மன்னராட்சிக்கு விடை கொடுத்து, மதச் சார்பற்ற ஆட்சிக்கு மாறியுள்ள நோபாள மக்களுக்கு நமது வாழ்த்துகள்!*

# பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா? (1)

**வாலாசா வல்லவன்**

*பெரியாருக்கு எதிராக அவ்வப்போது சில வரலாற்றுப் புரட்டர்கள் புறப்படுவதும், பதிலடி கிடைத்தவுடன் பதுங்குவதும் வாடிக்கையாகி விட்டது. ‘குணா’வின் வாரிசாக கிளம்பியுள்ள ஒருவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலுக்கு இது ஒரு மறுப்பு.*

வழக்கறிஞர் பா. குப்பன் என்பவர் ‘தமிழரின் இனப்பகை ஈ. வெ. ரா’ என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அந்நூலில் பல வரலாற்றுப் பொய்களையும் பல வரலாற்றுத் திரிபுகளையும் செய்துள்ளார். அவர் சமீபகாலமாக ம.பொ.சியின் பக்தராக மாறியுள்ளதால் ம.பொ.சியின் வரலாற்றுப் புரட்டல்களை அவரது சீடகோடிகள் இன்றும் செய்து வருவதில் வியப்பொன்றுமில்லை.

தமிழ் மக்களுக்கு உண்மை வரலாறுகள் தெரியவேண்டும். தமிழினத்திற்கு உண்மையான எதிரிகள் யார், உண்மையான தோழர்கள் யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டால் தான் நாம் மேற்கொண்டிருக்கும் இலட்சியப் பயணத்தின் இறுதியில் வெற்றி கொள்ளமுடியும். பா.குப்பன் தன்னுடைய நூலின் தொடக்கத்திலேயே என்னுரையில் பக் 31இல் (அவர் தமிழ் எண்ணில் பக்க எண் கொடுத்துள்ளார்)

“இமய மலைக்கும் விந்திய மலைக்கும், கங்கை ஆற்றுக்கும் சிந்து ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்த ஆரிய வர்த்தத்திலிருந்த சூத்திரப் பட்டத்தைத் தமிழர்களுக்குச் சூட்டி இழிவுபடுத்தினார் ஈ.வெ.ரா. தமிழர்களைப் பிராமணர்கள் ‘சூத்திரன்’ என்று அழைத்ததாகக் கூறிய ஈ.வெ.ரா. ‘சூத்திரர், சூத்திரர்’ என்று திரும்பத் திரும்பச் சொல்லித் தமிழரிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கினார்” என்று கூறுகிறார். இது எவ்வளவு உலக மகா பொய் என்பது வரலாறு படித்த அனைவருக்கும் தெரியும்.

திருவள்ளுவர் காலத்திலேயே 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டில் ஆரியம் ஊடுருவித் தமிழர்களை இழிவு படுத்தியது என்பதற்கு திருவள்ளுவரே சான்று.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” - என்று திருவள்ளுவர் எழுத வேண்டிய காரணமென்ன ? பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு இருந்ததால் தானே. அதுமட்டுமன்றி 1500 ஆண்டுகளுக்கு முன்பு அரசாட்சி செய்த பல்லவ மன்னர்கள் மனுதர்மப்படி ஆட்சி நடத்தியுள்ளதையும், 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி செய்த இராசஇராச சோழன் பல ஆயிரக்கணக்கான வட நாட்டு ஆரியப் பார்ப்பனர்களை வரவழைத்து அவர்களுக்குப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் ‘பிரம்மதேயம்’, ‘சதுர்வேதிமங்கலம்’ என்கிற பெயர்களில் தானமாகக் கொடுத்து, அவர்கள் சொல்படி (நால்வருணத் தர்மப்படி) ஆட்சி நடத்தியதையும் டாக்டர் இராசமாணிக்கனாரின் ‘பல்லவர் வரலாறு’, சாதாசிவ பண்டாரத்தாரின் ‘பிற்காலச் சோழர் சரித்திரம்’ முதலான நூல்களில் கல்வெட்டு ஆதாரங்களோடு உள்ளன.

மேலும் பாண்டியர் கால ஆட்சிகளிலும் பார்ப்பன நால் வருண ஆட்சியே நிலை பெற்றிருந்தது. ஒரு பாண்டிய மன்னனுடைய பெயரே ‘முதுகுடுமிப் பெருவழுதி’ ஆகும். ஒரு சோழ அரசனுடைய பெயர் ‘மனுநீதிச் சோழன்’ என்றும் உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் தமிழ் அரசர்கள் அரசு ஆண்ட பொழுதிலும் வேற்று மொழி அரசர்கள் தமிழகத்தில் அரசு ஆண்ட போதிலும் ஆரியப் பார்ப்பன ஆதிக்கமும் அவர்களுடைய செல்வாக்கும் உச்ச நிலையில் இருந்ததைத் தமிழக வரலாறு நன்கு உணர்த்துகிறது. ஆனால் குப்பன் கேட்கிறார் எந்த ஆரிய மன்னன் தமிழ் நாட்டை ஆண்டான் என்று. இவருடைய வாதத்தை என்ன என்று சொல்வது. வழக்குரைஞர் பா.குப்பன் எழுதுகிறார் வடக்கே இருந்த நால்வருணத்தையும் சூத்திரப் பட்டத்தையும் பெரியார் கொண்டு வந்து தமிழர்மேல் சுமத்துகிறார் என்று. இது எவ்வளவு பச்சையான பொய்யும் வரலாற்றுத் திரிபுமாகும்.

பா.குப்பன் ஒரு வழக்குரைஞர். இந்துச் சட்டத்தைப் படித்திருப்பார் என்று நினைக்கிறேன். இந்துச் சட்டத்தின் முகவுரையிலேயே எடுத்த எடுப்பிலேயே இந்துக்களை நான்கு வருணங்களாகப் பிரித்து உள்ளதைத் தெளிவாக அறியலாம். பெரியார் பிறப்பதற்கு முன்பே ஆங்கிலேயர்கள் 1863 ஆம் ஆண்டிலேயே இந்துச் சட்டத்தைத் தொகுத்தார்கள். அதன் பிறகு 1955 இல் அதில் சில மாற்றங்களை இந்திய அரசு செய்தது. இன்றும் பார்ப்பனர்கள் பூசாரிகளாக உள்ள பெரிய கோவில்களில் பிறசாதியினர் பூசை செய்ய முடியாது. தமிழக அரசின் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

சூத்திரப் பட்டத்தை ஒழிக்கப் போராடிய பெரியாரைப் பார்த்துத் தமிழர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத் தினார் என்பது எவ்வளவு புரட்டு. குப்பனுடைய பாட்டைனையும், பூட்டனையும் 10 வயதுப் பார்ப்பன இளைஞன்கூட டே, போடா, வாடா என்று தான் அழைத்தான். அவர்கள் என்னசாமி என்றுதான் கூறினார்கள். இந்த நிலைமையை ஒழித்தது யார் ? பெரியாரல்லவா ? தமிழர்களுக்குத் தன்மான உணர்ச்சி யூட்டிய பெரியாரைப் பார்த்துத் தாழ்வு மனப்பான்மையை உருவாக் கினார் என்பது குப்பனுடைய பேதமையைக் காட்டுகிறது.

குப்பன் இந்த நூலில் பெரியார் மீது வைத்திருக்கும் மிகப் பெரிய குற்றச்சாட்டு எல்லைப் போராட்டத்தில் பெரியார் துரோக மிழைத்து விட்டார் என்பதுதான். அந்த நூலில் இச்செய்தி பல பக்கங்களில் உள்ளது.

அக் குற்றச்சாட்டில் ஒரு துளிகூட உண்மை இல்லை. ம.பொ.சி ஒரு பொய்யர், வரலாற்றுப் புரட்டர், அவர் தனக்கு சாதகமாகவும் திராவிடர் இயக்கங்களுக்கு விரோதமாகவும் உண்மைக்கு மாறான பல செய்திகளை எழுதியுள்ளார். ‘புதியத் தமிழகம் படைத்த வரலாறு’, ‘எனது போராட்டம்’ ஆகிய நூல்களில் அப் பொய் களை எழுதியுள்ளார். அதைப் படித்துவிட்டு ம.பொ.சியின் சீடர்கள் அப்பொய்களையே திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர்.

உண்மையில் எல்லைப் போராட்டம் நடத்தியவர்கள் அதை ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டமாக நடத்தவில்லை. ம.பொ.சி. வடக்கெல்லை போராட்டம் நடத்தியபோது ‘தமிழரசுக் கழகம்’ என்ற பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும் 1953இல் காமராசர் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் வரையில் காங்கிரசுக் கட்சியில்தான் இருந்தார். காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியே வந்த பிறகும்கூட அவருடைய சிந்தனைப் போக்கு இந்திய தேசியத்திலேயே குடிகொண்டிருந்தது. அதற்கு அவருடைய ‘எனது போராட்டம்’ நூலே சாட்சி.

தெற்கெல்லைப் போராட்டம் நடத்திய மார்ஷல் நேசமணி ‘திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசு’ என்ற பெயரிலேயே அமைப்பை வைத்திருந்தார். கொச்சி, திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களைத் தமிழ்நாட்டுடன் இணைப்பது மட்டுமே எங்கள் குறிக்கோள். மற்றபடி காங்கிரசுக்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடு கிடையாது என்று வெளிப்படையாக அறிக்கை விட்டவர் (நம் நாடு 1-9-54). எல்லைப்போராட்டம் நடத்தியவர்கள் அடிப்படையில் இந்தியத் தேசிய வாதிகளாகவே இருந்தார்கள். நேசமணி 1957இல் இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்தார், வடக்கெல்லைப் போராட்டத் தளபதி கே. விநாயகம் 1952 முதல் பிரஜா சோசலிஸ்டு கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். 1957இல் இந்தியத் தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். இருவரும் 1957இல் காங்கிரசு கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஆனார்கள். ம.பொ.சி கடைசியாகக் காங்கிரசில் சேர்ந்தார். ஆக இவர்களில் யாரும் தமிழ் இன விடுதலைக்கான உண்மையான போராளிகள் அல்ல.

இனி எல்லைப் போராட்டங்களைக் குறித்துச் சற்றுப் பார்ப்போம். பிரதமர் நேரு 1953இல் அமைத்த நீதிபதி வாஞ்சு குழு தன் பரிந்துரையில் சென்னை ஆந்திராவின் தற்காலிக தலைநகராக 3-5 வருடங்கள் இருக்க வேண்டும் (அறிக்கை பக். 6). ஆந்திராவின் உயர்நீதிமன்றம் 5 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை சென்னையில் இருக்கவேண்டும் (அறிக்கை பக். 8). சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரி பொறியியல் கல்லூரிகளில் ஆந்திர மாணவர்களுக்கு 36சதவீத இடங்களை 25 ஆண்டுகளுக்கு ஒதுக்கித் தர வேண்டும் (அறிக்கை பக் 12-13). பிரிந்து போகும் ஆந்திர மாநிலம் புதிய தலைநகரை உருவாக்குவதற்குச் சென்னை மாகாண அரசு இரண்டரை கோடி ரூபாய் தர வேண்டும் (அறிக்கை பக் 26). இது வாஞ்சிக் குழுவின் பரிந்துரையாகும். தமிழகத்தின் வடக்கெல்லையான சித்தூர், திருப்பதியையும் இக் குழுதான் ஆந்திராவிற்கு அளித்தது.

இந்தப் பரிந்துரைகளைக் கண்டித்துத் தமிழ்நாடே கொதித்து எழுந்தது.

### ஆந்திரா பிரச்சனை குறித்துத் திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழு 11-1-1953இல் நிறைவேற்றிய தீர்மானம்

(எ) ஆந்திர நாடு பிரிவினை விஷயத்தில் ஆந்திரர்கள் பிடிவாதமாக இருப்பதால் ஆந்திர நாட்டைப் பிரிக்கும் விஷயத்தில் காலதாமதம் செய்யாமல் உடனடியாகப் பிரித்து விடவேண்டுமென்று இக்கமிட்டி தெரிவித்துக் கொள்ளுகிறது.

அப்படிப் பிரிப்பதில் ஆந்திர நாட்டினரிலேயே சிலர் பிரிவினைக்கு முட்டுக்கட்டை போடுகிற மாதிரியில் தாங்கள் பிரிந்துபோன பின்பும் எஞ்சியுள்ள சென்னை நாட்டில் தங்களுக்குச் சில உரிமையோ சலுகையோ அதாவது பொது நீதிமன்றம், பொது கவர்னர் முதலியவை சென்னையிலிருக்க வேண்டுமென்று கேட்பதையும், சென்னையைத் தற்காலிக தலைநகரமாக இருக்க இடம் தரவேண்டுமென்பதையும், இக்கூட்டம் கண்டிப்பதுடன், அப்படிப்பட்ட உரிமைக்கோ சலுகை முதலியவற்றிற்கோ மத்திய சர்க்கார் இடம் கொடுக்குமானால் தமிழர்களின் அதிருப்திக்கும், கிளர்ச்சிக்கும் ஆளாகவேண்டி நேரிடு மென்று மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கின்றது.

இதே சமயத்தில் திராவிடர் கழகம் ராஜ்ய பிரிவினையைப் பற்றிய தனது கருத்தைக் தெரிவித்துக் கொள்ளுகின்றது. அதாவது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி நாடுகள் சேர்ந்த சென்னை ராஜ்யம் மத்திய (இந்திய யூனியன்) ஆட்சியின் எவ்வித சம்பந்தமுமில்லாத தனிச் சுதந்திர ராஜ்யமாகப் பிரிக்கப்படவேண்டும் என்பதே அதன் முடிந்த கருத்தாகும். இந்த நிலையில் சென்னை ராஜ்ஜியத்திலிருந்து எந்த மொழி நாடு பிரிந்து போனாலும் மீதியுள்ள மொழி நாடு அல்லது நாடுகள் பூரண சுதந்திர முள்ள தனி அரசு நாடாக ஆக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு இருக்கிறதுடன் இந்த கொள்கைக்குக் கட்டுப்பட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி செய்யும் எந்த மொழி நாட்டாருடனுடம் யாருடனும் திராவிடர் கழகம் கூடுமான அளவு ஒத்துழைக்க முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கின்றது.

பி) எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசாங்கத்தார் சென்னை நகரத்தையும் அதைச் சேர்ந்த எந்த

( 4ஆம் பக்கம்)

# கோபியில் பெரியார் இயக்கங்கள் – தமிழர் அமைப்புகள் இணைந்து பெரியார் விழா; இளம்பிள்ளையில் ஜாதி ஒழிப்பு பரப்புரை; சேலம்–கோவை மாவட்டங்களில் பெரியார் விழா

# கழகத்தின் எழுச்சிப் பணிகள்

கோபிசெட்டிபாளையம் தமிழர் கூட்டமைப்பின் சார்பில் பல்வேறு கட்சியினர் கலந்துகொண்ட ஊர்வலம் தந்தை பெரியாரின் பிறந்தநாளையொட்டி எழுச்சியுடன் நடைபெற்றது.




ஈரோடுமாவட்டம். கோபிசெட்டிபாளையம், தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவை ஒவ்வொரு வருடமும் வெகு சிறப்பாக தமிழர் கூட்டமைப்பின் சார்பில் கொண்டாடிவருகின்றனர். இவ்வாண்டு தந்தை பெரியாரின் 137வது பிறந்தநாள் விழாவை திராவிடர் விடுதலைக்கழகம், திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம், மதிமுக, வி.சி.க, நாம்தமிழர் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்பினர் ஒன்றிணைந்து தமிழர் கூட்டமைப்பின் சார்பில் பேரணியாக வந்து பெரியார்திடலில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. பேரணி ல.கள்ளிப் பட்டியில் தொடங்கி கச்சேரிமேடு, எம்.ஜி.ஆர். சிலை, தினசரி மார்க்கெட் வீதி, கடைவீதி, பேருந்து நிலையம் வழியாக பெரியார் சிலை வந்தடைந்தது. பேரணியின் போது பெரியாரின் கொள்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், துண்டு பிரசுரங்கள் வினியோகித்தும், பெரியாரின் கொள்கைகளை ஒலிபெருக்கி மூலம் எடுத்துரைத்தும் பேரணியாக வந்தனர். முன்னதாக பேரணியை காந்திமன்றத் தலைவர் பச்சியப்பன் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் சீனிவாசன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இப்பேரணியில் அனைத்து அமைப்பைச் சார்ந்த தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மேட்டூரில் இரு சக்கர வாகனப் பேரணி

*17.09.2015* தந்தை பெரியார் 137ஆவது பிறந்த நாளன்று சேலம் மேற்கு மாவட்ட கழக சார்பில்



மேற்கு மாவட்டத் தலைவர் கு. சூரியகுமார் தலைமையில் செயலாளர் கோவிந்தராசு முன்னிலையில் குஞ்சாண்டியூர் கோனூர் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து தோழர்கள் கீழ்கண்ட ஊர்களுக்கு இரு சக்கர வாகனங்களில் ஊர்வலமாக சென்று கொடியேற்றினார்கள். தந்தை பெரியார் சிலைக்கு தோழர் சொக்கலிங்கம் மாலை அணிவித்தார். கொடியேற்றிய தோழர்கள் மற்றும் பகுதிகள். ஆசி பிளான்ட் - சக்திவேல், ராமன்நகர் - கொளத்தூர் குமார், சாம்பள்ளி - சொக்கலிங்கம், வைதீஸ்வரா - முரளி, என். எஸ்.கே. நகர் - சுகுமார், ஆர்.எஸ். படிப்பகம் - விவேக், கரி கையாளும் பகுதி- ராஜா, தங்கமாபுரி பட்டினம் - ராமச்சந்திரன், சேலம் கேம்ப் - விஜயகுமார், காந்தி நகர் - மார்ட்டின், காவேரி கிராஸ் - சுந்தரம், நாட்டாமங்கலம் - கதிரேசன், மாதையன் குட்டை- பழனிசாமி, காவேரிநகர்- பூவழகன், புதுக்காலனி - பிரகாஷ், சின்னபார்க் - பாஸ்கர், நேருநகர் - பிரகாஷ், கட்டபொம்மன் நகர் - அண்ணாதுரை, பாரதி நகர் - முத்துராசு, பொன்னகர்- கோவிந்தராசு, மருத்துவமனை - சித்துசாமி, குமரன் நகர் - அருள் மொழி, ஓர்க்சாப் கார்னர் - சீனிவாசன், மேட்டூர் படிப்பகம் - சதாசிவம், மூலக் கடை - அபிமன்யூ, காந்தி நகர் - பச்சியப்பன், காவலாண்டியூர் - சரகுவதி, செ.செ. காட்டுவளவு - பழனிசாமி, கண்ணாமூச்சி - காவை சசி, கொளத்தூர் பேருந்து நிலையம் - குமார், தெற்கு ராஜ வீதி - சம்பத் குமார், வால்குறிச்சி - அம்ஜத்கான், வடக்கு ராஜ வீதி - நல்லதம்பி, பெரிய கொட்டாய் - ராமமூர்த்தி, பூதப்பாடி - டைகர் பாலன், உக்கம்பருத்திக்காடு - செல்வம், தார்காடு - தர்மலிங்கம், இலக்கம்பட்டி - சக்திகுமார், நீதிபுரம் - வெங்கடேஷ், மல்லிகுந்தம் - அன்பழகன், மேச்சேரி - தமிழ் இளஞ் செழியன், நங்கவள்ளி கே.ஆர்.வி ஸ்பின்னிங் மில் - அருள்குமார், நங்கவள்ளி பேருந்து நிலையம் - கண்ணன், பனங்காடு - செந்தில்குமார். அனைத்து ஊர்களிலும் பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் துண்டறிக்கை வழங்கப்பட்டது. காவலாண் டியூர் படிப்பகத்தில் உணவு வழங்கப்பட்டது. காவல்துறையின் நெருக்கடி சூழ்நிலையிலும் அனைத்து ஊர்களுக்கும் பேரணியாக சென்று கொடியேற்றப்பட்டது.

### வீரபாண்டி பிரிவு : கழகக் கிளை திறப்பு

தந்தை பெரியாரின் 137- வது பிறந்த நாள் விழா கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கோவை புறநகர் மாவட்ட வீரபாண்டி




பிரிவில் கழகக் கிளை திறப்பு விழா வெள்ளமடை மோகன் முன்னிலையில் காளிபாளையம் கணேஷ் மற்றும் வீரபாண்டி பாபு முன்னிலையிலும் பெயர்ப் பலகையை பொருளாளர் துரைசாமி திறந்து வைத்தார். அறிவியல் மன்றம் பொறுப்பாளர் சிவகாமி கழகக் கொடியேற்றி வைத்தார்.

நிகழ்வில் திருப்பூர் மாவட்ட சார்பில் திருப்பூர் மாவட்ட செய லாளர் முகில்ராசு, அறிவியல் கோவை மாநகர மாவட்டத் தலைவர் திருமணி, மாவட்ட செயலாளர் நிர்மல்குமார், புறநகர் சார்பாக புறநகர் மாவட்டத் தலைவர் இராமசந்திரன், சூலூர் ஒன்றியப் பொறுப்பாளர் பன்னீர் செல்வம், மாநகரப் பொருளாளர் கிருட்டிணன், சமூக நீதி இயக்கம் சார்பாக வெள்ளமடை நாகராசு, மற்றும் கழகத் தோழர்கள் ராசாமணி, லோகு அன்னூர் முருகேசன், பிரபா கரன், விவேக், ராஜசேகர் மற்றும் வீரபாண்டி தோழர்கள் மற்றும் சமூக நீதி இயக்கம் சார்பாக வெள்ளமடை நாகராசும் கலந்து கொண்டனர்.

### இளம்பிள்ளையில் பரப்புரைக் கூட்டங்கள்

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக “எங்கள் தலைமுறைக்கு ஜாதிவேண்டாம் - எங்கள் சந்ததிக்கு வேலை வேண்டும்” தொடர் பரப்புரைக் கூட்டங்கள் மக்கள் ஆதரவோடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

முதலில் இரண்டு தெருமுனைக் கூட்டங்கள் மட்டும் நடத்துவதற்காக காவல் நிலையத்தில் அனுமதி கோரப்பட்டது. இதற்கு மகுடஞ்சாவடி காவல் ஆய்வாளர் அனுமதி மறுத்தும், ஒரு மாத காலத்திற்கு எந்த நிகழ்ச்சிகளுக்குமே அனுமதி இல்லை என்றும் கடிதம் கொடுத்தார். (ஆனால் அ.தி.மு.க சார்பாக நடைபெற்ற கூட்டத்திற்கு காவல்துறை பாதுகாப்பு வழங்கியது)



மாவட்ட கழக பொருப்பாளர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளரை சந்தித்து முறை யிட்டதைத் தொடர்ந்து, நாள் ஒன்றிற்கு ஒரு கூட்டம் வீதம் பத்து நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டு மீண்டும் காவல் நிலையத்தில் எழுதி கொடுக்கப் பட்டது. முதலில் மனுவை பெற மறுத்த உதவி ஆய்வாளர், உயர் அதிகாரிகளிடம் தொலைபேசியில் பேசிவிட்டு மனுவை பெற்றுக்கொண்டார். பின்னர் கூட்டங் களின் எண்ணிக்கையை அல்லது நாட்களை குறைத்து கொள்ளக் கூறினார். அதை ஏற்க மறுத்த தோழர்கள் தொடர்ந்து கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

செப்டம்பர் 11 ஆம் நாள் பெருமாகவுண்டம் பட்டி, 12 - கோழிப்பூர், 13 - ஊஞ்சக்காடு, 14 - மகுடஞ் சாவடி, 15 - அழகப்பம்பாளையம், செப்டம்பர் 18 - எட்டிக்குட்டைமேடு, 19 - காட்டூர், 20 - கே.கே.நகர் ஆகிய பகுதிகள் இதுவரை எட்டு கூட்டங்கள் நடந்து முடிந்துள்ளன; 21 - காடையாம் பட்டியிலும், 22 - சித்தர் கோவிலிலும் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு நாளும் மாலை 6-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை நடைபெறும் இக் கூட்டங்களில், புளியம்பட்டி இரமேசு ஜாதி ஒழிப்பு பாடல் பாட, தோழர்கள் தனசேகர், தங்கதுரை, மோகன்ராஜ், தப்பகுட்டை கோபிநாத், குமார், முருங்கப்பட்டி இரமேசு, லோகவர்மன் முதலானோர் சிற்றுரை ஆற்ற, கோகுல கண்ணன் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியை நடத்தி விளக்க உரை ஆற்றி வருகிறார். கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஒரு கூட்டத்தில் சிறப்புரை ஆற்றினார்.

அனைத்து கூட்டங்களிலும் தோழர்கள் மணிகண்டன், மோகன்ராஜ் ஆகியோர் ஒலி பெருக்கி அமைக்கும் பணியையும், முருங்கப்பட்டி இரமேசு, தங்கதுரை ஆகியோர் துண்டறிக்கை வினியோகம் செய்யும் பணியையும், விஜி பரப்புரை வாகனம் ஓட்டும் பணியையும் செய்து வருகிறார்கள். முத்து மாணிக்கம் மக்களோடு மக்களாக கலந்து நின்று அவர்கள் பேசும் கருத்துகளை அறிந்து வரு கிறார். கழக செயல்பாடுகள் சரியானது - நியாமானது என்ற கருத்தையே பெரும்பாலும் தெரிவிக்கிறார்கள்.

அனைத்து ஊர்களிலும் புதிய ஆதரவாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். அழகப்பம்பாளையம் என்ற ஊரில் மட்டும் ஒருவர் (குடிபோதையில்) எதிர்ப்பு தெரிவித்தார். ஆனாலும் அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அதே ஊரைச் சார்ந்த புதிய ஆதரவாளர்கள் அந்த பகுதியில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

**செய்தி : சி.மோகன்ராஜ்**

### “காட்டாறு” குறித்து ஓர் அறிவிப்பு

‘காட்டாறு’ எனும் மாத வெளியீடு குறித்து விளக்கங்கள் கேட்டும், விமர்சனங்கள் கூறியும் சில கடிதங்களும், கைபேசி அழைப்பு களும் கழகத் தலைமை நிலையத்துக்கும், பொறுப்பாளர்களுக்கும் வருகின்றன.

‘காட்டாறு’ இதழ் சில பெரியாரியல் சிந்தனை யாளர்களால் அவர்களது தனிப் பொறுப்பில் நடத்தப்படும் இதழே தவிர, திராவிடர் விடுதலைக் கழகத்தின் இதழ் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அவ்விதழைத் தொடர்பு கொள்ள விரும்பு வோர் அவ்விதழிலேயே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

DATE OF PUBLICATION 01.10.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## வெளிநாடு செல்ல விரும்பும் ஈழத் தமிழர்களிடம் அதிகாரிகளின் கெடுபிடிகளை தளர்த்துக!

# குடியுரிமை அதிகாரியிடம் கழக சார்பில் மனு

இலங்கை இராணுவத்தின் ஒடுக்கு முறைகளிலிருந்து தப்பித்து, ஈழத் தமிழர்கள், கடல் வழியாக படகுகள் வழியாக தாய்த் தமிழகம் நோக்கி அகதிகளாக வருகிறார்கள். படகுகளில் வர முடியாதவர்கள், சுற்றுலாப் பயணிகள் என்ற பெயரில் 'விசா' பெற்று விமானம் மூலம் அகதிகளாக வருகிறார்கள். இவர்களும் அகதிகளாக தமிழகம் நோக்கி வந்தவர்கள்தான். இவர்கள் தாய்நாட்டுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ திரும்பும்போது இந்தியாவில் அனுமதித்த காலத்தைவிட கூடுதலான காலம் தங்கியதற்காக விதிக்கப்படும் அபராதத் தொகை பல மடங்கு அதிகமாக்கப்பட்டுள்ளதால் அவர்கள் கடும் துயரத்துக்கு உள்ளாவதை சுட்டிக்காட்டி, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சென்னை சாஸ்திரி பவனிலுள்ள தலைமை குடியுரிமை அதிகாரியிடம் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் செப். 25 பகல் 11 மணியளவில் கோரிக்கை மனு அளிக்கப் பட்டது.

"கடந்த வருடத்திற்கு முன்பு வரை ஈழத் தமிழர்கள் தங்கள் தாயகத்திற்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ செல்ல வேண்டுமானால் விசாக் காலம் முடிந்து தங்கியிருக்கும் காலத்திற்கான அபராதத் தொகை மூன்று மாதத்திற்கு ரூ.100 மட்டுமே. ஆனால் தற்போது அபராதத் தொகை பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவருக்கு - முதல் 3 மாதங்கள் வரை கூடுதலாக தங்கினால் - ரூ.1,800; 3 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரை தங்கினால் - ரூ.7,800; 2 ஆண்டுகளுக்கு மேல் தங்கிவிட்டால் - ரூ. 13,800 அபராதமாக விதிக்கப்படுகிறது.

அதேபோல், விசா அபராதக் கட்டணமும் ஒவ்வொரு 3 மாதத்திற்கும் ரூ.900 என்ற வகையில் விதிக்கப் படுகிறது.

இதனால் ஒரு குடும்பத்தில் 4 பேர் இருந்தால் இலட்சக்கணக்கில் அபராதத் தொகை கட்ட வேண்டியிருக்கிறது. உயிர்பிழைக்க தாய்த் தமிழகம் நோக்கி அடைக்கலம் தேடி வந்த ஈழத் தமிழர்கள் மீது இப்படி சுமை ஏற்றுவது மனித நேயத்துக்கு எதிரானது. அதுபோலவே வெளிநாடு செல்ல விரும்புவோர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும் மேலும் கூடுதலாக்கப் பட்டுள்ளன.



விசா படிவம், காவல்துறை ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றாவணம், வீட்டு உரிமையாளரிடமிருந்து ஒரு கடிதம் - என்ற அளவோடு இருந்த நிலை இப்போது கடுமையாக்கப்பட்டு, அதிகாரிகள் தேவையற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார்கள்.

இணைய தளம் மூலமாக விசா மனு தாக்கல் செய்ய வேண்டும்.

வீட்டு உரிமையாளரின் சான்று.

இவர்தான் வீட்டு உரிமையாளர் என்பதற்கான முகவரிச் சான்று.

இவர்தான் வீட்டு உரிமையாளர் என்பதற்கான புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை சான்று.

வீட்டின் உரிமையாளரே தன் இமெயில் முகவரியில் இருந்து குடியுரிமை அலுவலகத்திற்கு தன் வீட்டில் தான் குடியிருக்கிறார் என்று தகவல் அனுப்ப வேண்டும். இது தவிர அந்த வீட்டில்தான் குடியிருக்கிறார் என்று வீட்டின் அருகிலுள்ள இரண்டு நபர்களின் சான்று.

பழைய கடவுச் சீட்டை ஒப்படைத்ததற்கான இலங்கை துணைத் தூதரகத்தின் சான்று (பழைய கடவுச் சீட்டை ஒப்படைத்த பிறகே புதிய கடவுச் சீட்டு வழங்கப்படுவதும் அதிலேயே அவர்கள் பழையதை ஒப்படைத்ததற்கான சான்று இருந்தாலும், தேவையில்லாமல் இது கேட்கப் படுகிறது).

இது தவிர வழக்குகள் ஏதுமில்லை என்பதற்கான காவல்துறை சான்று - என்று ஆவணங்கள் கேட்கப்படுகின்றன.

பொதுவாக காவல் நிலையத்தில் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் அல்லது வழக்கில்லா சான்றிதழே விசா நீடிப்பு செய்வதற்கும் புதிய விசா வழங்குவதற்கும் போதுமானது.

ஆனால் குடியுரிமை அலுவலக அதிகாரிகளோ தேவையில்லாமல் ஈழத் தமிழர்களை துன்புறுத்தி அலைக் கழிக்கும் நோக்கத்தில் இது போன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இந்தப் புதிய உத்தரவினால் ஈழத் தமிழர்கள் இங்கு மேலும் மேலும் இன்னலுக்குள்ளாவதுடன் இலங்கைக்கோ அல்லது வெளிநாட்டிற்கோ செல்லாமலும் எந்த வசதி வாய்ப்புகளும் இல்லாமலும் அவதிப்படுவதோடு மேற்படி குடியுரிமை அதிகாரிகள் கேட்கும் ஆவணங்களினால் வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீட்டில் குடியிருக்கும் ஈழத் தமிழர்களை வீட்டை விட்டு காலி செய்யும் நிலைமையும் ஏற்படுகிறது" - என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குடியுரிமை அதிகாரி மனுவில் அடங்கியுள்ள கருத்துகளை பொறுமையாகக் கேட்டு, கவனம் செலுத்துவதாகக் கூறினார். கழகப் பொதுச்செயலாளருடன் தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், அன்பு தனசேகரன், மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவா உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். நிகழ்வில் கழகத் தோழர்கள் ஏராளமாகப் பங்கேற்றனர்.

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

பாகத்தையும் சேர்த்து கமிஷனர் ராஜ்யமாக (Part C state) ஆக்கவோ கூடாதென்றும் இக் கமிட்டி வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(சி) பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் அவர்கள் நிர்வாக வசதிக்கு ஆக அமைத்துக் கொள்ளப்பட்ட ஜில்லா எல்லையில் தமிழ் பெரும்பான்மையாகப் பேசப்படும் பிரதேசத்தையும், தெலுங்கு பெரும்பான்மையாகப் பேசப்படும் பிரதேசத்தையும் ஒன்றாக ஒரே ஜில்லாவாக அமைத்திருந்தனர். சித்துார் ஜில்லாவில் திருத்தணி முதலிய பெரும்பாலாக தமிழ் பேசும் மக்களடங்கிய பிரதேசங்கள் இருப்பதனால் இப்போது மொழியை அடிப்படையாகக் கொண்ட நாடே பிரிக்கப்படுவதனால் ஒரு மொழி பேசும் நாட்டுடன் வேறு மொழி பேசும் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட பிரதேசம் சேர்க்கப்படுவதென்பது மொழிவாரி பிரிவினை தத்துவத்திற்கே எதிர்ப்பானது என்பதோடு வேறு மொழி பேசும் மக்களுக்கும் இடையூறானது. ஆதலால் இந்த மொழிவாரி நாடு பிரிவினையில் சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ் மொழி அதிகமாகப் பேசும் பிரதேசத்தைக் கண்டிப்பாகத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று இக் கமிட்டி தீர்மானிக்கிறது. ('விடுதலை' 12-1-1953)

1-2-53 ஆம் தேதி தமிழ் முஸ்லிம்கள் சார்பில் சென்னை கடற்கரையில் நடைபெற்ற "சென்னை தமிழருக்கே" என்ற சர்வக்கட்சி கூட்டத்தில் இலட்சகணக்கான மக்கள் மத்தியில் பேசிய பெரியார், "எங்களுடைய கொள்கைப்படி நாங்கள் பிரிவினை கேட்பது எல்லாம் இந்த மாதிரியான பிரிவினை அல்ல, நாடு பிரிய வேண்டும், எப்படிப்பட்ட பிரிவினை என்றால் பர்மா பிரிந்தது போல... அந்நியர் சுரண்டலற்ற தனி நாடு வேண்டும் என்பதுதான். ஆனால் பிரிய வேண்டுமென்பவர்களைச் சந்தோஷமாகப் பிரித்து அனுப்பிவிடுவோம். சுயநலக்காரர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பதைவிட வெளியே அனுப்பிவிடுவது நல்லது. மற்றபடி இரண்டு, மூன்று பிரச்சனைகள் சொல்லப்படுகின்றன; அதாவது ஆந்திரா ஐ கோர்ட், சர்க்கார் காரியாலயம், தலைநகர் முதலியவைகள் எல்லாம் சென்னையில் கொஞ்ச நாளைக்காவது இருக்க வேண்டும் என்கிறார்கள். எப்போது போகிறோம் என்று போகிறார்களோ, அவர்களுக்கு இங்கு என்ன வேலை ? ஒரு வீட்டில் பாகப்பிரிவினை எல்லாம் செய்யப்பட்ட பிறகு சமையல் மட்டும் கொஞ்ச நாளைக்கு இங்கே செய்து கொள்கிறேன் என்பது என்ன நியாயம் ?


அடுத்தபடியாக கமிஷனர் மாகாணமாக சென்னையை ஆக்கவேண்டும் என்று ஆந்திரர்கள் சொல்வதைப் பற்றிக் கூறவேண்டுமானால் மடத்தை விட்டுப் போகின்ற ஆண்டிக்கு நந்தவனத்தைப் பற்றி என்னக் கவலை. மற்றும் நஷ்ட ஈடு கேட்பது என்பதும் அப்படித்தான் நியாயமில்லாத கோரிக்கையாகும் என்று ஆந்திரர்களைக் கண்டித்துப் பேசினார். ('விடுதலை' 3-2-53)

சென்னை நகர மேயர் செங்கல்வராயன் முதலமைச்சர் இராசாசியைக் கலந்து ஆலோசித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். முதலமைச்சர் இராசாசி அக் கூட்டத்திற்குப் பெரியாரையும் அழைக்கும்படி கூறினார்.பெரியாருக்கு மட்டும்தான் நேரு பயப்படுவார் என்பது இராசாசிக்கு நன்கு தெரியும். அக்கூட்டத்திற்குப் பெரியாரை அழைக்க மேயர் செங்கல்வராயனும் ம.பொ.சியும் வந்தனர். பெரியார் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு இரண்டு இலட்சம் மக்களிடையே எழுச்சியுரை ஆற்றினார். ஆந்திரர்களின் அக்கிரமத்திற்கு முடிவுகட்ட ஒரு நாள் கடையடைப்பும் வேலைநிறுத்தமும் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்தார். அக்கூட்டத்தில் எம். பக்தவச்சலம், எ .என். கரையாளர், பி.டி. ராசன், மீனாம்பாள் சிவராஜ், ம.பொ.சி. உட்பட பலர் பேசினர். மேயர் நன்றி கூறினார். ('விடுதலை' 17-2-1953) வாஞ்சு அறிக்கை வெளிவருவதற்கு முன்பிருந்தே அதன் செய்திகள் கசிய ஆரம்பித்த காலம் முதலே 'விடுதலை'யில் அதன் ஆசிரியர் குத்தூசி குருசாமி மத்திய அரசைக் கண்டித்தும், ஆந்திரர்களைக் கண்டித்தும், வாஞ்சு அறிக்கையைக் கண்டித்தும் 7-1-1953 முதல் பல தலையங்கங்கள் எழுதியுள்ளார். (தொடரும்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 1st October 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | அக்டோபர் 08, 2015 | புரட்சி 14 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00


## கொளத்தூர் மணி குழந்தைக்கு சூட்டிய 'திப்பு சுல்தான்' பெயர்

தந்தை பெரியார் பிறந்தநாள் விழா ஒருங்கிணைப்புக் குழு சார்பில் காஞ்சிபுரத்தில் 17.09.2015 அன்று காஞ்சி மக்கள் மன்றத்தை சார்ந்த தோழர் பாலமுருகன் -உமா இணையரின் ஆண் குழந்தைக்கு பெயர் சூட்ட கழகத் தலைவர் கொளத்தூர்மணியிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் 'திப்பு சுல்தான்' என்று பெயர் சூட்டினார்.

அதைத் தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மனு சாஸ்திரம் சொல்லுகிறது பார்ப்பனர்களுக்கு மங்கலமான பெயர்களையும், சத்ரியர்களுக்கு வீரமான பெயர்களையும், வைசியர்களுக்கு பணத்தை, தனத்தை குறிக்கிற பெயர்களையும் சூத்திரர்களுக்கு இழிவான பெயர்களையும் வைக்கச் சொல்லி சொல்லுகிறது.

காலம் காலமாக குப்பனாய், பிச்சையாய், மண்ணாங்கட்டியாய் வாழ்ந்தவருக்கு மனுசாஸ்திரம் தடைகளுக்கு மாறாக பின்னாளில் பெரியார் புரட்சிகரப் பெயர்களை வைத்தார்.

புராணத்தின் பெயரால் ராமனை தூக்கி பிடிக்கிற இந்த சமுதாயத்தில் இயக்க தோழர்களுக்கு இராவணன் என்று பெயர் வைத்தார். பார்ப்பனியத்திற்கு எதிராக நின்ற புத்தரின் பெயரை சித்தார்த்தன் என்று பெயர் வைத்தார்.

சோவியத் புரட்சியின்போது இயக்க தோழர்களுக்கு (குழந்தைககளுக்கு) லெனின், ஸ்டாலின் என்றும், ஏன் மாஸ்கோ, ரஷ்யா என்று பெயர் உள்ளவர்களும் உண்டு. குத்தூசி குருசாமி மகளின் பெயரை இரஷ்யா என்று தான் வைத்தார்.

ஊரின் பெயரை சூட்டலாமா என்று கேட்ட போது பழனி என்றும், சிதம்பரம் என்றும், திருப்பதி வைத்திருக்கிற நீ என்னை கேட்கலாமா? என்று திருப்பிக் கேட்டு, இது புரட்சிகரமான ஊர் மாஸ்கோ என்றார் பெரியார். (பலத்த கைத்தட்டல்)

இப்போதைய காலகட்டத்தில் நாம் யார் பெயரை சூட்டுவது? சகிப்புத் தன்மை அற்றவர்களாக இஸ்லாமியர்களை கூறுகிறார்கள். இஸ்லாமிய மன்னர்களின் மதச்சார்பின்மையை பின்பற்றியவர்கள்; அனைத்து மதத்தையும் அரவணைத்துக் கொண்டவர்கள் உண்டு.

திப்புசுல்தான் – அனைத்து ஏகாதிபத்தியங்களுக்கும் எதிர்ப்பாக இருந்த மன்னன். பிரஞ்சு மன்னர் 14ஆம் லூயியிடம் அவர் நெருக்கமாக நட்பு கொண்டிருந்தார். ஆனாலும், மன்னராட்சி முறைக்கு எதிராக பிரஞ்சு புரட்சி நடந்தபோது மன்னரை எதிர்த்துப் போராடியவர்கள் தன்னிடம் அடைக்கலம் தேடி வந்தபோது அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தார்.

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம் நடக்கும் செய்தியை ஒரு பிரஞ்சு பத்திரிகை வழியாக அவர் படித்து அறிந்தார். உடனே போராட்டக்காரர்களுக்கு இங்கிருந்து நிதி உதவி செய்தார். பிரிட்டிஷ்காரர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து ஏகாதிபத்தியங்களுக்கும் நான் எதிரானவன் என்று அமெரிக்காவுக்கு கடிதம் எழுதினார்.

அந்த திப்புசுல்தான் பெயரை இந்தக் குழந்தைககு சூட்டுகிறேன்" என்றார் கொளத்தூர் மணி.

(படம் 4ஆம் பக்கம்)

### 'ஈழம் அமையும்' நூல் வெளியீட்டு நிகழ்வில் விடுதலை இராசேந்திரன் உரை

# அமெரிக்க–இந்திய துரோகங்களை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்?

ஊடகவியலாளர்கள் அய்யநாதன் எழுதிய 'ஈழம் அமையும்' நூல் வெளியீட்டு நிகழ்வும் கருத்தரங்கமும் அக்.2, 2015 அன்று சென்னை 'கவிக்கோ' அரங்கில் காலை முதல் இரவு வரை ஒரு நாள் நிகழ்வாக நடந்தது. காலை அமர்வில் அந்நூலை பழ. நெடுமாறன் வெளியிட, வைகோ பெற்றுக் கொண்டார். வழக்கறிஞர் பானுமதி, டி.எஸ்.எஸ். மணி, பேராசிரியர் இராமு மணிவண்ணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் அறிமுகவுரை நிகழ்த்தினர். இரண்டாம் கட்ட அமர்வாக பிற்பகல் 3 மணியளவில் "அய்.நா. மனித உரிமை மன்றத் தீர்மானம்: தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா?" என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரி எம்.ஜி. தேவசகாயம் தலைமையில் நடந்தது. நிகழ்வில் பங்கேற்று, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரை:



எனது நீண்டகால நண்பர் அய்யநாதன் மிகச் சிறந்த பத்திரிகையாளர். ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் உந்தப்பட்ட அவர், தனது பத்திரிகையாளர் பணியையும் உதறிவிட்டு, செயல்களத்துக்கு வந்தவர். தமிழ் ஈழப் போராட்டம் குறித்த வரலாறுகளை மட்டுமல்லாது, அந்த நிகழ்வுகளின் ஊடாக நடந்த அரசியல். இந்தியா-நார்வே-அமெரிக்கா இழைத்த துரோகங்களை மிகச் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார். உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாறுகள் குறித்து ஊடகவியலாளர்கள் பலரும் பதிவு செய்த வரலாறுகள்தான் உலக அளவில் பேசப்படுகின்றன. இந்த நூலும் அந்த வரிசையில் நிற்கும் சிறப்பைப் பெற்றிருக்கிறது.

அய்.நா.வில் அமெரிக்கா முன் மொழிந்து ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம். தமிழர்களுக்கு துரோகம் இழைத்து விட்டது என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. ஈழத் தமிழர்கள் இனியும் சிங்களர்களோடு இணைந்து வாழ முடியாது. தமிழ் ஈழம் ஒன்றே தீர்வு என்ற கருத்தில் நாம் உலகத் தமிழர்களும் உறுதியாக இருக்கிறோம். பன்னாட்டு விசாரணை - இனப்படுகொலை - பொது வாக்கெடுப்பு என்ற முழக்கங்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சர்வதேச சமூகம் இதை ஏற்கும் வரை அதற்கான போராட்டங்கள் கருத்துருவாக்கங்கள் அழுத்தங்களை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டேதான் இருக்க வேண்டும். இந்த இலட்சியத்தை நாம் எப்படி எட்டப் போகிறோம் ? இந்த முழக்கங்களை நாம் வலியுறுத்திக் கொண்டே இருந்தால் மட்டும் போதுமா ? இன்றைய சர்வதேச துரோகத்தை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பது குறித்து நாம் பரிசீலிக்க வேண்டும்.,

அமெரிக்காவில் உருவாக்கப்பட்டு இலங்கை அரசு முன்மொழிந்து, அய்.நா.வில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானம், போர்க் குற்றம் குறித்த விசாரணையை முன்மொழிகிறது. இலங்கையிலேயே இந்த விசாரணை நடக்கும். அந்நாட்டு நீதிபதிகளோடு காமன்வெல்த் நாடுகளின் நீதிபதிகள் வெளிநாட்டு சட்ட அறிஞர்கள். இந்த விசாரணையை நடத்து வார்கள் என்று தீர்மானம் கூறுகிறது. இந்தத் தீர்மானத்தை இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்கட்சியாக இருக்கும் தமிழ் தேசிய கூட்டணி வரவேற்றிருக்கிறது. எதிர் பார்த்ததுபோல் தீர்மானம் இல்லை என்றாலும், வரவேற்கத்தக்க அம்சங்களும் இடம் பெற்றுள்ளதாகக் கூறியிருக்கிறது. உண்மையில் ஈழத்தில் வாழும் தமிழர்களின் கருத்தாக இதை ஏற்க முடியாது. அங்கே உள்ள பிளாட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். உள்ளிட்ட 40 தமிழர் அமைப்புகள், அமெரிக்கத் தீர்மானம் துரோகமிழைத்துவிட்டது என்ற கருத்தையே வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களோடு வடக்கு மாகாண முதலமைச்சரும் இணைந்து நிற்கிறார். எனவே, தமிழ் தேசிய கூட்டணியின் கருத்து அங்கே வாழும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிரானது என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது.

அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக ஆயுதம் தாங்கி நடக்கும் ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம், அந்நாட்டின் விடுதலை அரசியல் பாதையை நோக்கி விரைவுபடுத்துவதுதான். ஆயுதப் போராட்டத்தினால் மட்டுமே அரசியல் நகர்வுகளை தவிர்த்து விட்டு, ஒரு நாட்டின் விடுதலையைப் பெற முடியும் என்பது மன்னர்கள் ஆட்சிக் காலத்தில்தான் சாத்தியமாக முடியும். நாம் மன்னர்கள் ஆட்சி காலத்தில் வாழவில்லை.

அதன் காரணமாகத்தான் தமிழ் ஈழ விடுதலைக்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், போராட்டக் காலங்களிலேயே அரசியல் நகர்வுகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கிறது. இந்த வரலாறுகளை தோழர் அய்யநாதன் இந்த நூலில் விரிவாகப் பதிவு செய்திருக்கிறார். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் அரசியல் நகர்வுகளை எப்படி நகர்த்தலாம் என்பதற்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், போராட்ட வரலாற்றிலேயே பதிவுகள் இருக்கின்றன. இன்று நாம் முன்னெடுக்க வேண்டிய அரசியல் நகர்வுகளுக்கு இவை வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன என்றே கருதலாம். சுருக்கமாக மூன்று நிகழ்வுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2002ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது, தமிழ் ஈழக் கோரிக்கைகளுக்கு மாற்றாக ஒரு திட்டத்தை முன் வைக்க சர்வதேச நாடுகள் வலியுறுத்தின. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச சட்ட நிபுணர்களே வியந்து பாராட்டும் ஒரு அரசியல் தீர்வை முன் வைத்தது. 'உள்ளக சுய நிர்ணய உரிமை' (Internal Self Determination) அப்போது போரினால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்வதற்கு தமிழன் பகுதிகளுக்கும், சிங்கள பகுதகளுக்கும் ஆண்டுக்கு ரூ.100 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி செய்ய அமெரிக்கா, ஜப்பான், நார்வே ஆகிய நாடுகள் முன் வந்தன. வாஷிங்டனில் கொடையாளர்கள் கூட்டம், 2003இல் நடக்க விருந்தது. அதுவரை இந்த சமரச நடவடிக்கைகளில் முற்றாக ஒதுக்கி நின்ற இந்தியா, இந்த கூட்டத்தில் பார்வையாளராக பங்கேற்க முன் வந்தது. அதற்கு தடைசெய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளை இந்தக் கூட்டத்துக்கு அழைக்கக் கூடாது என்று அமெரிக்காவை வலியுறுத்தியது. விடுதலைப் புலிகள் அரசியல் தீர்வுக்கு தயாராக இருப்பதை சர்வதேசத்துக்கு இதன் வழியாக உணர்த்தினார்கள்.

சுனாமி பேரழிவால் இலங்கையில் தமிழர்களும் சிங்களர்களும் கடும் உயிரிழப்புக்கும் பாதிப்புக்கும் உள்ளானபோது, விடுதலைப்புலிகள் இயக்கம் போரை நிறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகளில் இறங்கியது. மனித நேயத்துடன் பாதிக்கப்பட்ட சிங்களர்களுக்கும் விடுதலைப் புலிகள் உதவினார்கள். இலங்கை அரசோட கைகோர்த்து, மறுவாழ்வுப் பிணகளை மேற்கொள்ள புலிகள் இயக்கம் தயாராக இருந்தது. அதன் விளைவாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து 'சுனாமி மறு கட்டமைப்பு நிர்வாக அமைப்பு' ஒன்றை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. சுனாமி மறுவாழ்வுக்காக வெளிநாடுகள் நிதி உதவி செய்ய முன் வந்தன. இந்த நிதியைக் கையாள இதை எதிர்த்து சிங்கள வெறியர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து திட்டத்தை முடக்கினர். இந்த அரசியல் வெளிச்சத்தில் நாம் பிரச்சினைகளை அணுக நாம் முயற்சிக்க வேண்டும்.

இப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்த வேண்டிய பொறுப்பு, அய்.நா. மனித உரிமைக் குழுவுக்கு இருக்கிறது. ஏற்கெனவே அய்.நா. மனித உரிமைக் குழு அளித்த அறிக்கை ஈழத்துக்கு நேரடியாகச் சென்று மக்களை சந்தித்து உருவாக்கப்பட்டது அல்ல. அதற்கு இலங்கை அரசு மறுத்து விட்டது. இந்த நிலையில் அய்.நா. மனித உரிமைக் குழு தமிழ் ஈழப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துகளை காட்சிகளை பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நாம் வலியுறுத்த வேண்டும். அப்போது போர்க் குற்றங்கள், பாலுறவு வன்முறைகள், காணாமல் போனவர்கள் போன்ற குற்றங்கள் எல்லாமுமே தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டுமே நடந்திருக்கின்றன என்ற உண்மை வெளி வரும். ஒன்றை முக்கியமாக கவனிக்க வேண்டும். இப்போது அய்.நா.வின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் இலங்கையில் சிவில் சமூகத்தில் நடந்த குற்றங்கள் என்ற கண்ணோட்டத்திலேயே பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவே தவிர, தமிழர்கள் மீதான குற்றங்களாக பதிவாக வில்லை.

இலங்கையின் சிவில் சமூகத்தில் போர்க் குற்றங்கள் நடந்ததாகவே சித்தரிக்கப்படும் சூழ்ச்சிகளை முறியடிக்க அது தமிழர்கள் மீதான போர்க் குற்றங்கள் என்று உண்மைகள்

( 2ஆம் பக்கம்)

# இடஒதுக்கீடு கொள்கை : மறு பரிசீலனை தேவையா?

## சங்பரிவாரங்கள் எழுப்பும் வாதங்களுக்கு மறுப்பு

இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று ஆங்கில ஊடகங்கள் ஒரே குரலில் கூக்குரலிட்டு வரும் நிலையில் அதற்கு மறுப்பாக இடஒதுக்கீட்டுக் கொள்கை தொடர வேண்டும் என்று வலியுறுத்தி கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேட்டுக்கு (செப். 30, 2015) எழுதிய கட்டுரை இது. இடஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள் அதன் இலக்கை எட்டுவதற்கு முன்பே ஒழிக்க வேண்டும் என்று கருத்துகளை உருவாக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்றும், பல ஆண்டுகாலமாக பின்பற்றப்பட்டு வரும் இடஒதுக்கீடு கொள்கைதான் தமிழகத்தை இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக உயர்த்தியிருக்கிறது என்றும் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. குறி பார்க்கும் முன்பே துப்பாக்கிக் குண்டு முந்திக் கொண்டு பாய்வது போன்றதே இடஒதுக்கீடு எதிர்ப்பாளர்கள் கருத்து உள்ளது என்பதுபோல், "Anti-quota call jumps the gun" என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு இக்கட்டுரைக்கு தலைப்பிட்டுள்ளது.




விடுதலை இராசேந்திரன் கட்டுரையின் தமிழ் வடிவம்:

"எங்களுக்கும் இடஒதுக்கீடு வேண்டும்; இல்லையேல் இடஒதுக்கீடு எவருக்குமே இருக்கக் கூடாது" என்று பெரும் பணக்கார சமூகமான பட்டேல்கள் போராடியதைத் தொடர்ந்து இடஒதுக்கீடு கொள்கைகளை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அறைகூவல் விடுத்துள்ளார். அண்மையில் தமிழகம் வந்த பா.ஜ.க. தலைவர் அமீத்ஷா, தேவேந்திர குல வேளாளர்கள், தங்களை இடஒதுக்கீடுப் பட்டியலிலிருந்து நீக்கிக் கொள்ள விரும்புவதாக, தமிழக மக்களிடம் கூறினார். அவ்வளவுதான், இந்த அறிவிப்புகள் ஆங்கில ஊடகங்கள் இடஒதுக்கீட்டுக்கு எதிராக ஒரே குரலில் ஒலிக்க கிளம்பிவிட்டன. தேசம் நோய் பீடித்துள்ளதற்கு ஒரே காரணம், இந்த இடஒதுக்கீடு கொள்கைதான் என்ற ஒரே கருத்தை திரும்பத் திரும்ப இந்த ஊடகங்கள் பதிவு செய்கின்றன.

ஆர்.எஸ்.எஸ். தலைவரானாலும், பா.ஜ.க. தலைவரானாலும், போராட்டத்தால் சீர்குலைவுகளை உருவாக்கி வரும் பட்டேல் சமூகமானாலும் இடஒதுக்கீட்டுக்கு எதிராகப் பேசுகிறவர்கள் அனைவருக்குமே இந்த கொள்கை பற்றிய வரலாற்றுப் பார்வையில்லை; இடஒதுக்கீடு எந்த நோக்கத்துக்காக வழங்கப்பட்டது என்ற அடிப்படைப் புரிதலும் இல்லாமல், அதன் நோக்கத்தையே திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், இடஒதுக்கீடு கொள்கை - தமிழ் மண்ணில் பூத்த ஒரு முற்போக்குக் கொள்கை. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற இலட்சிய நோக்கத்தை நோக்கி, தமிழ்நாட்டின் மதிப்பு மிக்க தலைவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு கொள்கை.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு, பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே 1854ஆம் ஆண்டே தொடங்கி வைக்கப்பட்டது. தங்கள் நிர்வாகத்தின் கீழுள்ள பதவிகளை அனைத்து முக்கிய ஜாதிகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சி ஒரு நிலையான ஆணையை (எண்.128-27) பிறப்பித்தது. அதைத் தொடர்ந்து, அதிகாரத்துக்கு வந்த சென்னை மாகாண ஆட்சி, அரசு வேலைகளில் ஒதுக்கீடுகளை செய்து ஆணை பிறப்பித்தது. இதன்படி 44 சதவீதம் பார்ப்பனரல்லாதார்; 16 தவீதம் பார்ப்பனர்; 16 சதவீதம் முஸ்லீம்; 16 சதவீதம் ஆங்கிலோ இந்தியர் மற்றும் கிறிஸ்தவர்கள்; 8 சதவீதம் பட்டியல் இனப் பிரிவினர் (தலித்) என ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த ஆணை செயலாக்கம் பெறாமல், 1927ஆம் ஆண்டு வரை காகிதத்தில் மட்டுமே முடங்கிக் கிடந்தது. 1927ஆம் ஆண்டில்தான் முதன்முறையாக 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' என்று அழைக்கப்பட்ட வேலை வாய்ப்புக்கான இடஒதுக்கீடு முதன்முதலாக பத்திரப் பதிவுத் துறையில் மட்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. பின்னர் இந்த ஆணையில் பல மாற்றங்கள் நடந்தன. வேலை வாய்ப்பு மட்டுமல்லாது, கல்வி நிலையங்களிலும் இடஒதுக்கீடுகள் கொண்டு வரப்பட்டன. 1951ஆம் ஆண்டில் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை செல்லாது என்று நீதிமன்றம் அறிவித்தது. தமிழ்நாட்டில் பெரியார் தலைமையில் மூண்டெழுந்த மக்கள் கிளர்ச்சியில் மத்திய அரசு முதன்முதலாக சட்டத்தைத் திருத்தும் நிலைக்கு தள்ளப்பட்டது. இந்த சட்டத்திருத்தமே இடஒதுக்கீடு கொள்கையை உறுதிப்படுத்தியது.

அனைத்து அரசு உத்தியோகங்களையும் ஒரே சமூகத்தினர் தங்கள் வசப்படுத்திக் கொண்டிருந்த நிலையில் தான், இதை மாற்றி அமைக்க பிரிட்டிஷ் ஆட்சி அனைத்து முதன்மை ஜாதியினருக்கும் வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கருதியதன் விளைவே இடஒதுக்கீடு கொள்கை. ஏறத்தாழ அதே காலகட்டத்தில் மைசூர் மகாராஜாவும் இந்த கொள்கையின் அவசியத்தை உணர்ந்தார்.

இப்போதும்கூட, ஆர்.எஸ்.எஸ். தலைவர் விரும்புவதுபோல், இடஒதுக்கீடு கொள்கையை நேர்மையாக மறுபரிசீலனை செய்தால், அப்போதிருந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைக்கும் பெரிய மாற்றங்கள் இன்னும் வந்து சேரவில்லை என்பதை உணர முடியும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனப் பிரிவினர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, அரசு அலுவலகங்களிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் எட்டிப் பிடிக்கவில்லை என்ற உண்மையை அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களே உறுதிப்படுத்துகின்றன. வேண்டுமானால், தமிழ்நாடு போன்ற ஒரு சில மாநிலங்களில் கீழ் மட்ட, இடை நிலை அரசு வேலைகளில் புறக்கணிக்கப்பட்ட மக்கள் ஓரளவு வேலை வாய்ப்புகளை பெற்றிருக்கலாம்.

ஆனால் பெரும்பாலான மாநிலங்களில் இடஒதுக்கீடு கொள்கை மிக மிக மோசமான அளவில்தான் பின்பற்றப்படுகின்றன. 50 ஆண்டுகாலத்துக்கும் மேலாக பட்டியல் இனப் பிரிவினர், பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு அமுல்படுத்தப்பட்டு வந்தாலும், 'குரூப் ஏ' பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 15 சதவீத இடஒதுக்கீட்டைக்கூட முழுமையாக எட்டிப் பிடிக்கவில்லை. இதேபோல் பழங்குடியினருக்கான 7.5 சதவீத இடங்களை முழுமையாக நிரப்பவில்லை.

பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில் 1993 செப்டம்பரிலிருந்தும் மத்திய கல்வி நிறுவனங்களில் 2009-லிருந்தும்தான் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், மக்கள் தொகையில் சுமார் 60 சதவீதமுள்ள பிற்படுத்தப்பட்டோர் மத்திய அரசின் 'குரூப் ஏ' பிரிவில் இடம் பெற்றிருப்பது வெறும் 8 சதவீதம் மட்டும்தான். பொதுத் துறையாக செயல்படும் தேசிய மய வங்கிகளில் 474 பொது மேலாளர் பதவிகள் இருக்கின்றன. இதில் ஒருவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் கிடையாது. பல மத்திய அமைச்சகத் துறைகளில் பிற்படுத்தப்பட்டவர்கள் - 'குரூப் ஏ' பதவிகளில் ஒருவர்கூட இல்லை. இவை எல்லாம் மத்திய அரசு வெளியிட்ட அதிகாரபூர்வ தகவல்கள்.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு கொள்கை தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது என்பது மட்டுமல்ல, இடஒதுக்கீட்டின் பயன் முழுமையாக அனைத்து பிரிவினருக்கும் சென்றடைய பல்வேறு பிரிவினரையும் அதிகாரமயப்படுத்தும் நோக்கத்தோடு மாற்றங்களுக்கும் உட்பட்டு வந்திருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளுக்குள்ளேயே அவர்களோடு சமமாக போட்டியிட முடியாமல், ஒதுங்கி நிற்போருக்கு, வழி திறந்து விடவும், அவர்களுக்கான இடங்களை உறுதி செய்யவும், அதிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவு தனியே பிரித்தெடுக்கப்பட்டது. அதே பார்வையில், அருந்ததியினருக்கும் மைனாரிட்டிகளுக்கும் தனித்தனியாக ஒதுக்கீடுகள் பிரித்து வழங்கப்பட்டு வருகிறது.

இப்போது தமிழ்நாட்டில் படித்து முன்னேறிய பிரிவினர், இடஒதுக்கீட்டுக்கு எதிராக கிளம்பியிருக்கிறார்கள். இந்த இடஒதுக்கீட்டுக்கு எதிரான "தேசிய அறிவு ஜீவி"களின் அணியில் ஒரு தலைமுறையாக இடஒதுக்கீட்டின் பயனைப் பெற்று சமூக, பொருளாதார கலாச்சார நிலைகளில் தங்களை மேம்படுத்திக் கொண்ட சிலரும் சேர்ந்து கொண்டு, இடஒதுக்கீட்டை எதிர்க்கப் புறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பதில் தொடங்கி, பிறகு அதை ஒழித்துவிட வேண்டும் என்ற இடஒதுக்கீடு எதிர்ப்பாளர்களின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல், அவர்கள் முன்வைக்கும் 'மாய்மால'க் கருத்துகளில் மயங்கிப் போய் பேசுகிறார்கள். எந்தப் பிரச்சினையானாலும் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கான கருத்து இருப்பது அவர்களுக்கான உரிமை; அதேபோல இடஒதுக்கீட்டின் பயன்களை அனுபவித்தவர்கள் அதற்காக வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆம், இடஒதுக்கீடு முற்போக்கானது, அந்தக் கொள்கை தேவையானதே என்பதை தலைநிமிர்ந்து உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையின் சமூகத் தேவையை மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியும். அது மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் சமவாய்ப்புகளை உருவாக்கும் இலட்சியத்தை அடையும் காலம் வரை இந்த கொள்கை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதையும், இதுவே அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களின் நோக்கம் என்பதையும் வலியுறுத்திக் கூற முடியும்.

இடஒதுக்கீட்டுக் கொள்கையில் வழிகாட்டும் முன்னோடி மாநிலம் தமிழ்நாடு. இந்தக் கொள்கையின் பயன் இன்னும் சமூகத்தின் கீழ் மட்டத்தில் வாழும் பிரிவினருக்கும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் வாழ்வோருக்குச் சென்று அடையும் வரை, கல்வி, வேலை வாய்ப்புகளில் தமிழ்நாடு இடஒதுக்கீட்டை ஒருபோதும் கைவிட முடியாது. தமிழ்நாட்டின் கடந்கால வளர்ச்சிக்கு இடஒதுக்கீடு கொள்கை முக்கிய பங்காற்றியிருக்கிறது. வளர்ச்சிக்கான இந்தக் கொள்கையின் பங்களிப்பு - தொடர்ந்திருக்க வேண்டும்., தமிழக அரசியல் கட்சிகளுக்கு இந்த உண்மை நன்றாகவே புரியும். சொல்லப் போனால், பா.ஜ.க.வும், இதற்கு விதி விலக்கு அல்ல; இந்த நிலையில் இடஒதுக்கீட்டை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். கருத்தை தமிழக பா.ஜ.க. ஆதரிக்கிறதா ? எதிர்க்கிறதா ? என்று தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

### 'ஈழம் அமையும்' நூல் வெளியீட்டு நிகழ்வில் விடுதலை இராசேந்திரன் உரை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அம்பலமாகும்போதுதான் தேசிய இனப் பிரச்சினையாக இது மாற்றப்படும். கடந்த முறை அமெரிக்கா அய்.நா.வில் கொண்டு வந்த தீர்மானத்தின்போதுகூட தமிழர்களை 'மத மைனாரிட்டிகள்' என்று மிகுந்த எச்சரிக்கையுடன் கூறியது.

வீர மரணமடைந்த விடுதலைப் புலிகள் தளபதி கிட்டுவிடம் ஒரு அயல்நாட்டுக்காரர் தமிழ் ஈழத்தின் எல்லை எது என்று கேட்டபோது, கிட்டு ஒரு வரைபடத்தை எடுத்துப் போட்டார். அதில் சிங்கள விமானங்கள் குண்டு வீசிய பகுதிகளை மட்டும் எடுத்துக்காட்டி, இதுவே தமிழீழத்தின் பிரதேசம் என்று பதிலளித்தார்.

அதேபோல், 13ஆவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பேசி வரும் மோடி ஆட்சியை நோக்கி நாம் போராட வேண்டிய முக்கிய கோரிக்கை இருக்கிறது. 13ஆவது சட்டத் திருத்தத்தின்படி முதலில் வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைப்பதற்கு இலங்கை அரசை வற்புறுத்து - என்று நாம் போராட வேண்டும்.

இப்போது அமைக்கப்பட இருக்கும் விசாரணை மன்றத்தில் மனித உரிமைக் களத்தில் போராடிக் கொண்டிருக்கும் சர்வதேச சட்ட நிபுணர்களை பங்கேற்பாளர்களாக கண்காணிப்பாளர் களாக நியமிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை தர வேண்டும். இவைகளுக்கான போராட்டக் களங்களை முன்னெடுக்க வேண்டும். சிங்களப் பேரினவாதம் இதற்கு செவி சாய்க்காத நிலையில் சிங்களப் பேரினவாதத்தின் உண்மையான முகம் அம்பலமாகும். அதற்கு தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை பொது மக்கள் வாக்கெடுப்பு - பன்னாட்டு விசாரணை என்ற இலட்சியத்தை இடைவிடாது வலியுறுத்திக் கொண்டே அதை நோக்கி முன்னேறிச் செல்ல தற்போது சர்வதேசம் வழங்கியுள்ள வாய்ப்புகளை ஆயுதங்களாக மாற்றி, முன்னெடுப்பதே இன்று நம்முன் உள்ள கடமை என்று கருதுகிறோம்.

### கழகத் தோழர் எலத்தூர் செல்வக்குமார் மகன் திலீபன் படத் திறப்பு

கழகத் தோழர் எலத்தூர் செல்வக் குமார் மகன் எஸ். திலீபன் படதிறப்பு (30.08.2015) அன்று நடைபெற்றது.

இராம. இளங்கோவன் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அறிவியல் மன்றத்தின் சார்பில் ஆசை தம்பி மாலை அணிவித்தார். மற்றும் ரமேஷ், அழகிரி, செல்வன், இராஜேந்திரன் மாவட்ட செயலாளர் வேணு கோபால் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

# பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா? (2)

**வாலாசா வல்லவன்**

*பெரியாருக்கு எதிராக அவ்வப்போது சில வரலாற்றுப் புரட்டர்கள் புறப்படுவதும், பதிலடி கிடைத்தவுடன் பதுங்குவதும் வாடிக்கையாகி விட்டது. ‘குணா’வின் வாரிசாக கிளம்பியுள்ள ஒருவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலுக்கு இது ஒரு மறுப்பு.* (சென்ற இதழ் தொடர்ச்சி)

“மேயர் தமது சொந்தப் பொறுப்பில் 16.3.53 அன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டம் நடத்த முயன்றார். பெரியார் ஈ.வெ. ராவையும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்குமாறு ராஜாஜி கூறினார்.

நான் அவர்தான் சென்னை ஆந்திராவுக்குப் போனாலும் தமிழ் நாட்டிலிருந்தாலும் திராவிடத்தில் தானே இருக்கப் போகிறது என்று சொல்லிவிட்டாரே ! தமிழ்நாட்டில் தான் இருக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு அவர் வருவாரா ?” என்றேன். இந்தக் கூட்டத்தில் நாயக்கர் பேசுவதை நான் விரும்புகிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள் அவர் வருவார் என்று சொன்னார். (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 623) இது எவ்வளவு பெரிய வரலாற்றுப் பொய். திராவிடர் கழக மத்தியச் செயற்குழு 11.1.1953இல் சென்னை தமிழகத்திற்கே சொந்தம் தற்காலிகத் தலை நகராகக் கூட ஆந்திராவிற்குக் கொடுக்கக்கூடாது என்று கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும். 1.2.53இல் சென்னை கடற்கரையில் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் சென்னையில் ஆந்திரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்று கண்டித்துப் பேசிய பிறகும் 16.3.53 கூட்டத்திற்கு அழைக்க வந்த ம.பொ.சி இராஜாஜியிடம் கூறியதாக ‘எனது போராட்டம்’ என்ற நூலில் எழுதியுள்ளது எவ்வளவு பெரிய வரலாற்று மோசடி. உண்மையில் ம.பொ.சியின் குருநாதர் இராஜாஜி தான் சென்னை ஆந்திரர்களின் தற்காலிகத் தலைநகராக இருக்கவேண்டும் என்று விரும்பினார். இதோ ம.பொ.சியே கூறுகிறார். “மாநாகராட்சியின் சிறப்புக்கூட்டம் நடைபெற இருக்கும் செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்ததும் மேயரையும் என்னையும் ராஜாஜி தமது இல்லத்திற்கு அழைத்துப் பேசினார்”. ஆந்திர அரசுக்குத் தற்காலிமாகக் கூட சென்னையில் இடம் தரக்கூடாது என்ற வாசகத்தை நீக்கிவிடுமாறு மேயரையும் என்னையும் ராஜாஜி கேட்டுக் கொண்டார். மேயர் அவர்கள் வெகு சுலபத்தில் அதற்கு இணங்கிவிட்டார். நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன். நிபந்தனை எதுவும் இல்லாமலே ஆந்திர அரசுக்கு சென்னையில் இடம் தரத் தமிழ்நாடு காங்கிர தலைவரும் தயாராக இருப்பதை நான் அறிவேன். (ம.பொ.சி. எனது போராட்டம் பக் 632) சென்னையில் ஆந்திராவுக்கு தற்காலிகமாகக் கூட தலைநகரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது என்று சொன்ன பெரியாரைத் துரோகி என்பதும், ஆந்திரத் தலைநகர் தற்காலிகமாகச் சென்னையில் இருக்க வேண்டும் என்று சொன்ன இராஜாஜியைத் தலைவர் என்பதும் இராஜாஜியைத் தமிழ்ப் பார்ப்பனர் என்பதும் வேண்டுமென்றே பெரியார் அவரை எதிர்க்கிறார் என்பதும் எவ்வளவு பெரிய வரலாற்று மோசடி என்பதை இதன்மூலம் அறியலாம்.

15.2.53 சென்னை மாவட்ட திராவிடர் கழக செயற்குழு 22.2.53 அன்று சென்னைக்கு வரும் குடிஅரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்குக் கருப்புக் கொடி காட்டத் தீர்மானித்தது. (விடுதலை 16.2.53) அன்றே திராவிடர் கழக மத்திய செயற்குழு கூடி இந்தியக் குடிஅரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் சென்னைக்கு வரும் அன்றே “தமிழக உரிமைப் பாதுகாப்பு நாள்” தமிழகமெங்கும் கொண்டாடும்படி தீர்மானம் நிறைவேற்றியது (விடுதலை 16.2.53)

திட்டமிட்டபடி இராசேந்திர பிரசாத்துக்குக் குத்தூசி குருசாமி தலைமையில் ஆயிரக்கணக்கானத் தொண்டர்கள் கருப்புக் கொடி காட்டினர். காவல் துறையினரின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலால் சில தி.க. தோழர்களுக்கு மண்டையும் உடைந்தது.

22.2.53 அன்று வாஞ்சு அறிக்கைக் கண்டன நாள் தி.க. தோழர்களால் தமிழகம் முழுவதும் கடைப் பிடிக்கப்பட்டது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு கருதாமல் புதுதில்லியில் 1953 மார்ச் 23 பிரதமர் நேருவைச் சந்தித்து, ஆந்திரத்தின் தற்காலிகத் தலைநகரமோ, உயர்நீதி மன்றமோ சென்னையில் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தினர். (விடுதலை 4-3-53)

இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகுதான் நேரு ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என்றார்.

**தெற்கெல்லைப்போராட்டத்தைப் பற்றி சுருக்கமாகப் பார்க்கலாம்.**

இந்தியாவில் உள்ள மாநிலங்களை மொழிவழியாகப் பிரித்து அமைக்க நேருவின் தலைமையிலான இந்திய அரசு நீதிபதி பசல் அலி தலைமையிலான குழுவை 29.12.53இல் அமைத்தது. அக்குழுவில் கே.எம். பணிக்கர் என்ற மலையாளியும் குன்சுரு என்ற உ.பி.காரரும் உறுப்பினர்களாக இருந்தனர். அக்குழு 30.9.1955இல் தங்கள் பரிந்துரையை இந்திய அரசுக்கு அளித்தது. 267பக்க அறிக்கையில் பக்81 முதல் பக்89 வரை தமிழகத்தைப் பற்றியது.

அக்குழுதான் தேவிகுளம், பீர்மேடு உள்ளிட்ட 4 தாலுக்காக்களைக் கேரளாவுக்குக் கொடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தது. மார்ஷல் நேசமணி தலைமையில் 1946 முதலே திருவாங்கூர், கொச்சி பகுதியில் உள்ள தமிழ்ப்பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடி வந்தனர். இந்த அறிக்கை வெளிவந்தவுடன் அவர்களுடைய போராட்டமும் அதிகரித்தது. தமிழகமும் கொந்தளித்து எழுந்தது. 10.7.54 முதலே விடுதலையில் திருவாங்கூர் தமிழர் கிளர்ச்சிக்கு ஆதரவான தலையகங்கள் எழுதப்பட்டு வந்தது.

21.11.1955 முதல் 24.11.1955 வரை தமிழகச் சட்டமன்றத்தில் இந்த குழுவின் அறிக்கை மீது விவாதம் நடைபெற்றது. மலையாளிகளும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினரும் தவிர எல்லோருமே தேவிகுளம் பீர்மேடு தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று பேசினர், தமிழக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்குச் சொந்தம் என்பதை ஆதாரங்களுடன் விளக்கினார். இறுதி நாளில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்குச் சேரவேண்டுமென்ற தீர்மானத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும் அதற்கு எதிராக 18 வாக்குகளும் கிடைத்தன. பின்னாளில் உச்சநீதி மன்ற நீதிபதியாக இருந்த வி.ஆர். கிருஷ்ணய்யர் (CPI) உள்பட எதிர்த்து வாக்களித்தனர். தமிழகப் பொதுவுடைமைக்கட்சி உறுப்பினர்கள். ப. ஜீவானந்தம், ரு. இராமமூர்த்தி, கல்யாண சுந்தரம் உட்பட 13 சட்டமன்ற உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்தனர். தீர்மானம் தமிழ்நாட்டுக்கு ஆதரவாக நிறைவேறியது.

தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தை ஆதரித்து விடுதலையில் தலையங்கம் எழுதினார் குத்தூசி குருசாமி (விடுதலை 25.11.1955) நேரு, பசல் அலி குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைத்தார். 16.12.1953 முதல் 23.12.53 வரை விவாதம் நடைபெற்றது. நேசமணியும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் எவ்வளவோ எடுத்துக்கூறியும் நேரு தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தைப் புறக்கணித்துத் தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்.

தமிழக முதல்வரையும், நிதிஅமைச்சர் சி.சுப்பிரமணியத்தையும் டெல்லிக்கு அழைத்துத் தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்குச் சொந்தம் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

தமிழக சட்டமன்றத்தில் சி.சுப்பிரமணியம் தேவிகுளம், பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று மசோதா கொண்டுவந்தார். 28.3.56 முதல் 31.3.56 வரை நடைபெற்ற விவாதத்தில் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் விவாதத்தில் பங்கேற்கக் கூடாது என்று கொறடா உத்தரவைப் பிறப்பித்து, இது மேலிட உத்தரவு இதைமீற முடியாது என்று கூறித் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கும் விடாமலே நிறைவேற்றினார். அப்போதுதான் முதலைமைச்சர் குளமாவது மேடாவது என்று சட்டமன்றத்திலேயே பேசினார்.

உண்மையான தமிழர்களின் எதிரி நேருவே என்பதை உணர்ந்த பெரியார் மலையாளிகளைத் தமிழகத்தை விட்டு வெளியேறும் படியான கிளர்ச்சி செய்யாத வரையில் தில்லி பணியாது என்று மதுரைப் பொதுக்கூட்டத்தில் அறிவித்தார். (விடுதலை 18.1.56)

‘தில்லி அநீதிக்கு மேல் அநீதி தேவிகுளம் பீர்மேடு தாய்த் தமிழகத்திலிருந்து துண்டிக்கப்படுகின்றன’ என்று 17.1.56 அன்று விடுதலையில் தலையங்கம் எழுதப்பட்டது. 15.2.56 அன்று மன்னார் குடியில் பொதுக்கூட்டத்தில் பேசிய பெரியார் பார்ப்பான், வடநாட்டான், மலையாளி போன்ற அந்நியனெவனும் வெளியேற்றப்பட வேண்டியவனே. மலையாளிகளைத் தமிழ் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டாமா என்று ஆவேசப்பட்டார். (விடுதலை 16.2.56) ஆக தமிழகம் தன் மண்ணை இழந்தது. திராவிடம் பேசியதாலா (அ) இந்தியம் பேசியதாலா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ‘தமிழரசுக் கழகம்’ என்ற பெயரில் போலிக் கட்சி வைத்துக் கொண்டு நேருதான் என் தலைவர், காந்திதான் என் தலைவர், சத்தியமூர்த்திதான் என் தலைவர் இராஜாஜிதான் என் தலைவர் என்று கூறி இந்தியத் தேசியத்திற்குக் காவடி தூக்கிய ம.பொ.சி தான் தமிழினத்துரோகி. தி.மு.கவும், வடக்கு எல்லை தெற்கு எல்லைப் போராட்டங்களில் தீவிரமாக பங்கெடுத்து கொண்டது.

ம.பொ.சி வட எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் மீது பொய்யையும், புளுகையும் அவிழ்த்துவிட்டதைப் போலவே தெற்கெல்லைப் போராட்டத்திலும் மிகப்பெரிய பொய்யை அவிழ்த்து விட்டார்.

**“பெரியார் ஈ.வெ.ரா எப்போதும் எதிலும் ஒரு தனிப்போக்கோடு நடந்து கொள்ளக்கூடியவரல்லவா ? பசல் அலி கமிஷன் பரிந்துரையிலும் தமது வழக்கப்படித்தான் அவர் நடந்துகொண்டார். திருச்சியிலுள்ள தமது மாளிகையில் ‘தினத்தந்தி’ (தேதி கொடுக்கப்படவில்லை) நிருபர்க்கு அளித்த சிறப்புப் பேட்டியில் “தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, கொச்சி, சித்தூர் ஆகிய பகுதிகள் பற்றி எனக்குக் கவலை இல்லை. மலையாளத்துடன் அவைகளைச் சேர்க்க வேண்டியதுதான். சமீபத்தில் சர்தார் பணிக்கர் வந்திருந்தார். அவரை நான் சந்தித்துப் பேசினேன். தொழிலுக்காகத் தமிழர்கள் அங்கு (தேவிகுளம், பீர்மேடு) வந்தார்களே ஒழிய நிலம் மலையாளத்தைதான் சேர்ந்தது என்று பணிக்கர் சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டேன்” (எனது போராட்டம் பக் 758) தினத்தந்திக்குக் குத்தூசி குருசாமி வைத்த பெயரே (டெய்லிடூப்) என்பதாகும். ம.பொ.சியும், தினத்தந்தி ஆதித்தனும் வேண்டுமென்றே பெரியாரின் மீது அவதூறுகளைப் பரப்பி வந்தனர்.**

ஆதித்தனார் 1952-57 வரை பிரஜா சோஷலி டு கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அக்கட்சியின் கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணுப்பிள்ளை 11 தமிழர்களைச் சுட்டுக் கொன்றார். அக்கட்சி கொச்சி சட்டசபையில் தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்கே சொந்தம் என்று கூறியபோதும் தினத்தந்தி ஆதித்தன் அக்கட்சியின் செயல்பாடுகளை எதிர்க்கவில்லை. ம.பொ.சியைப் போன்றே பெரியார் மீது ஏதாவது பொய் சொல்லிக் கொண்டிருப்பது அவரது வாடிக்கை. பெரியாருக்கென்று விடுதலை நாளேடு இருக்கிறது. எங்காவது தேவிகுளம், பீர்மேடு மலையாளிக்கு சொந்தம் என்று இருக்கிறதா என்று யாராவது காட்ட முடியுமா ?

1956 முதல் பெரியார் மறையும் வரை “தமிழ்நாடு தமிழருக்கே” என்று முழங்கி வந்தார். இவரா தமிழினப் பகைவர், தமிழினத்துரோகி ?

# நேபாளத்தை இந்து நாடாகவே நீடிக்க சங்பரிவாரங்களின் திரைமறைவு சதிகள்

*நேபாளம், ‘இந்து’ அடையாளத்தை ஒழிக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து, மோடி ஆட்சி, ‘இந்து’ நாடாகவே நீடிக்க திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்டது. இது பற்றி ஏற்கெனவே ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தலையங்கம் தீட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இது குறித்து மேலும் சில செய்திகள்:*

நேபாள அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதை வரவேற்பதில் இந்தியா முதலாவதாக இருந்திருக்க வேண்டும். மாறாக, மோடி அரசாங்கம் ஓர் எதிர்மறை அணுகுமுறையை பின்பற்றி இருக்கிறது. ஒரு தேவையற்ற தலையீடும் நிலைப்பாட்டையும் எடுத்திருக்கிறது. அரசியல் நிர்ணய சபையில் அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இரு நாட்களுக்குப்பின் மோடி அரசாங்கம் தன் அயல்துறை செயலாளர் ஜெய்சங்கரை, குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் பெரிய அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, அரசமைப்புச் சட்டம் முறையாகப் பிரகடனம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருக்கிற செப்டம்பர் 20 அன்று அவ்வாறு நடைபெறாமல் நிறுத்துவதற்காக காத்மண்டுக்கு அனுப்பியது. நேபாளத்தின் இறையாண்மை விஷயங்களில் மிகவும் கேடுகெட்ட முறையில் தலையிடுவதற்கு அது கூறும் காரணம், இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிற அரசமைப்புச் சட்டம் மாதேஷி மக்களுக்குப் போதுமான அளவிற்கு பங்களிப்பினைச் செய்திடவில்லை என்றும், அதன் விளைவாக மாதேஷி மக்கள் மத்தியில் ஓர் ஆழமான அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது என்பதுமாகும். அரசமைப்புச் சட்டம் முறையாகப் பிரகடனம் செய்யப்பட்டதற்குப் பின்னர், இந்திய அயல்துறை அமைச்சகம் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில், அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் மற்றும் வன்முறை குறித்து கவலை தெரிவித்திருக்கிறது. இதற்கு அடுத்து இரு நாட்களில் இந்திய அரசின் சார்பில் இரு அறிக்கைகள் வெளியாகி இருக்கின்றன. அவற்றில் டெராய் மண்டல நிலைமைகள் குறித்து கவலை தெரிவித்திருப்பதுடன், அரசமைப்புச் சட்டத்தைப் பொறுத்து மாதேஷி மக்களின் கவலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறது. நேபாளத்திலுள்ள இந்தியத் தூதர் கலந்தாலோசனைகள் செய்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறார். நேபாளம் குறித்து, இந்திய ஆட்சியாளர்கள் ஒரு பெரிய அண்ணன் அணுகுமுறையை அடிக்கடி கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.


வரைவு அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளில் ஒன்று, நேபாள அரசை ஒரு மதச்சார்பற்ற அரசு என்று வரையறுத்திருப்பதாகும். நேபாளத்தில் சில பிரிவினர் இதனைக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள்.

**( 4ஆம் பக்கம்)**

DATE OF PUBLICATION 08.10.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பெரியார் விழா : காஞ்சி மாநகர் குலுங்கியது

*செப்.17 அன்று காஞ்சியில் பெரியார் பிறந்த நாள் ஒருங்கிணைப்புக் குழு, பெரியார் பிறந்த நாள் விழா பேரணியையும், பொதுக் கூட்டத்தையும் எழுச்சியுடன் நடத்தியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். காஞ்சி மாநகரையே கலக்கிய பேரணி-பொதுக் கூட்டக் காட்சிகள்.*










## மயிலைப் பகுதி கழகம் எடுத்த கால்பந்து போட்டி – பெரியார் பிறந்த நாள் விழா

**த**ந்தை பெரியாரின் 137ஆவது பிறந்த நாள் விழா மயிலை கழகம் சார்பாக 27.9.2015 அன்று காலை 10 மணியளவில் செயின்ட் மேரீஸ் சாலையிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் 3ஆம் ஆண்டு கால்பந்து போட்டி நடைபெற்றது. போட்டியை ஜெ. அன்பழகன் (சட்ட மன்ற உறுப்பினர் தி.மு.க.) துவக்கி வைத்தார். போட்டியில் 16 அணிகள் பங்கேற்றன. இதனைத் தொடர்ந்து 28.92015 அன்று மாலை 6 மணிக்கு பெரியார் பிறந்த நாள் பொதுக்கூட்டம் மந்தைவெளி செயின்ட் மேரிஸ் பார்க் அருகே நடைபெற்றது. ஆ. சிவா தலைமை வகிக்க, ஆ. பார்த்திபன், சி. பிரவீன் முன்னிலையில் இரா. மாரி முத்து வரவேற்புரையாற்ற சம்பூகன் குழு வினரின் இசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

நா. நாத்திகன், ஆனந்தகுமார், கோவை இசைமதி ஆகியோர் ஜாதி ஒழிப்பு பெண்ணுரிமைப் பாடல்களைப் பாடினர். கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, திரைப்பட இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் உரையாற்றினர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர். நிகழ்வின் முடிவில் கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு சிறப்புக் கோப்பைகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

நாராயணன், இந்திரகுமார் நடுவராக இருந்து போட்டிகளை நடத்தினர். மாவட்ட செயலாளர் உமாபதி நிகழ்ச்சிகளை ஒருங் கிணைத்தார். பரணி நன்றி கூறினார். கழகத் தோழர்கள் அனைவருக்கும் மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் சிறப்பான மாட்டுக்கறி உணவை வழங்கினர்.




(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*மன்னர் ஆதரவு இராஷ்ட்ரிய பிரஜாதந்திர கட்சியும் மற்றும் பல்வேறு இந்துத்துவா குழுக்களும் நேபாளம் முழுவதும், நேபாளத்தை இந்து நாடாக அறிவிக்க வேண்டும் என்று கோரி கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் இக்கோரிக்கையை நிராகரித்துவிட்டனர்.*

*நேபாளத்தை இந்து இராஷ்ட்ரமாக அறிவிக்க வேண்டும் என்று நேபாளத்திற்குள் செயல்பட்டு வரும் சக்திகளுக்கு இந்தியாவில் உள்ள ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் இந்துத்துவா சக்திகள் அனைத்தும் அனைத்து விதமான உதவிகளையும் செய்தன. பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. வைத்தியநாதத், நேபாளத்தை இந்து இராஷ்ட்ரமாக அறிவிக்க வேண்டும் என்று நேபாளக் குடியரசுத் தலைவருக்கும், அரசியல் நிர்ணய சபையின் தலைவருக்கும் கடிதங்கள் எழுதி இருந்தார்.*


*முன்னதாக, மத்திய உள் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங், பா.ஜ.க. தலைவர் என்ற முறையில் 2010 மார்ச்சில் மறைந்த பிரதமர் ஜி.பி.கொய்ராலாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக நேபாளத்திற்குச் சென்றிருந்தார். அந்த சமயத்தில் அவர், “உலகிலேயே நேபாளம் மட்டுமே இந்து இராஜ்ஜியமாக இருந்ததில் நாங்கள் மிகவும் பெருமிதம் கொண்டிருந்தோம். நேபாளம் மீண்டும் இந்து அரசாக மாறும் எனில் நாங்கள் மிகவும் மகிழ்வோம்” (ஐஏஎன்எஸ், மார்ச் 22, 2010) என்று பேசியிருந்தார். நேபாளத்தில் இந்து இராஷ்ட்ரம் அமைய வேண்டும் என்று நடைபெற்று வரும் பிரச்சாரங்களில் பங்கேற்பதற்காக இந்தியாவில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்துத்துவா அமைப்புகளின் சாதுக்களும் தலைவர்களும் இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர்.*

*நேபாளம் இந்து நாடாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டதும், நேபாளம் ஒரு மதச்சார்பற்ற குடியரசாகத் திகழும் என்று கூறியிருப்பதும்தான் இந்தியாவில் இயங்கும் இந்துத்துவா சக்திகளை ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கிறது. பா.ஜ.க.வும் இதனை வெளிப்படையாகக் காட்ட முடியாவிட்டாலும், இந்தக் கோபத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறது. மோடி அரசாங்கத்தால் எதிர்மறையான நிலைப்பாடு எடுக்கப்பட்டிருப்பதற்கு அநேகமாக இதுதான் காரணமாகும்.*

**(‘பீப்பிள்ஸ் டெமாகரசி’ தலையங்கத்தின் சில பகுதிகள்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 8th October 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | அக்டோபர் 15, 2015 | புரட்சி 14 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00


## ‘அவாள்’ ஏடே கூறுகிறது: ஆன்மிகம் பிழைப்புவாதமாகிவிட்டது

பெரியாரியலாளர்கள் ஜோதிடமும் ஆன்மிகமும் பிழைப்புவாதம் என்று சொன்னால், இந்துக்களைப் புண்படுத்துவதாக எதிர்ப்பார்கள். ஆனால், ‘துக்ளக்’ பார்ப்பன ஏடே அப்படிச் சொல்கிறது.

அந்த ஏடு வெளியிட்டுள்ள கட்டுரை:

ஒரு நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்னால் இத்தனை பரிகார ஸ்தலங்களைத் தேடி தமிழர்கள் அலைந்ததில்லை. ஏதோ அவரவர் ஊர்களிலுள்ள சிவன் கோவில், பெருமாள் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதோடு தங்கள் வழிபாட்டையும், பிரார்த்தனைகளையும் முடித்துக் கொண்டார்கள். ஆனால், இன்று தமிழர்கள், குரு பரிகார ஸ்தலம், சனிப் ப்ரீதி ஸ்தலம், ராகு ப்ரீதி ஸ்தலம் என்று ஏதேதோ ஊர்களுக்குக் கும்பல் கும்பலாகப் படையெடுக்கிறார்கள்.

ஏன் இந்த சனி, குரு, ராகு–கேது இத்யாதிகளுக்கான பரிகார பூஜைகளை, வழிபாடுகளை அவரவர் ஊரிலுள்ள சிவன் கோவில் நவகிரகங்களுக்குச் செய்தால் போதாதா என்று இன்று யாரும் யோசிப் பதில்லை. இவர்களை இப்படிப் பரிகாரங்களுக்காக ஊர் ஊராக அலைய விட்டதற்கு, இந்த ஜோதிட சிகாமணிகளும், பத்திரிகைகளும்தான் காரணம். அந்தக் காலத்தில் திருப்பதிக்கேகூட இவ்வளவு பேர் சென்றதில்லை. இந்த ஜோதிடர்களும், ஆன்மிகப் பத்திரிகைகளும்தான் தமிழனை அந்தப் பரிகாரம் செய், அந்த ஊருக்குப் போ, இந்த ஊருக்குப் போ என்று பிரச்சாரம் செய்து விரட்டுகின்றனர். நடைபாதைக் கோவில்கள் பெருத்துக் கிடக்கிறமாதிரி, தமிழ்நாட்டில் ஜோதிடர்களும், ஆன்மிகப் பத்திரிகைகளும் பல்கிப் பெருத்துக் கிடக்கின்றன.

1960களில் ‘மாத ஜோதிடம்’ என்ற ஒரேயொரு ஜோதிடப் பத்திரிகைதான் வந்தது. ஆன்மிகத்துக்கென்று இன்று குவிந்து கிடக்கிற மாதிரி, ஆன்மிகப் பத்திரிகைகள் அந்தக் காலத்தில் இல்லை. கல்கியிலும் ஆனந்த விகடனிலும் கோவில்களைப் பற்றி தொ.மு. பாஸ்கரத் தொண்டமானும், பரணிதரனும் கட்டுரைகள் எழுதுவதோடு ஆன்மிகப் பகுதி முடிந்து விடும். ஆனால், இன்று பல பாரம்பரியமான தினசரிகள்கூட பக்கம் பக்கமாக ஜோதிடப் பகுதிகளை வெளியிடுகின்றன. ஜோதிடத்திற்கும், ஆன்மிகத்திற்கும் தனித்தனியே ஏகப்பட்ட பத்திரிகைகள் கடைகளில் தொங்குகின்றன.

இவற்றையெல்லாம் படித்துவிட்டுத் தமிழன் சும்மா இருப்பானா? தன் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய, தன் ஊரிலுள்ள தெய்வங்களையும், கோவில்களையும் விட்டு விட்டு, திருநள்ளாறு, ஆலங்குடி, குச்சனூர்... என்று ஊர் ஊராகத் திரிகிறான். தன் கைப் பணத்தைச் செலவு செய்வது போதாதென்று கடன் வாங்கியும் செலவு செய்து இந்தப் பரிகார ஸ்தலங்களைத் தேடித் தேடிப் போகிறான்.

அந்தக் காலத்தில் ஹிந்துக்கள் வீட்டில் யாருக்காவது மனநிலை சரியில்லை என்றால், சக்கரத்தாழ்வாரை வேண்டிக் கொள்வதோடு பிரார்த்தனை முடிந்துவிடும். ஆனால், இன்றைய தமிழன் குணசீலம் கோயில் எங்கே, ஏர்வாடி தர்ஹா எங்கே என்று தேடிப் போய் பணத்தைச் செலவு செய்து, மேலும் மேலும் கஷ்டத்தை வரவழைத்துக் கொள்கிறான். மனநலனைச் சரி செய்ய அருமையான மனநல மருத்துவர்களும், மனநல மருந்துகளும் இருக்கும்போது, இன்றும் பேய் விரட்டுகிறேன், குறி கேட்கிறேன் என்று அலைகிற தமிழனின் மடத்தனத்தை என்ன சொல்வது?

நமது அரசியல் சட்டத்திலேயே அறிவியல் சார்ந்த அணுகுமுறை வேண்டும்(51(ஏ)8) என்று சொல்லியிருக்கிறது. ஆனால், கடவுளின் பேரைச் சொல்லி, மனிதர்களை மீள முடியாத குருட்டு நம்பிக்கைகளில் தள்ளி விடுகிற ஜோதிடர்களையும், ஆன்மிகப் பத்திரிகைகளையும் யார் தடுப்பது?

சரி, அவர்கள்தான் பிழைப்புக்காக ஜோதிடம், ஆன்மிகம் என்ற பேரில் ஏதேதோ எழுதுகிறார்கள். விற்பனை செய்கிறார்கள். அவற்றைப் படித்துவிட்டு இந்தத் தமிழர்கள் ஏன் புத்தி பேதலித்துப் போய்த் திரிய வேண்டும்? அதுதான் தமிழனின், தமிழ்ச் சமூகத்தின் விசேஷ குணம். யார் என்ன சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடும் சமூகம் இந்தத் தமிழ்ச் சமூகம். ‘திராவிட நாடு வாங்கித் தருகிறேன், ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி போடுகிறேன்’ என்று சொன்னதை நம்பியது தானே இந்தத் தமிழ்ச் சமூகம்? இன்றும் அது ஜோதிடர்களும், ஆன்மிகப் பத்திரிகைகளும் சொல்வதை நம்பிக் கெண்டு அலைகிறது.

**(‘துக்ளக்’ 30.9.2015 இதழில் ‘நம்பிக் கெட்டவர்கள் தமிழர்கள்’ என்ற தலைப்பில் ‘துர்வாசர்’ எழுதியது)**

## சென்னை மாநகர காவல்துறை ராஜாவை விஞ்சிய ராஜவிசுவாசியா?

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை

பூணூலை அறுத்ததாக குண்டர் சட்டத்தில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டவர்களை நீதிமன்றம் விடுவித்தது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் தந்தைபெரியார் படத்தைக் கொளுத்தியும் ஆபாசமாக பேசியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றம், வீதி மன்றத்தை நாடும் திராவிடர் கழகம்!

சென்னையில் பூணூல் அறுத்ததாகக் கூறி திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த ஆறு பேர்களைக் குண்டர் சட்டத்தின்கீழ் அடைத்தது செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது வரவேற்கத்தக்கது; அதே நேரத்தில் மத்திய–மாநில அரசுகளால் கவுரவிக்கப்பட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் படத்தை எரித்தும், ஆபாசமாகப் பேசியும் செயல்பட்ட பா.ஜ.க.வின் முக்கிய பிரமுகர் மீதும், அவரைச் சார்ந்தவர் மீதும், புகார் செய்தும், சென்னை மாநகர காவல் துறை ஆணையர் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

உடனடியாக எடுக்காவிட்டால் நீதிமன்றத்தையும், வீதி மன்றத்தையும் அணுகி திராவிடர் கழகம் செயல்படும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, 10.10.2015 அன்று விடுத்துள்ளஅறிக்கை வருமாறு:

சென்னையில் மயிலாப்பூர் உள்ளிட்ட இடங்களில் நடந்து சென்றவர்களின் பூணூலை அறுத்ததாகக் கூறி 6 பேர்களை குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்க மாநகர காவல் ஆணையர் பிறப்பித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் 7.10.2015 ரத்து செய்து தீர்ப்பளித்துள்ளது. சென்னையில் மயிலாப்பூர், மேற்கு மாம்பலம், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் கடந்த ஏப்ரல் 20 ஆம் தேதி சாலையில் நடந்து சென்றவர்களின் பூணூலை அறுத்ததாக திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த சிலர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்குகளில் கைதான இராவணன், திவாகர், கோபிநாத், பிரதீப், நந்தகுமார் ஆகியவர்களான 6 பேரை குண்டர் - தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க சென்னை மாநகரக் காவல் ஆணையர் மே 13ஆம் தேதி (2015) உத்தரவிட்டார்.

இதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற்கண்ட 6 பேர் சார்பில் வழக்குத் தொடரப் பட்டது.

### குண்டர் சட்டம் செல்லாது – நீதிபதிகள் பிறப்பித்த நியாய தீர்ப்பு!

நீதிபதிகள் எஸ். தமிழ்வாணன், சி.டி. செல்வம் ஆகியோர் கொண்ட அமர்வு, விசாரித்து பிறப்பித்த உத்தரவு வருமாறு:

1. கைதுக்கான சம்மன், கைது குறித்த தகவல், சிறையில் அடைப்பதற்கான நகல்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதுமுறையற்றது.
2. சட்ட, நடைமுறைகளைப் பின்பற்றாமலும் அவர்களை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்கள் வழக்கமான குற்றவாளிகள் என்பதற்கான ஆவணங்களும், குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைப்பதற்கான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.
3. குண்டர் சட்டத்தில் சிறையில் அடைப்பதற்கான உத்தரவு தாமதமாகவும் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

எனவே, மனுதாரர்கள் 6 பேரையும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைத்திட சென்னை மாநகரக் காவல் ஆணையர் பிறப்பித்த உத்தரவு ரத்து (Quash) செய்யப்படுகிறது என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது!

இது ஓர்ந்து கண்ணோடாது தேர்ந்து முழுக்க முழுக்க சட்ட விதிகளின் அடிப்படையில் தரப்பட்ட நியாயத் தீர்ப்பு - நல்லதீர்ப்பு! வரவேற்கத்தக்கது.

### வன்முறை மீது கழகத்திற்கு நம்பிக்கை இல்லை

ஏப்ரல் முதல் இத்தீர்ப்பு நாள் வரை இவர்கள்மீது இ.பி.கோ. பிரிவின் கீழும் மற்ற சட்ட விதிகளின் கீழும் போடப்பட்ட வழக்கு அப்படியே நிலுவையில்இருக்கும்.

அவர்கள் ஜாமீனில் வந்தோ, சிறையில் இருந்தோ வழக்குகளை நடத்தும் வாய்ப்பும், உரிமையும் பெற்றுள்ளனர்!

வன்முறை, தனிமனித தாக்குதல் - இவைகளை என்றும் நமது இயக்கம் ஆதரிக்காது என்பது உலகம் அறிந்த நடைமுறை. இவர்கள்தான் குற்றவாளிகளா என்பது இனி வழக்கு விசாரணையில் முடிவு ஆக வேண்டிய ஒன்று.

### பூணூல் அறுப்பு நடந்தது ஏன்?

என்றாலும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் - பூணூல்அறுப்புகள் - ஏற்படும் சூழ்நிலை ஏன் உருவாகியது என்பதை, நோய்நாடி நோய்முதல் நாடும் வகையில் நடுநிலையாளர்களும், நீதிக்குத் தலைவணங்குவோரும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் காவல்துறையினரும் உணர வேண்டாமா?

ஒரு தொலைக்காட்சியில் தாலி பற்றிய விவாதமே நடைபெறக் கூடாது என்று அவர்களை வன்முறை மூலம் மிரட்டியதும், மாட்டிறைச்சி உண்ணக்கூடாது என்று கூறுவதும் உண்ணும் (அடிப்படை) உரிமையைப் பறிப்பதாகாதா? மனித உரிமைகளைப் பறிக்கும் செயல் இது அல்லவா? அறவழியில் அரங்குக்குள் பெரியார் திடலில் நடத்தவிருந்த நிகழ்ச்சியை எதிர்த்து இந்துத்துவ பார்ப்பனீய அமைப்புகளும், அவர்களின் எடுபிடிகளும் நடத்திய வன்முறை வெறியாட்டம் ஒரு புறம்; பொறுப்பாளராக ஒரு பா.ஜ.க. பார்ப்பனப் பேர் வழியும், அவ்வமைப்பின் அகில இந்திய செயலாளரும்; அவரது ஆதரவாளர்களும் தந்தை பெரியார் படத்தை எரித்தனரே அசிங்கப்படுத்தினரே! தாலியை அகற்றிக் கொண்ட பெண்களைப்பற்றி பொதுமேடையில் வள்ளுவர் கோட்டம் அருகில் - காவல்துறையினர் முன் அனுமதியோடும், சாட்சியோடும் ஆபாசமாகப் பேசியதால் ஏற்பட்ட ஆத்திரம் திசைமாறிச் சென்றது grave and sudden Provocation என்பது சட்டச் சொல்லாகும்! இது தானே இது?

### பெரியாரைஅவமதித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

அவர்கள்மீது இன்றுவரை - சென்னை நகரக் காவல் ஆணையரிடம் புகார்களை பல அமைப்புகள் கொடுத்தும் இதுவரை அந்தப் புகார்கள் ஊறுகாய் ஜாடியில் தானே கிடக்கின்றன!

அதன் எதிர்வினையாகத்தானே ஆத்திரப்பட்ட வர்கள் யாரோ பூணூலை அறுத்தனர்? அதை நாம் நியாயப்படுத்திக் கூறவில்லை. அதன் மீது உடனடியாக சம்பந்தப்பட்ட ஹிந்துத்துவ வாதிகள்மீது காவல்துறை நடவடிக்கை

(2ஆம் பக்கம்)

# மாபெரும் சிக்கலில் ஊழல்மிகு கூடங்குளம் அணுமின் நிலையம்

## சுப. உதயகுமார்

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அலகிலுள்ள நீராவி தயாரிப்பான் சரியாக வேலை செய்யவில்லை எனத் தெரிகிறது. இது ரஷ்யாவிலுள்ள மோசடி நிறுவனமான சியோ பொடால்ஸ்க் எனும் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் கொள்முதல் இயக்குனர் செர்கே ஷுட்டோவ் தரமற்ற எஃகினை வாங்கி உதிரிப்பாகங்கள் தயாரித்த ஊழல் குற்றச்சாட்டுக்களால் 2012ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப் பட்டார். இந்திய மக்களிடம் உண்மையைச் சொல்லி நம்மை பாதுகாப்பதற்கு பதிலாக, வருடாந்திர பராமரிப்பு, எரிகோல்கள் மாற்றம் என்று என்னென்னவோ கதைகளை யார் யாரையெல்லாமோ வைத்து சொல்லிக் கொண்டிருக்கிறது அணுசக்தித் துறை.

கூடங்குளம் அணுஉலை அக்டோபர் 22, 2013 அன்று மின்தொகுப்பில் இணைக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. பின்னர் டிசம்பர் 31, 2014 அன்று வணிக ரீதியிலான மின்உற்பத்தி துவங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மே 31, 2015 வரையிலான 586 நாட்களில் அணுஉலை 226 நாட்கள் ஓடவில்லை. மொத்தம் 64 நாட்கள் அணுஉலை பராமரிப்புக்காக மூடப்பட்டது. டர்பைனில் ஏற்பட்ட பழுதை நீக்குவதற்காகவும், டர்பைனை மாற்றுவதற்காகவும் உலை 72 நாட்கள் அடைத்து வைக்கப்பட்டது. மேலும் 15 முறை அணுஉலை தடைபட்டு மொத்தம் 90 நாட்கள் மூடிவைக்கப்பட வேண்டியதாயிற்று.

இந்தாண்டு ஜனவரி 1 முதல் மே 31 வரை, அணுஉலை இரண்டு முறை பலவந்தமாக மூடப்பட்டது. பொங்கலன்று (ஜனவரி 14, 2015) மூடப்பட்ட உலை நான்கு நாட்கள் செயலிழந்து கிடந்தது. ஏப்ரல் 2 முதல் முனகிக்கொண்டிருந்த அணுஉலை மே 9 அன்று மாலை 6:30 மணிக்கு மீண்டும் பலவந்தமாக நிறுத்தப்பட்டது. பின்னர் மே 14 அன்று அதிகாலை 4:47 மணிக்கு மீண்டும் ஓடத் துவங்கியது. அன்றிலிருந்து அணுஉலை வெறும் 55 விழுக்காடு மின்சாரம் மட்டுமே தயாரிப்பதாக சொல்கிறார்கள். இந்த நிலையில் மே 19 அன்று அணுசக்தித் துறை செயலாளர் முதல் அணுஉலையின் டர்பைன் பாகங்கள் சில புதிதாக தயாரிக்கப்பட்டு வருவதாக அறிவித்தார். கூடங்குளம் அணுமின் நிர்வாகத்தினர் மீண்டும் ஏராளமான டீசல் வாங்கத் துவங்கினர்.

மே 21, 2015 அன்று கூடங்குளம் அணுமின் நிலைய வளாக இயக்குனர் அணுஉலை வெறும் 600 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்வதாகவும், அணுஉலை வருடாந்திர பராமரிப்புக்காக இரண்டு மாதங்கள் மூடப்படும் என்றும் அறிவித்தார். அதன்படி யூன் 24, 2015 அன்று அணுஉலை நிறுத்தப்பட்டது. இந்நிலையில் ஆகஸ்ட் 12 அன்று அணுஉலையில் எரிகோல்களை அகற்றும் பணி முடியாததால், மின் உற்பத்தி மேலும் ஒரு மாதம் தாமதமாகும் என்று அறிவித்தார் வளாக இயக்குனர். மிக முக்கியமான அந்த வேலையைக்கூட இவர்களால் முன்கூட்டியே சிந்தித்துப் பார்க்கவோ, செயல்திட்டம் வகுத்துப் பணியாற்றவோ முடியவில்லை. கடுகளவும் பொறுப்பின்றி சிறுபிள்ளைத்தனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் கூடங்குளம் அதிகாரிகள்.

தற்போது திடீரென ரஷ்யாவிலிருந்து ஆறு பேர் கொண்ட குழு கூடங்குளம் வந்து பரிசோதனைகள் நடத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். நீராவி தயாரிப்பான் சரியாக வேலை செய்யவில்லை; கூடங்குளம் திட்டத்தில் மிகப் பெரும் ஊழல்கள் நடந்திருக்கின்றன; இந்தத் திட்டத்தை பாதியில் போட்டுவிட்டு ஓடிய திரு. எஸ்.கே. ஜெயின், திரு. காசிநாத் பாலாஜி போன்ற அதிகாரிகளுக்கும், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், அவரது சக அமைச்சர் நாராயணசாமி போன்ற காங்கிரசு அரசியல்வாதிகளுக்கும் இந்த ஊழல்கள் பற்றித் தெரியும் எனும் உண்மை களை மக்களிடம் சொல்ல வேண்டியதுதானே? உலக நாடுகளுக் கெல்லாம் ஓடி ஓடி போய்க்கொண்டிருக்கும் நமது பிரதமர் கூடங்குளத்துக்கு வருகைதந்து முதல் அணுஉலையை நாட்டுக்கு இன்னும் அர்ப்பணிக்கவில்லையே ஏன்?

காங்கிரசுக் கட்சியின், மன்மோகன் சிங் அரசின் மெகா கூடங்குளம் ஊழலை பாரதிய ஜனதா அரசு மறைக்க முயல்வதேன்? நாடாளுமன்றத் தேர்தல் நடந்து கொண்டிருந்தபோது மன்மோகன் சிங் அரசு 3, 4 அணுஉலைகளுக்கு ரூ. 45,000 கோடி என விலை நிர்ணயித்து அவசரம் அவசரமாக ஒப்பந்தம் கையெழுத்திட்டு ரஷ்யர்களை மகிழ்வித்தது ஏன்? கூடங்குளத்தில் இரண்டாவது அணுமின் நிலையத்தில் 96 விழுக்காடு வேலைகள் முடிந்துவிட்ட நிலையில் 2014 யூன் மாதம் மின் உற்பத்தி துவங்கும் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்று வரை அங்கே எதுவும் நடந்தபாடில்லையே, ஏன்?

கூடங்குளம் அணுமின் திட்டம் எனும் மாபெரும் ஆபத்திலிருந்து தமிழர்களை காக்க வேண்டிய அ.தி.மு.க. அரசு மவுனம் காக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மின்சாரத் துறையில் மாபெரும் புரட்சி நடத்திருப்பதாகவும், ராமநாதபுரம் மாவட்டத்தில் 4000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் அனல்மின் நிலையங்களும், சில்லஹல்லாவில் 2000 மெகாவாட் உற்பத்தி செய்யும் நீர் மின் நிலையமும், வடசென்னை அனல் மின் நிலையத்தில் 800 மெகாவாட் நிலையமும், உப்பூரில் இரண்டு 800 மெகாவாட் அனல்மின் நிலையங்களும், உடன்குடியில் இரண்டு 660 மெகாவாட் அனல் மின் நிலையங்களும், எண்ணூரில் கூடுதலாக ஒரு 660 மெகாவாட் அனல்மின் நிலையமும் அமைக்கப்படவிருப்பதாகவும் முதல்வர் தெரிவித்திருக்கிறார். சூரியஒளி மூலம் 648 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க அதானி குழுமத்தோடு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்களாம். அப்படியானால் கூடங்குளம், கல்பாக்கம் போன்ற இடங்களில் ஏன் கூடுதலாக அணுஉலைகள் கட்ட அனுமதிக்கிறீர்கள்? இந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் இன்னொரு பெரிய கட்சியான தி.மு.க.வும் கள்ள மவுனம் சாதிப்பது ஏன்?

மொத்தத்தில் கூடங்குளம் அணுமின் திட்டம் ஆபத்தான நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இங்கே கூடுதல் அணுமின் நிலையங்கள் கட்டுவது தமிழ் மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். அணுஉலை விரிவாக்கத் திட்டத்தை முற்றிலுமாகக் கைவிட வேண்டும். கூடங் குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டத்தில் போடப்பட்ட பொய் வழக்குகளை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். அழைப்பாணைகள் அனுப்பி மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். போராட்டத்தில் உயிர்துறந்த இடிந்தகரை சகாயம், ரோஸ்லின் அம்மா, கூடங்குளம் ராஜசேகர் போன்றோர் குடும்பங்களுக்கு தமிழக அரசு நிதியுதவி அளிக்க வேண்டும். காவல்துறையால் கொல்லப்பட்ட மணப்பாடு அந்தோணி ஜான் மகளுக்கு அரசு வேலை வழங்கவேண்டும். தமிழகத்தை மாறி மாறி ஆண்டுகொண்டிருக்கும் இரண்டு திராவிடக் கட்சிகளும் மேற்கண்ட பிரச்சினைகளில் தங்கள் நிலைப்பாடு என்ன என்பதை உடனடியாக தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

# பூணூல் அறுப்பு வழக்கு: தோழர்கள் பிணையில் விடுதலை



சென்னை மயிலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் பார்ப்பனர்களின் பூணூல்களை அறுத்ததாக கூறி, 20.04.2015 அன்று இராவணன், கோபி, திவாகர், நந்தகுமார், பிரதீப், பிரபாகரன் ஆகிய 6 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ச்சப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். 8.10.2015 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற தோழர்களின் பிணை கோரும் வழக்கில் தோழர்களை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது செல்லாது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நீதிமன்ற தீர்ப்பை அடுத்து 9.10.2015 காலை தோழர்கள் வேலூர் சிறையிலிருந்து விடுதலையான தோழர்களுக்கு இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சிறைச் சென்ற தோழர்கள் இராயப்பேட்டை பெரியார் சிலைக்கும் மயிலாப்பூர் அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவித்தனர்.

தபசி குமரன், அன்பு தனசேகரன், தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, தென் சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண், மாக்ஸ், நெப்போலியன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தோழர் வழக்கறிஞர் சாரநாத் மற்றும் கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எடுத்திருந்தால் இது நடக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காதே! இப்போது என்ன எமர்ஜென்சியா - நெருக்கடியா நடைபெறுகிறது?

சென்னை மாநகர காவல்துறை ராஜாவை விஞ்சிய விசுவாசியா? தன்னிச்சைபோல, தானடித்த மூப்பாக இப்படி சென்னை நகரக் காவல்துறை - ராஜாவை மிஞ்சிய ராஜ விசுவாசிகளாக நடந்து - மேலே உள்ளவர்களைத் திருப்திப்படுத்தவோ சட்டவிரோத (illegal detention)மாக 6 இளைஞர்களை - பல மாதங்களாகக் குண்டர்கள் சட்டத்தின்கீழ் வைத்தது. அவர்களுக்கு எத்தகைய மனஉளைச்சலை ஏற்படுத்தியிருக்கும்? அவர்களின் பல்வேறு விதமான இழப்புகளுக்கு யார் பொறுப்பு?

மனித உரிமை ஆணையம் இதனை கவனித்து, தானே முன் வந்து நீதியைப் புறந்தள்ளியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனித உரிமை அமைப்புகள் வாய்மூடி மவுனம் சாதித்தால், நாளை இத்தகைய சட்ட துஷ்பிரயோகம் எல்லோரையும் பதம்பார்க்கும் என்பதை மறந்துவிட வேண்டாம்!

**தந்தை பெரியார் யார்?**

1. தேசியத் தலைவர் என்பதால் ஆர்.எஸ்.எஸ். அங்கம் வகித்த மத்திய ஜனதா அரசினால் நூற்றாண்டு விழா சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டு பெரியார் கவுரவப்படுத்தப்பட்டார் அல்லவா?
2. அதற்கு முன் அய்.நா.வின் யுனெஸ்கோ விருதினை மத்திய, மாநில பிரதிநிதிகள் கலந்து கொண்டு அளித்துப் பெருமைபடுத்தப்பட்ட பெம்மான் அல்லவா பகுத்தறிவு பகலவன் தந்தைபெரியார்.
3. அவரது 125ஆம் ஆண்டு பிறந்தநாளில் சிறப்பு அஞ்சல் உறை (Cover) வெளியிட்டதே வாஜ்பேயி தலைமையில் இருந்த அரசு - மறந்துவிட்டதா காவல்துறைக்கு?
4. மாநில அரசு தந்த மரியாதையோடு தந்தைபெரியார் உடல், அடக்கம் நடைபெற்றதற்கான பொருள் என்ன?
5. அவரது நூற்றாண்டை ஓராண்டு தமிழ்நாடு அரசு கொண்டாடியதே - அது நினைவில் இல்லையோ காவல்துறைக்கு?
6. அண்மையில் சென்னை - உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வால் இவர் தமிழ்நாட்டின் மஹாத்மா என்றும் தமிழ்நாட்டின் தந்தை என்றும் நீதிபதி தீர்ப்பு எழுதியதை அறியவில்லையா காவல்துறை?

இன்னும் ஏராளம் உண்டு. இன்று தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகி, காவல்துறைக்கு மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் சட்டம், ஒழுங்கு, ஊரடங்கு உத்தரவு, மதக் கலவரம் இல்லாத பூமியானது யாரால்?

தந்தை பெரியாரால் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை அல்லவா? இத்தனை மாதங்களாக ஏன் சம்பந்தப்பட்டவர்கள்மீது எந்த நடவடிக்கையையும் சென்னைக் காவல்துறை எடுக்கவில்லை? பூணூல் அறுப்பு குண்டர்சட்டம் போட்டு இப்படி அவமானத்தைச் சுமப்பதில் என்ன அவசரமோ அவசரம்? பெரியாரைக் கொச்சைப்படுத்திய கோணல் புத்தியாளர்கள் மீது உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க முன்வராவிட்டால், அடுத்தகட்டம்பற்றி யோசிப்போம்!

சட்டப்படி சந்திக்க வேண்டிய நடவடிக்கைகளை நீதிமன்றத்திலும் - மக்களிடம் எடுத்துச் செல்லும் வீதிமன்ற நடவடிக்கைகளிலும் திராவிடர் கழகம் ஈடுபடுவது உறுதி! உறுதி!

பார்ப்பனர் பூணூலுக்குமட்டும் அவ்வளவு முக்கியத்துவமா? மண் புழுக்களாய்க் கிடந்த மக்களை, மனிதர்களாக்கி, முதுகெலும்பு வழங்கிய பெரியார் இவர்கள் கண்ணோட்டத்தில் நாதியற்றவரா?

நாதியற்றவர்களுக்கும் சேர்த்து நாப்பறை கொட்டிகாத்த நாயகர் அல்லவா அவர்? மறவாதீர்!

# பெரியாரின் மனித நேயம்: மறைமலை அடிகள் மகன் படம் பிடிக்கிறார்

நான் 1939 இல் பெரியார் அவர்களுடன் சென்னை சிறைச்சாலையிலே இருந்தேன். நான் இருந்த அறைக்கு வலப்பக்கத்து அறையிலே அவர்கள் இருந்தார்கள். இடப் பக்கத்து அறையிலே திரு. அண்ணாதுரை இருந்தார்கள். இப்படிப்பட்ட நிலையிலே அவரோடு எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. சிறையை விட்டு நாங்கள் வெளிவந்த பிறகு பெரியார் என்னை ஈரோட்டுக்கு அழைத்திருந்தார். அவர் வீட்டிற்குச் சென்றிந்தேன். நான்கு திங்கள்அவர் வீட்டிலேயே இருந்தேன். பெரியார் சிறைச்சாலையில் இருந்தபொழுது பல முறை அவர் ஊன் உண்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், பெரியார் வீட்டில் நான் இருந்த நான்கு திங்களிலும் அவர் ஊன் சாப்பிடாமல் இருந்தது எனக்கு வியப்பாக இருந்தது.

அதனால் நான் ஒரு நாள் அவர் வீட்டில் சமையல் செய்து வந்த சென்னியம்மாளை அழைத்து, "ஐயா அவர்கள் ஊன் சாப்பிடுவது எனக்குத் தெரியும். சிறைச்சாலையில் அவர்கள் பலமுறை ஊன் சாப்பிட்டதை நான் பார்த்திருக்கிறேன். எனக்கு நீங்கள் சைவமாகச் சமைத்துப் போடுவது சரிதான். ஆனால், ஐயாவுக்கு நீங்க ஊன் சமைத்துப் போடலாமே. அதில் எனக்கு ஒன்றும் தடையில்லையே என்று சொன்னேன்.

உடனே அந்த அம்மாள், 'ஐயா, நீங்கள் வருகிறதுக்கு முன்னாள் இரவு ஐயா (பெரியார்) என்னைக் கூப்பிட்டு, 'மறைச்சாமி, (என்னைப் பெரியார் மறைச்சாமி என்று சொல்வது வழக்கம்) வருகிறார்; நாளைக்கு அவர் இங்கே இருப்பார், அவர் நிரம்ப சைவம்; கடுமையான சைவம். ஆகையினால், அவர் இந்த வீட்டிலிருக்கும் வரைக்கும் நீ ஊன் (மாம்சம்) சமைக்கக் கூடாது என்று எனக்கு உத்தரவு போட்டிருக்கிறார். அதனால் நான் ஊன் சமைத்து அவருக்குப் போட முடியாது' என்று சொன்னார். அதைக் கேட்டுப் பெரிதும் தான் வியந்தேன்.

'எவ்வளவு உயர்ந்த பண்பாடு' என்று எண்ணி மகிழ்ந்தேன். இதுபோல் பெரியாரைப் பற்றிய பல செய்திகள் நினைந்து பாராட்டுதற்குரியனவாக உள்ளன.

## கா.சு.பிள்ளைக்கு உதவியது

அங்கு (ஈரோட்டில்) பெரியார் அவர்களோடு இருந்தபொழுது, கா.சு. பிள்ளையவர்கள் (உங்களுக்குத் தெரியும் கா.சு. பிள்ளை அவர்கள் கா.சுப்பிரமணியம் (பிள்ளை) என்பது அவர் முழுப் பெயர்.

தமிழ்நாட்டிலே மறைமலையடிகளைப்போல பேரும் புகழும் சிறப்பும் வாய்ந்த பேரறிஞர். அதோடு சட்டத் துறையிலே பெரும் வல்லவர். அவருக்கிணையான சட்ட அறிஞர் அக்காலத்தில் ஒருவரும் இல்லையாம். 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற பட்டமும், அதற்காகப் பதினாயிரம் உரூபா பரிசும் பெற்றவர். அந்தக் காலத்திலே, தென் கிழக்காசிய நாட்டிலே குற்றவியல் சட்டப் பொத்தகத்தை எழுதி, அதிலே முதல் பரிசு பெற்றவர். தமிழில் நூற்றிருபது நூற்களுக்கு மேல் எழுதியவர். பேரறிஞர், ஆனால், அவர் கடைசிக் காலத்திலே, அஃதாவது நான் ஈரோட்டில் இருந்த பொழுது, கா.சு. பிள்ளை அவர்கள் (அவரை எம்.எல். பிள்ளையென்றும் சொல்வார்கள். ஏனென்றால், அந்தக் காலத்திலேயே எம்.ஏ., எம்.எல். படித்தவர் அவர். தாகூர் சட்டக் கல்லூரியிலேயே பேராசிரியராகவிருந்தவர்) அவர்கள் தம் கடைசிக் காலத்திலே ஆதரிப்பாரின்றி. நோயுற்றுத் திருநெல்வேலியிலே, வாடி, வதங்கிக் கிடந்தார். பெரியார் ஐயா அவர்களுடன் ஒருநாள் நான் பேசிக் கொண்டிருந்த பொழுது கா.சு. பிள்ளை அவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது. 'சாமி, மறைச்சாமி, நம். கா.சு. பிள்ளை ஐயா அவர்கள் இவ்வளவு நோயுற்று தளர்ந்து கிடக்கிறாராம். என்ன கொடுமை! இவ்வளவு பெரிய தமிழறிஞரை நம் தமிழர்கள் இப்படி மறந்து விட்டார்களே! ஐயோ' என்று மிகவும் வருத்தப்பட்டுக் கண் கலங்கச் சொல்லி, அவர்களுக்கு நான் இன்று ஓர் ஐம்பது உரூபா அனுப்பி யுள்ளேன்; இனிமேல் மாதந்தோறும் உரூபா ஐம்பது அனுப்புவேன்" என்றும் கூறினார்.

அப்போது நான் நினைத்தேன்; கா.சு. பிள்ளைக்கு வேறொரு பெயர் 'பூசைப் பிள்ளை' என்பது. கடைசி மூச்சு நிற்கிற வரைக்கும் நாள்தோறும் சிவபூசையை மணிக் கணக்காகச் செய்தவர். ஆழ்ந்த சிவபத்தர். உயர்ந்த சிவநெறியாளர். சிறந்த சைவர். அப்படிப்பட்ட இறை நம்பிக்கையுடையவர் (ஆத்திகர்) இடத்திலே, இறை நம்பிக்கையற்றவர் (நாத்திகர்) என்று சொல்லப்படுகின்ற நம் பெரியார், அந்தக் கருத்து வேற்றுமையைப் பாராட்டாது, தமிழர்களில் ஒரு பெரிய அறிவாளி, இப்படி ஆதரிப்பார் அற்றுக் கிடப்பதா என்று எண்ணி, அன்பு வைத்து, வருந்தி, இரங்கி மாதந்தோறும் (நான் அங்கிருந்த நான்கு மாதமுதம் தவறாமல் அனுப்பியதை நேரிலேயே பார்த்தேன்.) அவருக்கு ஐம்பது உருவா அனுப்பி வந்த பெருந்தன்மையை என்னென்பது! அப்பொழுது நான் வேறொன்றையும் எண்ணி வருந்தினேன். 'எவ்வளவோ சைவ மடாதிபதிகள் எவ்வளவு சைவச் செல்வர்களாக இருக்கிறார்களே! அவர்களுக்கெல்லாம் இந்த அன்பில்லையே, இவர் 'இறை மறுப்புக் கொள்கையுடையவராயிருந்தும் தமிழர் என்ற ஓர் உணர்ச்சிக்காக இப்படி பெருங்கொடை வழங்குகின்றாரே என்றும் எண்ணினேன். (அப்போது ஐம்பது உருபா என்றால், இப்போது எண்ணிப் பார்த்தால் ஐநூறு உருபா (1987இல்)).



மறை. திருநாவுக்கரசு

('இனி இன்னும் அவர் எளிமையைப் பற்றி நான் எண்ணிக்கூறும் போது, என்னுடைய பெருமையைக் கூறுவதாகவும் கருதப் பட்டு விடுமோ என்று நான் சிலவற்றைக் கூறவே கூசுகின்றேன். ஆனாலும், அவற்றிலே அப்பெருந் தலைவரின் சிறந்த பண்புகளே விளங்கித் தோன்றுவதால், என்னைப் பற்றிய இடையீட்டுக்கு அன்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டிக் கொள் கின்றேன்' என்னும் பீடிகையோடு, கீழே வரும் ஓரிரண்டு நிகழ்ச்சிகளையும் உயர் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்.)

## சிறைச் சாலையில்...

பெரியார் அவர்கள் சிறையிலிருந்தபொழுது வயிற்று வலி அடிக்கடி அவருக்கு வந்திடும். அப்பொழுதெல்லாம் மருத்துவர்கள் அவரை அக்கறையுடன் விரைந்து வந்து பார்ப்பார்கள். இதற்குக் காரணம், அவருக்குச் சிறைச்சாலை உணவு ஒத்துவராததே என்பதை நான் உணர்ந்தேன். அதனால் பெரியார் அவர்களிடம், 'இங்கே, சிறைச்சாலைத் தலைமை அதிகாரிகளிடத்தில், நான் உங்களுக்காகச் சமையல் செய்து தருவதாக வேண்டிக் கொள்கிறேன். அதற்கு அவர்கள் இசைந்தால் உங்களுக்கு நான் சமையல் பண்ணிப் போடுகிறேன். எனக்கு நன்றாகச் சமையல் செய்யத் தெரியும்' என்று சொன்னேன். பெரியார் அவர்களும் இசைந்தார்கள். அதன் பின் அதிகாரிகளிடமும்

> ***1939இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையிலடைக்கப்பட்ட பெரியாருடன் ஒரே சிறையில் இருந்தவர் மறைமலை அடிகளாரின் மகன் மறை. திருநாவுக்கரசு. பெரியாரின் மனித நேய உணர்வுகளை வியந்து பாராட்டி, இவர் எழுதிய கட்டுரை 1991ஆம் ஆண்டு 'இளந்தமிழன்' ஏட்டில் வெளி வந்திருக்கிறது.***
>
> ***பெரியாரிடம் கருத்து மாறுபாடுகளை யும் கடந்த பெருந்தன்மையும், மனித நேயமும் தமிழினப் பார்வையில் உயர்ந்து நின்றதை பல்வேறு நிகழ்வுகளுடன் படம் பிடித்துக் காட்டுகிறது, இக்கட்டுரை.***

இதுபற்றிக் கூறி இசைவு பெற்று, பெரியார்க்குச் சமையல் செய்து, ஏதாகினும் கறி பண்ணிக் கொடுத்து வந்தேன்.

அப்பொழுது பெரியார் நடந்து கொண்ட முறை மிகவும் அன்பு கனிந்ததாகவிருந்தது. அவர்கள் நாள்தோறும் உண்ணுவதற்கு முன் அவர்கள் உண்ணும் அலமினியத் தட்டுடன் என்னுடைய தட்டையும் சேர்த்துக் கழுவிக் கொண்டு வந்து மேசையின்மேல் வைப்பார்கள். (நான் அப்பொழுது சரியாக முப்பது அகவை யுடையவன். அவர்களுக்கு அப்பொழுது சரியாக அறுபது அகவை யிருக்கலாம்) அவர்களுடைய அன்பு, பண்பு, உயர்ந்த அறிவு அளவற்ற தொண்டு இவற்றையெல்லாம் எண்ணி அப்பொழுது அவர்களிடத்தில் நான் அளவற்ற மதிப்பு வைத்திருந்தேன். ஒரு சைவத் தலைவரிடத்தில் வைத்திருக்கின்ற மதிப்பை விடவும் அவர்களிடம் அதிக மதிப்பு வைத்திருக்கின்றேன். காரணம் அவர்க்கிருந்த உயர்ந்த பண்பாடுதான்.

எனவே அக்கால் அவர்களிடத்தில் நான், 'ஐயா, என் தட்டை நான் கழுவிக் கொள்வேன். அதைத் தாங்கள் கழுவ வேண்டாம்' என்று சொல்வேன்! அதற்கு அவர், 'ஏன், கழுவினால் என்னாவாம்? இதில் என்ன உயர்வு தாழ்வு' என்று சொல்வார்கள். அப்பொழுது தான் அவர்களிடம் சொல்வேன், 'நான் ஐயாவின் மகன் போல் இருக்கின்றேன். என்னால் இதைச் செய்ய முடியும். எனவே, நீங்கள் இதைச் செய்ய வேண்டாம்' என்று இதுபோல் எத்தனையோ நாள் எத்தனையோ முறை நான் கேட்டுக் கொண்டும் அது பயனில்லாமல் போயிற்று. கட்டாயம் அவர்கள்தாம் இரு தட்டுகளையும் நாள்தோறும், இரண்டு வேலைகளும் கழுவிவைத்துக் கொண்டு வந்து வைப்பார்கள். அதை நான் நினைக்கும் பொழுது, அவருடைய அன்பையும் பெருமையையும் எண்ணி வியக்கின்றேன்.

அதன் பிறகு, ஒரு நாள், எங்கள் அறைக்கு முன்னால் ஒரு பாயைக் கொண்டு வந்து விரித்தோம். அதில் நானும் பெரியாரும் அமர்ந்தோம். (இப்படி அமர்வது அடிக்கடி வழக்கம். அப்படி அமர்ந்து கொண்டு பல செய்திகளைப் பற்றியும் ஆராய்வது உண்டு) அவர்கள் பேசும்பொபது நான் அமைதியாய்க் கேட்டுக் கொண்டு இருப்பேன். அதுபோலவே, நான் பேசும் போதும் அவர்கள் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அதுபோல் பலவாறு கருத்து வேற்றுமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம். அப்படி நான் பேசுகிறபொழுது, சில நல்ல இடங்களில் என்னைப் பாராட்டுவார்கள்; ஊக்கப்படுத்துவார்கள். நான் அவர்களிடத்தில் அளவிறந்த பத்திமை வைத்திருந்தேன். அவ்வாறிருந்த பொழுதுதான், ஒரு நாள், ஒரு முறை என் கால் உகிர்(நகங்)களில் 'சில்'லென்று ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அஃது என்னவென்று பார்த்தபொழுது. ஐயா அவர்கள் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து, என் கால் உகிர்களில் தண்ணீரைத் தடவினார்கள். சட்டென்று நான் அஞ்சிக் கூச்சத்துடன் காலைப் பின் வாங்கிக் கொண்டு, 'என்னையா, இது....!' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'ஏன்? என்னாவாம், உங்கள் காலிலே 'நகம்' பெயர்ந்து கொள்ளும், அப்புறம் நானல்ல' பட்டினி கிடக்க வேணும், என்று நகைச்சுவை ததும்பச் சொன்னார்கள். நான் உடனே, 'ஐயா, அப்படி ஒன்றும் நேராது. மேலும், இந்தக் கால் உகிர்களை எடுத்துக் கொள்ள எனக்குத் தெரியும்! இத்தனை நாட்களும் நானே தான் செய்து கொள்வது வழக்கம். வேறு யாரிடமும் நான் களைந்து கொள்வதில்லை. எனவே நானே களைந்து கொள்கின்றேன்; தாங்கள் அதைச் செய்யக் கூடாது' என்று கூறி விடாப்பிடியாக மறுத்தேன். அவர்களும் விடாப்பிடியாக, என் இரண்டு கால் உகிர்களையும் மிக அன்போடு மழிதகடு (பிளேடு) கொண்டு களைந்து விட்டார்கள். இதில் எனக்கு என்று எந்தப் பெருமையும் இருப்பதாகக் கருதி விடக் கூடாது. அந்தப் பெருமை முற்றிலும் அவர்களுடையதே ஆகும். அவர்களைவிட எல்லா வகையிலும் தாழ்ந்த வனாகிய என்னிடம், அப்படிப்பட்ட பெரிய தலைவர் மிகப் பெருமையுற்றவர், அன்பின் காரணமாக, இப்படி நடந்து கொண்டது அவர்களுடைய சிறந்த பண்பட்ட தன்மையையே காட்டுவதாகும்.

## வழிபாடு செய்ய வீட்டில் இடங்கொடுத்தது

ஈரோட்டில், நான் பெரியார் அவர்கள் வீட்டில் நான்கு திங்கள் இருந்ததை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். அப்படி நான் அவர்கள் வீட்டில் தங்கியிருந்ததற்குக் காரணமும் உண்டு. அக்கால் நடந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு என்னை மாநிலப் பொதுச் செயலாளராக ஐயா அவர்கள் அமர்த்தினார்கள். என்னுடைய புகைப்படத்துடன் அப் போதைய குடிஅரசு இதழிலோ விடுதலையிலோ என்னைப் பற்றிப் பலவாறு புகழ்ந்து இப்படி இவர் மறைமலை யடிகளாரின் மகனார். இவரை இந்த இந்தி யெதிர்ப்பு இயக்கத்திற்கு மாநிலப் பொதுச் செயலாளராக அமர்த்தி யிருக்கிறேன். என்றெல்லாம் விளம்பரப்படுத்தியிருக் கிறார்கள். மேலும் என்னிடத்தில் அவருக்கு அளவு கடந்த ஈடுபாடும் அன்பும் உண்டு. அப்படிப்பட்ட பெரியார் இறைமறுப்புக் கொள்கையில் நிரம்ப அழுத்தமானவர்கள். அவர் கொள்கையை நான் மதிக்கின்றேன். அவர் கொள்கை அறியாமையால் ஏற்பட்டதன்று. அறிவு முழுமையாகவே இறைவன் உண்டு என்று நினைக்கின்ற என்னைப் போல்வாரும் இருக்கிறார்கள். ஆனால், இருசாரார் கொள்கைகளும் பற்றி நான் எதுவும் இங்கு கூற விரும்பவில்லை. அது தனிப்பட்ட செய்தி. ஆனால் பெரியார் அவர்களுடைய கொள்கையை அவர் மதிப்பது போலவே, பிறர் தங்களுடைய கொள்கைகளை மதிப்பதையும் அவர் எதிர்ப்பதில்லை. அதைக் குறை கூறுவதும் இல்லை. ஆனால், அஃது உண்மையாக இருக்க வேண்டும். போலியாக மட்டும் இருக்கக் கூடாது.

அவர்கள் வீட்டிலே, நான் போவதற்கு முன்னாலேயே, அவர்கள் குடும்பத்திலே, அவர் இறை மறுப்புக் கொள்கையுடையவராகிவிட்ட காரணத்தால், அங்குள்ள பூசை அறையைப் பூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் நான் போன அன்று, அந்தப் பூசை அறைக் கதவு திறக்கப் பெற்றிருந்தது. அது மட்டுமின்றி அறை முழுவதும் கழுவித் தூய்மை செய்து, சுராலைக்குச்சி (ஊதுவத்தி) கற்றையாகப் புகைய வைத்து, விளக்கும் ஏற்றி வைக்கப் பெற்றிருந்தது. அத்துடன் ஒரு தட்டில் மலர்கள், கற்பூரம், சுராலை (சாம்பிராணி) எல்லாம் வைக்கப் பெற்றிருந்தன. இது பற்றி, 'என்ன' என்று அங்கிருந்தவர்களிடம் விளக்கம் கேட்டேன். அதற்கவர்கள், நீங்கள் இங்கிருக்கும் வரை, உங்கள் வழக்கப்படியே பூசை - முதலியவற்றையெல்லாம் செய்து கொள்ளுங்கள்; இங்கு இருப்பதனால் உங்கள் பூசை பழக்க வழக்கங்களுக்குக் கெல்லாம் முட்டுப்பாடு கூடாது' என்று சொன்னார்கள்; நான் மிகவும் வியப்புக் கொண்டேன்; மகிழ்ச்சியும் அடைந்தேன். நான் நாள்தோறும் பூசை செய்து நெற்றியில் நீறிட்டுக் கொள்வேன். கழுத்தில் உத்திராக்க மணிகளும் அணிந்து கொண்டிருப்பேன். அப்பொழு தெல்லாம் பெரியார் அவர்கள் என்னிடம் நகைச்சுவையாக, 'சாமி' நீங்கள் இப்படி இருக்கும் பொழுது நன்றாயிருக் கிறது. நீங்கள் இப்படியே என்னுடன் இருங்கள். என்னை எல்லாரும் 'நாத்திகர்' என்கிறார்கள். நான் உங்களைக் காட்டிக் காட்டி என்னையும் 'ஆத்திகர்' என்று கூறிக் கொள்வேன்' என்பார். இஃது எதைக் காட்டுகிறது என்றால் கருத்து வேற்றுமை, கொள்கை என்பதெல்லாம் எப்படியிருந்தாலும் மாந்தனுக்கு மாந்தன் மதிக்க வேண்டும்; ஒருவன் கருத்தை மற்றவன் மதிக்க வேண்டும்' என்ற உயர்ந்த பண்பாட்டையே காட்டுகிறது.

இது தொடர்பாக இன்னொரு செய்தி நினைவுக்கு வருகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

DATE OF PUBLICATION 15.10.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# குமாரபாளையத்தில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் பேருந்து நிலையம் அருகில் "எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்" "இளையதலைமுறைக்கு வேலைவேண்டும்" என்கிற தலைப்பில் 27-09-2015 ஞாயிறன்று மாலை 5.00 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. துரை.தாமோதரனின்"மந்திரமா-தந்திரமா"நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது. தொடர்ந்து திராவிடர் கலைக் குழுவின் நாடகங்கள் அரங்கேறியது. கழகக் கலைக் குழுவின் பகுத்தறிவு நாடகங்கள் பகுதியில் நல்ல வரவேற்பைப் பெற்றன. கூட்டத்திற்கு நகர செயலாளர் வெங்கட் தலைமையேற்றார். மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் வைரவேல், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழகத்தலைவர் கொளத்தூர்மணி நீண்டதொரு சிறப்புரையை நிகழ்த்தினார். இறுதியாக ப.செல்வம் நன்றியுரை கூற கூட்டம் நிறைவுற்றது. கொட்டும் மழையிலும் மக்கள் இறுதிவரை கூட்டத்தை கேட்டது குறிப்பிடத்தக்கது.



## ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் பரப்புரைப் பயணங்கள்

தந்தை பெரியாரின் 137 ஆவது பிறந்தநாள் ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக ஒவ்வொரு ஒன்றிய பகுதிகளிலும் கொடியேற்று விழா மற்றும் எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்! எங்கள் இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும். 22.9.2015 அன்று முதல் 2.12.2015 அன்று வரை வாரம் ஒரு நாள் பரப்புரை பயணம் நடத்த திட்டமிடப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த 22.09.15 அன்று கோபி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொளப்பலூர் பகுதியில் பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் பரப்புரைப் பயணம் துவங்கியது. சிறுவலூர் அருகில் உள்ள எலந்தக்காடு பகுதியில் அமைந்துள்ள கழகக் கொடிகம்பத்தில் கழக கொடியினை ஏற்றிய பின் துவங்கிய பயணம் சிறுவலூர் பகுதியை அடைந்தது. அங்கு காவை இளவரசன் அவர்களின் மந்திரமல்ல தந்திரம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் இடையே காவை இளவரசன் சாமியார்கள் லிங்கம் எடுப்பது, திருநீறு வரவழைப்பது எல்லாம் மந்திர வேலை அல்ல! எல்லாம் மக்களை ஏமாற்றும் வகையில் செய்யும் தந்திரம் தான் என பல்வேறு செய்திகளை கூறிக் கொண்டே நிகழ்ச்சியினை செய்தார். பின்னர் தலைமை கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் பயணத்தின் நோக்கத்தினை விளக்கி உரையாற்றினார்கள். அன்று சிறுவலூர் பகுதியில் வாரச் சந்தை என்பதால் அருகில் உள்ள கிராம மக்கள் பலரும் நிகழ்ச்சியினை ஆர்வமாக கேட்டனர். அங்கு இருந்து புறப்பட்ட பயணம் வரும் வழியில் மூப்பன் சாலை, செட்டியாம்பாளையம் பிரிவு, அம்மன் கோவில்பதி ஆகிய பகுதியில் கழக கொடியினை ஏற்றி விட்டு அருவங் கொரை பகுதியை அடைந்தது அங்கு பயணத்தின் நோக்கத்தினை விளக்கி இராம.இளங்கோவன் உரையாற்றினார். அடுத்து கொளப்பலூர் பகுதியை வந்தடைந்தது. அங்கு காவை இளவரசன், மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சியினையும், சுப்பிரமணியம், வேலுச்சாமி இராம. இளங்கோவன் பயணத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினார்கள். பெருந் திரளான மக்களும் குழந்தைகளும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கொளப்பலூர் பேருந்து நிறுத்தத்தில் தந்தை பெரியார் படம் மலர் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது அனைவரையும் கவர்ந்தது. தோழர்கள் அனைவருக்கும் பெரியார் படிப்பகத்தில் அசைவ உணவு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நிகழ்வுக் கான ஏற்பாடுகளை கொளப்பலூர் பகுதி தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

**டி.என். பாளையம் ஒன்றியத்தில்**

டி.என். பாளையம் ஒன்றிய கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் பரப்புரைப் பயணம் கடந்த 27.09.15 அன்று பங்களாப்புதூரில் தொடங்கியது. மாவட்ட செயலாளர் வேணுகோபால் சாதி ஒழிப்புப் பாடல்கள் பாடி இம் மக்களை சாதி எவ்வாறு இழிவுபடுத்துகிறது? எவ்வாறு உருவாகியது என்பது குறித்து பேசி நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். தொடர்ந்து இராம. இளங்கோவன் உரையாற்றும் பொழுது உயர்கல்வி நிறுவனங்களில் நமது மாணவர்களுக்கு இடஒதுக்கீடு, மத்திய, மாநில அரசுகளின் உயர்கல்விகளில் நமது மக்களின் பணி இடஒதுக்கீடு நிலவரம் குறித்து பேசினார். அங்கு நிகழ்வை முடித்துவிட்டு கிளம்பிய பயணம் அடுத்து டி.என் பாளையம் சென்றது. அங்கு அண்ணாசிலை அருகே நடந்த பயணத்தில் மாவட்ட தலைவர் நாத்திகசோதி, நாம் தமிழர் வெங்கட் உரையாற்றினார்கள். அடுத்து பயணம் நால்ரோடு பகுதியை அடைந்தது. அங்கு சதுமுகை பழனிசாமி, கோபி வேலுச்சாமி, இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினார்கள். நால்ரோடு பகுதியில் வேலுச்சாமி பேசும் போது இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் அவர் பேசக் கூடாது என காவல்துறையிடம் வாக்குவாதம் செய்துகொண்டேஇருந்தனர்.

நால்ரோட்டில் பயணம் முடித்துக்கொண்டு அரசூர் பகுதியை வந்தடைந்தது. அங்கு நாம் தமிழர் வெங்கட், இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினார்கள். அரசூரில் பயணம் முடிந்தவுடன் கொடிவேரியில் தோழர்கள் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மதிய உணவை முடித்துக் கொண்டு சிறிது நேர ஓய்வுக்குப் பின் பயணம் துவங்கியது. பயணம் கொடிவேரி பிரிவை அடைந்தது. அங்கு அமைக்கப்பட்டிருந்த கழக கம்பத்தில் கோவிந்தராசு கழக கொடியினை ஏற்றி வைத்தார். அங்கு பயணத்தின் நோக்கத்தினை விளக்கி செயக்குமார், சுப்பிரமணியன், அந்தியூர்வீரா கார்த்திக், நாம் தமிழர் அமைப்பைச் சார்ந்த குமுதவல்லி, இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினார்கள். கொடிவேரி பகுதிகளில் இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவர்கள் இங்கு பரப்புரைப் பயணம் நடத்தக் கூடாது நடத்தினால் ரகளை செய்வோம் என்று கூறியதால் அப்பகுதி மக்கள் மட்டுமல்லாமல் சாலையில் சென்றவர்களுக்கும் பிரச்சனையாக இருக்கும்போல் நின்று பார்க்கலாம் என அவர்களும் நின்றதால் நமது பேச்சை கேட்க கூட்டம் கூடியது நமக்கு சாதகமாக அமைந்தது. நிகழ்ச்சி முடிந்தவுடன் அப்பகுதி மக்கள் நமது தோழர்களை பாராட்டினார்கள். நிகழ்ச்சி அடுத்து காசிபாளையம் சுப்பிரமணியம், இராம.இளங்கோவன் உரையாற் றினார்கள். காசிபாளையத்துடன் பரப்புரைப் பயணம் நிறைவுற்றது. செயக்குமார் நன்றி கூறினார். அங்கு தோழர்களுக்கு தேநீர் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கொடிவேரி மற்றும் காசிபாளையம் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

4.10.2015 அன்று கோபி நகரத்திலும், 11.10.2015 அன்று பவானி ஒன்றியம் - ஜம்பை, ஆப்பக்கூடல், கவுந்தம்பாடி ஆகிய இடங்களிலும் பரப்புரைப் பயணம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து,

18.10.15 - அம்மாபேட்டைஒன்றியம் (சித்தார், அம்மாபேட்டை, பூதப்பாடி, குருவரெட்டியூர்); 25.10.15 - அந்தியூர்ஒன்றியம் (அந்தியூர், அத்தாணி, கீழ்வாணி); 01.11.15 - சத்தி ஒன்றியம்; 08.11.15 - கோபி ஒன்றியம் (பொலவக்காளிபாளையம், தாசம்பாளையம், ஒத்தக்குதிரை, கூகலூர்); 15.11.15 - கோபி ஒன்றியம் (அளுக்குளி, குருமந்தூர்மேடு, அலிங்கியம், கோட்டுப்புள்ளாம் பாளையம்); 22.11.15-பெருந்துறை ஒன்றியம் (திங்களூர், நல்லாம்பட்டி); 29.11.15 - நம்பியூர் ஒன்றியம்; 02.12.15 - நம்பியூர் நகரம் - நிறைவுவிழா பொதுக்கூட்டம் நடைபெறும்.

## பெரியார் ஏன் எதிர்க்கப்படுகிறார்?
## மயிலாடுதுறையில் கழகம் நடத்திய விளக்கக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத் தின் சார்பாக மயிலாடுதுறை சின்னக்கடை வீதியில் 26.09.2015 சனிக் கிழமை அன்று பெரியார்: யாரால், எதற்க்காக, எதிர்க்கப் படுகிறார்? என்ற தலைப்பில் பெரியார் பிறந்தநாள் கூட்டம் நடைப்பெற்றது.




கூட்டத்திற்கு நகர அமைப் பாளர் கு.செந்தில்குமார் தலைமை வகித்தார். திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், எழுத்தாளர் வே.மதிமாறன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மத அடிப்படை வாதிகளும், ஜாதிய ஆதிக்கவாதிகளும்தான் பெரியாரை எதிர்க்கின்றனர் என்றும், கல்வி, வேலை வாய்ப்புகளில் போராடிப் பெற்ற இடஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடங்களில் இன்றும் அவர்கள் முழுமையாக அதில் பலன் பெற முடியாமல் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி இட ஒதுக் கீட்டை ஒழிக்கும் சதி திட்டமிட்டு நடைபெறுவதாக விடுதலை இராசேந்திரன் கூறினார். எழுத்தாளர் மதிமாறன் பேசும்போது திருக்குறளை இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆண்ட மன்னர்கள் மக்களிடம் கொண்டு சேர்க்காமல் புராணங்களை கதாகாலேட்சபம் செய்து கொண்டிருந்த வேளையில் பெரியார் தான் திருக்குறள் மாநாடு நடத்தி திருக்குறளை மக்கள் அனைவருக்கும் கொண்டு சென்றார் என்று பேசினார். நிகழ்ச்சியில் தமிழர் உரிமை இயக்கம் சுப்புமகேசு, வழக்கறிஞர் சங்கர், விடுதலை தமிழ்ப் புலிகள் குமாரவேல், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் செந்தில், திருக்குறள் பேரவை கலியபெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். நகர தலைவர் நாஞ்சில்சங்கர் நன்றி கூறினார்.

### திராவிடர் விடுதலைக் கழகத்தின் வெளியீடுகள்


1. மனு நீதி : ஒரு குலத்துக்கொரு நீதி- பெரியார், விலை-ரூ.10.
2. தனியார் துறையில் இடஒதுக்கீடு ஏன்? எதற்கு?-விடுதலை இராசேந்திரன் விலை-ரூ.30.
3. இந்து மதப் பண்டிகைகள்-பெரியார். விலை-ரூ.30.
4. கடவுளர் கதைகள்- சாமி’. விலை-ரூ.20.
5. இளைஞர்களே உங்களுக்குத் தெரியுமா? விலை-ரூ.20.
6. பக்தர்களுக்கு சில கேள்விகள். விலை-ரூ.5.
7. உயர் எண்ணங்கள்-பெரியார். விலை-ரூ.30.
8. பெரியாருக்கு எதிரான முனைமழுங்கும் வாதங்கள்-கொளத்தூர் மணி. விலை-ரூ.50.
9. பெரியார்-அம்பேத்கர் இன்றைய பொருத்தப்பாடுகள்-ஆ.ராசா. விலை-ரூ.20
10. இவர்தான் பெரியார்-தஞ்சை மருதவாணன். விலை-ரூ.20.
11. திராவிட இயக்க வரலாற்றுச் சுவடுகள்-தஞ்சை மருதவாணன். விலை-ரூ.30
12. ஈழம் முதல் அணுஉலை வரை-கொளத்தூர் மணி. விலை-ரூ.30
13. பண்பாடு-சமூகம்-அரசியலில் ‘மனு’வின் ஆதிக்கம்-விடுதலை இராசேந்திரன்,விலை-ரூ.10
14. ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஜாதி ஒழிப்பு மலர். விலை-ரூ.100

**தொடர்புக்கு:**

**தலைமைக் கழகம்,** திராவிடர் விடுதலைக் கழகம் 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம் மயிலாப்பூர், சென்னை-600 004. பேசி:044-24980745 9941613535/9941759641

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 15th October 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | அக்டோபர் 22, 2015 | புரட்சி 14 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00


## மக்களைக் கூறுபோடும் செயல் திட்டமே பார்ப்பனியம்

# மக்கள் ஒற்றுமையை உருவாக்கும் வரலாறுகள் எழுதப்படவேண்டும்

*“பார்ப்பனியத்தால் பிரிக்கப்பட்ட மக்களின் ஒற்றுமைகளை வலியுறுத்தும் வரலாறுகள் எழுதப்பட வேண்டும் என்று ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் வலியுறுத்தினார்.*



## ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் பேச்சு

திராவிடர் விடுதலைக்கழகம், அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 137வது பிறந்தநாள் விழா கருத்தரங்கம் மற்றும் தஞ்சை பசு.கௌதமன் எழுதிய இந்து மதத்தில் அம்பேத்கரும் பெரியாரும் என்ற புத்தகத்தின் நூல் திறனாய்வு மன்னார்குடி சிட்டி ஹாலில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு தலைமை வகித்தார். நீடாமங்கலம் ஒன்றிய அமைப்பாளர் செந்தமிழன் வரவேற்றார்.

தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம், முன்னாள் அமைப்பாளர் பாரி, புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் பூபதி கார்த்திகேயன், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் முரளி சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துவக்கத்தில், இந்துத்துவ மதவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட பகுத்தறிவு எழுத்தாளர்கள் நரேந்திர தபோல்கர், பேராசிரியர் கல்பர்கி ஆகியோரின் படங்களை திறந்து வைத்து அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட செயலாளர் சேரன்குளம் செந்தில்குமார், திருவாரூர் நகர் மன்ற உறுப்பினர் வரதராஜன் ஆகியோர் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்த தஞ்சை பசுகௌதமன் எழுதிய இந்து மதமும் அம்பேத்கரும், பெரியாரும் என்கிற நூலில் திறனாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழக மாநில பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன் நூலினை திறனாய்வு செய்து உரையாற்றினார். நூலாசிரியர் தஞ்சை பசுகௌதமன் ஏற்புரை நிகழ்த்தினார்.

இறுதியாக, ஜாதிஒழிப்பு போர்க்களத்தில் பெரியாரும் அம்பேத்கரும் என்றும் தேவை என்ற தலைப்பில் தலித் முரசு ஆசிரியர் தோழர் புனிதபாண்டியன் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் -

அம்பேத்கர் - பெரியார் வாசகர் வட்டம் சென்னை அய்.அய்.டி.இல் தடை செய்யப்பட்டபோது இந்தியா முழுவதும் மக்கள் தன்னெழுச்சியாக மாபெரும் போராட்டத்தை நடத்தினர். அண்மைக்காலங்களில் பெரியார் படத்தை மிக மோசமான வகையில் அவமரியாதை செய்தபொழுதும் அவை முகநூல்களில் வெளியிடப்பட்ட போதும் கூட அதற்கு எதிராக பெரிய எதிர்ப்புகள் உருவாகவில்லை. அதே போல அம்பேத்கருடைய சிலைகள் தொடர்ச்சியாக தாக்குதலுக்கு ஆளாகி அவை உடைக்கப்படும் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தாலும் அதற்கெதிராக பெரிய எதிர்ப்பு என்பது இதுவரை இல்லை. ஆனால் அய்.அய்.டி. இல் ஒரு வாசகர் வட்டம் என்ற சிறிய மாணவர் அமைப்பு ஒரு சில கருத்தரங்கங்களை மட்டுமே நடத்தியிருக்கிறது. அதைக் கூட பொறுக்காத அய்.அய்.டி. நிர்வாகம் அதை தடை செய்தது. காரணம் அம்பேத்கர் பெரியார் என்ற தத்துவங்களின் பிணைப்பை, அது உருவாக்கக்கூடிய ஆற்றலை, எழுச்சியை, விழிப்புணர்வை எதிரிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்பதையும் இவ்விரு தத்துவங்கள் இணையும் பொழுது மக்களிடையே ஓர் ஓர்மை உணர்வு, சமூகநீதி உணர்வு முகிழ்த்தெழுவதை நம்மால் காண முடிந்தது. இத்தகைய உணர்வை நாம் தொடர்ச்சியாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவையும் அவசியமும் இருக்கிறது.

பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதோர் என்றொரு முரண்பாட்டை பெரியார் கட்டமைத்தார். இந்திய சமூகம் அல்லது தமிழ்ச்சமூகம் எப்படி பிளவுபட்டு நிற்கிறது என்றால் மநு தர்மத்தின்படி சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்று இந்நாட்டின் தொல்குடி மக்கள் வர்ணத்தின் அடிப்படையில் படிநிலைப்படுத்தப்பட்டு பிரிக்கப்பட்டிருக்கின்றனர். மநு தர்மத்தால் வர்ண சாதியமைப்பால் பிளவுபட்டுள்ள மக்களை பெரியார் நேர்மறையாக பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மதம் மாறிய சிறுபான்மையின மக்கள் என்று அம்மக்களை அடையாளப்படுத்தி இம் மக்களிடையே ஓர் ஓர்மையை உருவாக்க வேண்டும் என்பதால் திராவிடர்கள் என்று அறிவித்து, அவர்களுக்கான ஓர் இயக்கத்தை கட்டமைத்தார். ஜாதியற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதுதான் பெரியாரின் லட்சிய நோக்கமாக இருந்தது.

அம்பேத்கர் இந்தியாவை தீண்டத்தகுந்த இந்தியா, தீண்டத்தகாத இந்தியா என்று வர்ண அடிப்படையில் பிளவுபட்டிருந்த இந்தியாவை அடையாளம் கண்டார். சூத்திரர்கள் வர்ண அமைப்பை தாங்கிப் பிடிக்கின்றவர்களாக அதனுடைய ஏவலாட்களாக செயல்படுகிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு அந்த அமைப்பில் எந்த உரிமையும் வழங்கப்படவில்லை என்ற உண்மையை அம்பேத்கர் முன்வைத்ததோடு, இந்த வர்ண அமைப்புக்குள் இல்லாத தலித் மக்கள் அவர்ணர்கள் என்றும் இந்த அமைப்பை எதிர்த்ததால் அவர்கள் ஊரை விட்டு வெளியே சேரிக்குத் தள்ளப்பட்டார்கள் என் பதை வரலாற்று ஆய்வுகளோடு நிறுவினார். சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் முரண்பாடு நிலவினாலும் பெரும்பான்மையான இந்த மக்களை அவர் அடிமைச் சாதியினர் என்று அடையாளப்படுத்தியதோடு இவ்விரு பிரிவினரிடையே ஓர் ஒற்றுமையை வளர்த்தெடுப்பதன் மூலம்தான் வர்ண ஜாதி அமைப்பை தகர்த்தெறிய முடியும் என்று ஆழமாக நம்பி, அதனடிப்படையில்தான் தன் செயல்திட்டங்களை வகுத்துக் கொண்டார்.

மக்களை பல கூறுகளாகப் பிரிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும் செயல்திட்டத்திற்கு பெயர்தான் பார்ப்பனியம். பார்ப்பனியத்தால் பிரிக்கப்பட்ட மக்களை ஒன்றிணைப்பதற்குப் பெயர்தான் அம்பேத்கரியம் - பெரியாரியம். நம்மைப் போன்ற சமூக மாற்றத்திற்காகப் போராடக்கூடியவர்கள் அடிப்படையில் இந்த மக்களிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்கான வரலாற்றை எழுத வேண்டும். அப்படியான இலக்கியங்களை உருவாக்க வேண்டும். தலித் மக்கள் தாக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் மீது பாகுபாடு காட்டப்படுகிறது என்று சொன்னால் எப்படி திராவிடர் விடுதலைக் கழகம் அதற்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கிறதோ அந்த வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போது நிலவக்கூடிய ஜாதிய சமூக அமைப்பை கேள்வி கேட்பதாக, அதை மறுதலிப்பதாக உங்கள் இலக்கியம் இல்லை என்று சொன்னால் அது இலக்கியமே ஆகாது. தற்பொழுது நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளை கண்டிக்காத போராட்டங்கள் போராட்டங்களே அல்ல. ஜாதிய சமூகத்தை கேள்வி கேட்காத செயல்பாடுகள் எல்லாம் பழைமைவாத செயல்பாடுகளே.

> **“தமிழன் என்ற அரசியல் ஓர்மையோடு போராடுகிறவர்கள் போராட்டம் முடிந்தவுடன் ஊருக்கும் சேரிக்கும் பிரிந்து செல்கிறார்கள்.”**

தலித் மக்களுக்கான ஓர் அமைப்பாக தேர்தலிலே போட்டியிடக்கூடிய அமைப்பாக ‘தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பு’ என்றோர் அமைப்பை அம்பேத்கர் உருவாக்கினார். அந்த அமைப்பின் தேர்தல் அறிக்கையில் மிக முக்கியமானதொரு கோரிக்கையை அவர் முன்வைத்தார். அது என்னவென்றால், பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த அமைப்பிலே தங்களை இணைத்துக் கொள்வதற்கு தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பு என்ற பெயர் ஒரு தடையாக இருக்கும் என்று சொன்னால் அந்தப் பெயரையே நான் மாற்றிக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன் என்று அம்பேத்கர் அறிவித்தார். அதே போல பெரியார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பில் இணைந்து கொள்வதை நான் வேண்டாம் என்று இன்று வரை சொல்லவில்லை. அவர்கள் திராவிடர் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டாலும் இல்லை என்று சொன்னாலும் திராவிடர் இயக்கத்தின் உழைப்பின் பயனை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவருக்கும் எல்லா உரிமையும் உண்டு என்று அறிவித்தார். ஆக, இம்மக்களிடையே ஜாதி அமைப்பில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களிடையே ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்று இரு தலைவர்களும் சிந்தித்து செயல்பட்டுள்ளனர். இதை பின்பற்ற வேண்டுமே தவிர இன்றைக்கு இம்மக்களைப் பிரித்தாளக்கூடிய சூழ்ச்சிக்கு நாம் இரையாகிவிடக் கூடாது.

தலித் மக்கள் எதற்காக நாள்தோறும் வன்கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை சமூக செயல்பாட்டாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலான இந்து மத சமூக அமைப்பை கேள்வி கேட்டதால் அம்மக்கள் சேரிக்கு தள்ளப்பட்டார்கள். அன்றைக்கு வேத மதத்தை எதிர்த்த பவுத்தர்கள் எல்லாம் ஊருக்கு வெளியே தள்ளப்பட்டனர். சேரி என்பது இன்றைக்கு உருவான ஒன்றல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இம்மக்கள் சேரிக்கு தள்ளப்பட்டனர். தாழ்த்தப்பட்டவர்கள் இந்த நாட்டின் சொத்து வளங்களை எல்லாம் தங்களுடையதாக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக போராட்டங்களை நடத்தவில்லை. அவர்கள் இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தை தங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக போராட்டங்களை நடத்தவில்லை. மனிதமாண்பை மீட்டெடுப்பதற்கான மாபெரும் போராட்டங்களை அவர்கள் முன்னெடுக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் சேரிகளில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் கூறினார். இந்த மக்களுடைய போராட்டம் முதலில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இந்த மக்களுடைய போராட்டம் சுயநலத்திற்கான போராட்டம் அல்ல. ஒரு பொது நன்மைக்கான போராட்டம். அநீதிக்கு எதிரான போராட்டம் என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அதனால்தான் சக மனிதன் தெருவிலே நடக்கும் உரிமை கேட்டு வைக்கத்தில் போராடிய போது பெரியார் அம்மக்களுக்கு ஆதரவாக குரல்கொடுத்தார். இத்தகைய ஒப்புரவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதுதான் இம்மக்களிடையே ஒற்றுமையை உறுதிப்படுத்த முடியும்.

இங்கு தமிழன் என்ற அரசியல் ஓர்மைதான் முன்வைக்கப்படுகிறது. அதனடிப்படையில் தமிழ்நாட்டின் எல்லைப்பிரச்சனை, காவிரி, முல்லைப்பெரியாறு போன்ற பிரச்சனை, மற்றும் ஈழ பிரச்சனை போன்றவை எல்லாம் முன் வைக்கப்படுகின்றன. ஆனால் இப்போராட்டங்களிலே தமிழன் என்ற அரசியல் ஓர்மையோடு போராடுகிறவர்கள் போராட்டம் முடிந்தவுடன் ஊருக்கும் சேரிக்கும் பிரிந்து செல்கிறார்கள். இந்த அரசியல் ஓர்மை ஒரு சமூக ஓர்மையாக ஏன் மாற்றப்படவில்லை என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். அரசியல் போராட்டங்களை தமிழன் என்ற ஓர்மையோடு முன்னெடுப்பவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று குடும்பத்திலே ஒருவரை மணமகளாக தேர்வு செய்யும்போது தமிழன் என்ற ஓர்மை இன்றி ஜாதிய கண்ணோட்டத்தோடு நடந்து கொள்கிறார்கள். தமிழன் என்ற அரசியல் ஓர்மை சமூக ஓர்மையாக முன்னெடுக்கப்பட்டால் ஒழிய இங்கு நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நாம் நீக்கிவிட முடியாது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியபோது, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் இன்றைக்கு நாம் ஒரு குடிமகனுக்கு ஒரு வாக்கு ஒரு மதிப்பு என்று அரசியலில் சமத்துவத்தை உருவாக்கிவிட்டோம். ஆனால் சமூக பொருளாதாரத் தளங்களில் நாம் ஏற்றத்தாழ்வுகளை அப்படியே வைத்திருக்கிறோம். இந்த இடைவெளியை எவ்வளவு விரைவில் நாம் இட்டு நிரப்புகிறோமோ அந்த அளவிற்கு நல்லது. இல்லையென்று சொன்னால் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் பாதிப்புக்குள்ளாகும் மக்கள் திரண்டெழுந்து நாம் உருவாக்கி இருக்கக்கூடிய நாடாளுமன்ற ஜனநாயகத்தை தகர்த்தெறிந்து விடுவார்கள் என்று அம்பேத்கர் எச்சரித்தார். ஆனால் நாம் நாள்தோறும் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை இன்னும் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அதற்கு இன்றைய இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் முன்வரவேண்டும். ஜாதி ஒழிப்பு பணிக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

இந்திய பூமி என்று சொன்னாலும் இந்து பூமி என்று சொன்னாலும் அது ஜாதி எனும் கான்க்ரீட் தளத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. நீங்கள் சோசலிச சித்தாந்தத்தையோ, கம்யூனிச சித்தாந்தத்தையோ, தமிழ்த்தேசிய சித்தாந்தத்தையோ இம்மண்ணில்

(4ஆம் பக்கம்)

# சரசுவதிக்கு பூஜை போட்டவன் தற்குறி; மலம் துடைத்தவன் அறிவாளி

**– பெரியார் –**

சரசுவதி பூசை என்பது ஓர் அர்த்தமற்ற பூசை. கல்வியையும் தொழிலையும் ஒரு பெண் தெய்வமாக்கி – அதற்குச் சரசுவதி என்று பெயர் கொடுத்து, அதைப் பூசை செய்தால் கல்வி வரும், வித்தை வரும் என்றும் சொல்லி, நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி, கல்வி கற்கச் சொந்த முயற்சி இல்லாமல் சாமியை நம்பிக் கொண்டு இருக்கும்படிச் செய்துவிட்டு, நாம் அந்தச் சாமி பூசையின் பேரால் கொடுக்கும் பணத்தைக் கொண்டே அவர்கள் படித்துப் பெரிய படிப்பாளியாகிக் கொண்டு நம்மைப் படிப்பு வர முடியா 'மக்குகள்' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

முதலாவது, சரசுவதி என்னும் சாமியின் சொந்த யோக்கியதையைக் கவனித்தால், அது பார்ப்பனர்கள் புராணக் கதைகளின்படியே மிக்க ஆபாசமானதாகும். அதாவது, சரசுவதி என்கிற ஒரு பெண் பிரம்மனுடைய சரீரத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட பிறகு அழகைக் கண்டு அந்த பிரம்மனாலேயே மோகிக்கப்பட்டு அவளைப் புணர அழைக்கையில், அவள் பிரம்மனைத் தகப்பன் என்று கருதி அதற்கு உடன்படாமல் பெண்மான் உருவெடுத்து ஓடவும், பிரம்மன் தானும் ஓர் ஆண்மான் உருவெடுத்து அவளைப் பின் தொடர்ந்து ஓடவும், சிவன் வேடன் உருவெடுத்து ஆண்மானைக் கொல்லவும், பிறகு சரசுவதி அழுது சிவபிரானால் மறுபடியும் உயிர்ப்பிக்கச் செய்து பிரம்மனுக்கு மனைவியாகச் சம்மதித்ததாக சரசுவதி உற்பவக் கதை சொல்கிறது. அதாவது, தன்னைப் பெற்றெடுத்த தன் தகப்பனையே மணந்து கொண்டவள் சரசுவதி என்று ஆகிறது.

மற்றொரு விதத்தில் பிரம்மாவுக்குப் பேத்தி என்று சொல்லப்படுகிறது. அதாவது, பிரம்மா ஒரு காலத்தில் ஊர்வசியின்மீது ஆசைப்பட்டபோது வெளியான இந்திரியத்தை ஒரு குடத்தில் விட்டு வைக்க, அக்குடத்திலிருந்து அகத்தியன் வெளியாக, அவ்வகத்தியன் சரசுவதியைப் பெற்றான் என்று சொல்லப்படுகின்றது. அதனால் பிரம்மாவுக்கு சரசுவதி மகன் வயிற்றுப் பேத்தி ஆகிறாள். எனவே, சரசுவதியின் பிறப்பும் வளர்ப்பும் நடவடிக்கையும் மேற்படி பார்ப்பனப் புராணப்படி மெத்த ஆபாசமும் ஒழுக்க ஈனமுமானதாகும்.

நிற்க, இந்த யோக்கியதையுடைய அம்மாளை எதற்காக மக்கள் பூசை செய்கிறார்கள் என்பது இதைவிட மிகவும் வேடிக்கையான விஷயமாகும். அதாவது, சரசுவதி வித்தைக்கு அதிபதியான தெய்வமாதலால் வித்தையின் பயன் தொழிலென்றும், தொழிலுக்கு ஆதாரமானவை ஆயுதங்கள் என்றும் கருதிக் கொண்டு – சரசுவதி பூசை என்றும் ஆயுத பூசை என்றும் ஒரு நாளைக் குறித்துக் கொண்டு, அந்த நாளை விடுமுறையாக்கி, புத்தகங்களையும் ஆயுங்களையும் வைத்துப் பூசை செய்கிறார்கள். இந்தப் பூசையில் அரசன் தனது ஆயுதங்களையும், வியாபாரி தனது கணக்குப் புத்தகங்களையும் தராசு, படிக்கல், அளவு, மரக்கால், படி, உழக்கு, பெட்டி முதலியவைகளையும், தொழிலாளிகள் தங்கள் தொழில் ஆயுதங்களையும், இயந்திரக்காரர்கள் இயந்திரங்களையும், மாணாக்கர்கள் புத்தகங்களையும், குழந்தைகள் பொம்மைகளையும், தாசிகள் தங்கள் ரவிக்கை சேலைகளையும், நகைகளையும், வாத்தியக்காரர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளையும் மற்றும் இதுபோலவே ஒவ்வொருவரும் அவரவர்கள் இலட்சியத்திற்கு ஆதாரமாக வைத்திருக்கும் சாமான்களை வைத்துப் பூசை செய்கிறார்கள்.

இதனால் அந்தத் தினத்தில் தொழில் நின்று அதனால் வரும்படிகளும் போய், பூசை, ஓய்வு முதலிய ஆடம்பரங்களுக்காகத் தங்கள் கையில் இருக்கும் பணத்திலும் ஒரு பாகத்தைச் செலவு செய்தும், போதாவிட்டால் கடன் வாங்கியும் செலவு செய்வதைவிட யாதொரு நன்மையும் ஏற்படுவதாகச் சொல்லுவதற்கே இல்லாமல் இருக்கின்றது. ஆயுதத்தை வைத்துப் பூசை செய்துவந்த – வருகின்ற அரசர்கள் எல்லாம் இன்றைய தினம் நம் நாட்டில் ஆயுதத்தை வைத்துப் பூசை செய்யாத வெள்ளைக்கார அரசனுடைய துப்பாக்கிமுனையில் மண்டி போட்டு சலாம் செய்து கொண்டே 'இஸ்பேட் ராசாக்களாக' இருந்து வந்தார்களே ஒழிய, ஒரு அரசனாவது சரசுவதி பூசை, ஆயுத பூசை ஆகிய பூசையின் பலத்தால் தன் காலில் தான் தைரியமாக நின்றவனாகக் காணோம்.

சரசுவதி பூசை செய்யும் ஒரு வியாபாரியாவது சரசுவதிக்குப் பயந்து பொய்க் கணக்கு எழுதாமலோ, தப்பு நிறை நிறுக்காமலோ, குறை அளவு அளக்காமலோ இருக்கிறார்களா என்று சொல்ல முடியாது. அதுபோலவே, கைத் தொழிலாளிகளும் தங்கள் ஆயுதங்களிடத்தில் வெகு பக்தியாய் அவைகளைக் கழுவி, சந்தனம், குங்குமம், பொட்டு முதலியவைகள் போட்டு விழுந்து கும்பிடுவர்களே தவிர – ஒருவராவது நாணயமாய் நடந்து கொள் கின்றார்கள் என்றாவது அல்லது அவர்களுக்குத் தாராளமாய்த் தொழில் கிடைக்கின்றது என்றாவது சொல்லு வதற்கு இல்லாமலே இருக்கின்றார்கள். அதைப்போலவே, புத்தகங்களையும், பென்சிலையும், கிழிந்த காகிதக் குப்பைகளையும் சந்தனப் பொட்டு போட்டுப் பூசை செய்கின்றார்களே அல்லாமல் – காலோ கையோ பட்டுவிட்டால் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கும்பிடுகிறார்களே அல்லாமல் – நமது நாட்டில் படித்த மக்கள் 100க்கு 5 பேருக்குள்ளாகவே இருந்து வருகின்றார்கள்.

இவ்வளவு ஆயுத பூசை செய்தும், சரசுவதி பூசை செய்தும், இவ்வளவு விரதங்கள் இருந்தும் நமது அரசர்கள் அடிமைகளாக இருக்கின்றார்கள்; நமது வியாபாரிகள் நஷ்டமடைந்து கொண்டு வருகின்றார்கள். நமது தொழிலாளர்கள் தொழிலில்லாமல் பிழைப்பைக் கருதி வேறு நாட்டிற்குக் குடி போகின்றார்கள்; நமது மக்கள் 100க்கு 5 பேரே படித்திருக்கின்றார்கள். சரசுவதியின் சாதியைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்துக்கு 9 பேரே படித்திருக்கிறார்கள். இதன் காரணம் என்ன?

நாம் செய்யும் பூசைகளை சரசுவதி அங்கீகரிக்கவில்லையா? அல்லது, சரசுவதி தெய்வத்திற்கும் இந்த விஷயங்களுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லையா? அல்லது, சரசுவதி என்கின்ற ஒரு தெய்வமே பொய்க் கற்பனையா? என்பவையாகிய இம் மூன்றில் ஒரு காரணமாகத்தான் இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் இவைகள் சுத்த முட்டாள்தனமான கொள்கைகள் என்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக்காரத் தேசத்தில் சரசுவதி என்கின்ற பேச்சோ கல்வித் தெய்வம் என்கின்ற எண்ணமோ சுத்தமாய்க் கிடையாது.

அன்றியும், நாம் காகிதத்தையும் எழுத்தையும் சரசுவதியாய்க் கருதித் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டும், நமக்குக் கல்வி இல்லை. ஆனால், வெள்ளைக்காரன் மல உபாதைக்குப் போனால், 'சரசுவதியை'க் கொண்டே மலம் துடைத்தும் – அவர்களின் 100க்கு 100 ஆண்களும் 100க்கு 60 பெண்களும் படித்திருக்கிறார்கள். உண்மையிலேயே சரசுவதி என்ற தெய்வம் இருக்குமானால் பூசை செய்பவர்களைத் தற்குறிகளாகவும், தன்னைக் கொண்டு மலம் துடைப்பவர்களை அபார சக்தி வாய்ந்த அறிவாளிகளாகவும் கல்வி மான்களாகவும் செய்யுமா என்பதைத் தயவுசெய்து யோசித்துப் பாருங்கள்.

உண்மையிலே யுத்த ஆயுதம், கைத்தொழில் ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவைகள் சரசுவதி என்னும் தெய்வ அம்சமாய் இருக்குமானால் – அதைப் பூசை செய்யும் இந்த நாடு அடிமைப்பட்டும், தொழிலற்றும், வியாபாரமற்றும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவும் – சரசுவதியைக் கனவிலும் கருதாது, சரசுவதி பூசை செய்கின்றவர்களைப் பார்த்து முட்டாள்கள், அறிவிலிகள், காட்டுமிராண்டிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் நாடு சுதந்திரத்துடனும், வியாபாரிகள் அரசாட்சியுடனும் – தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பாருங்கள்! இந்தப் பூசையின் மூலம் நமது முட்டாள்தனம் எவ்வளவு வெளியாகின்றது, பாருங்கள்!

இராசாக்கள் கொலுவிருப்பது, பொம்மைகள் கொலுவிருப்பது, சாமிகள் கொலுவிருப்பது, இதற்கான ஜனங்கள் பணம் செலவு செய்வது, அறிவு செலவு செய்வது, பத்து இலட்சக்கணக்கான ரூபாவுக்களுக்குப் பொம்மைகள், சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி, கடலை, பொரி, சுண்டல், வடை, மேளவாத்தியம், வாழைக் கம்பம், பார்ப்பனர்களுக்குத் தட்சணை, சமாராதனை, ஊர்விட்டு ஊர் போக இரயில் சார்ஜ் – ஆகிய இவைகள் செலவாகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள்.

இவைகள் எல்லாம் யார் வீட்டுப் பணம்? தேசத்தின் செல்வமல்லவா என்றுதான் கேட்கின்றேன். ஒரு வருடத்தில் இந்தப் பூசையில் இந்த நாட்டில் செலவாகும் பணமும் நேரமும் கோடி ரூபா பெறுமானது என்று கணக்குப் பார்த்தால், மற்ற பண்டிகை, உற்சவம், புண்ணிய தினம், அர்த்தமற்ற சடங்கு என்பவைகளின் மூலம் செலவாகும் தொகை சுலபத்தில் விளங்கிவிடும். இதை எந்தப் பொருளாதார இந்தியத் தேசிய நிபுணர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை.

**(ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்தில் பெரியார் சொற்பொழிவு, 'குடிஅரசு' 20.10.1929)**



# தூத்துக்குடியில் நாத்திகம் பி.இராமசாமி 6ஆம் ஆண்டு நினைவேந்தல்: சாதி எதிர்ப்புப் பரப்புரை

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரியில் 'நாத்திகம்' இதழ் நிறுவனர் மறைந்த நாத்திகம் பி. இராமசாமி 6ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம், 'எங்கள் தலைமுறைக்கு சாதி வேண்டாம்; எங்கள் இளைய சந்ததிக்கு வேலை வேண்டும்' என்ற கொள்கை விளக்கப் பொதுக் கூட்டமாக 24.9.2015 அன்று ஆழ்வை சீரணி அரங்கில் ஆழ்வை ஒன்றிய கழகம் சார்பில் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்திற்கு ஆழ்வை ஒன்றிய கழகத் தலைவர் நாத்திகம் பா.முருகேசன் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ச.கா. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, செ. செல்லத்துரை, கோ.அ. குமார், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு மற்றும் ஆதித் தமிழர் பேரவை மாநில இளைஞரணி செயலாளர் அருந்ததி அரசு ஆகியோர் உரைக்குப் பின், கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் சிறப்புரை யாற்றினார். அவர் தமது உரையில் நாத்திகம் பி.இராமசாமியின் பணிகளை நினைவு கூர்ந்ததோடு, நாட்டில் நிலவும் கனிமவளக் கொள்ளை, சாதி ஆணவக் கொலைகள் இவற்றைக் கண்டித்தும், தனியார் துறையில் இடஒதுக்கீடு ஏன் வேண்டும் என்பதையும் மத்திய அரசுப் பணியில் பிற்படுத்தப்பட்ட மக்களின் தேக்க நிலையினை சுட்டிக்காட்டி, சாதியின் பெயரால் சண்டையிட்டது போதும், நமது உரிமைகளுக்காக நமது இளைய சந்ததிகளுக்கு வேலை பெறுவதற்கு போராட வாருங்கள் என அழைப்பு விடுத்து சிறப்புரையாற்றினார். இறுதியில் ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயக்குமார் நன்றி கூறினார்.

நிகழ்வை, தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் ச. ரவிசங்கர், மாவட்ட அமைப்பாளர் பால்.அறிவழகன், மாவட்டப் பொருளாளர் சு.வீரபெருமாள், நெல்லை காசி ஆகியோர் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கழகத் தோழர்கள் மற்றும் ஆதித் தமிழர் பேரவை தோழர்கள் திரளாகக கலந்து கொண்டனர். கடைசி வரை கூட்டம் கலைந்து செல்லாமல் இறுதி வரை உரையினைக் கேட்டனர். இரவு தோழர்களுக்கு உணவினை நாத்திகம் பா. முருகேசனார் ஏற்பாடு செய்திருந்தார்.

# சுயமரியாதை அகராதி

அடுத்த ஜென்மம் என்பது முடிச்சு மாறிகள் பேச்சு
ஆரியர் சூழ்ச்சி அறிவுக்கு வீழ்ச்சி
இதிகாசம் என்பது மதிமோச மயக்கம்
உண்மையைச் சொல்ல ஒருபோதும் தயங்காதே!
ஊழ்வினை என்பது ஊக்கத்தைக் கெடுப்பது
கருமாந்திரம் என்பது காசுபறிக்கும் தந்திரம்
கல்லைத் தெய்வமென்று கற்பிக்க வேண்டாம்
கோத்திரம் என்பது குலத்தைப் பிரிப்பது
சனாதன தர்மம் என்பது சரியான அதர்மம்
சாமி சாமி என்பது காமிகளின் உளறல்
சூத்திரன் என்றால் ஆத்திரங் கொண்டடி
திதியைக் கொடுப்பது நிதியைக் கெடுப்பது
தெய்வ வழிபாடு தேச மக்களுக்குக்கேடு
பார்ப்பனர்கள் என்போர் பகற்கொள்ளைக்காரர்கள்
புராணங்கள் என்பவை பொய்மைக் களஞ்சியங்கள்
பேதமென்பது வேதியருக்கணிகலம்
மகாபாரதம் என்பது பஞ்சமாபாதகம்
மடத் தலைவர்கள் மடமைத் தலைவர்கள்
மதக்குறி என்பது மடமைக்கு அறிகுறி
முக்தி முக்தி என்று புத்தியைக் கெடுக்காதே
விதி விதி என்பது மதியைக் கெடுப்பது
வேதம் என்பது சூதாய்ச் சொன்னது
ஜாதி வேறுபாடு ஜன சமூகக் கேடு
க்ஷேத்திரமென்பது சாத்திரப்புரட்டு!

– 'குடிஅரசு' 28.2.1930

# தூத்துக்குடி மாவட்டக் கழக தோழர்களின் புதிய அணுகுமுறை

# செப்.17இல் இல்லம் தேடி சந்திப்பு

தந்தை பெரியாரின் 137ஆவது பிறந்த நாள் விழாவை கொண்டாடும் வகையில் 17.9.2015 அன்று தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்ட கழகச் சார்பில் ஒரு நாள் முழுவதும் தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சந்திப்பு என்றும், மாலை குடும்ப விழாவாகவும் கொண்டாடப் பட்டது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆலோசனைப்படி, இவ்விழாவினை கடந்த ஆண்டு 17.9.2014 அன்று தூத்துக்குடி பகுதியில் மிக சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை மாணவர் கழகம் சார்பில் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று, பாவூர் சத்திரம் பகுதியில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவை தோழர்கள், ஆதரவாளர்கள் சந்திப்பாக நடத்த திட்டமிட்டு, முதல் நிகழ்வாக, கீழப்பாவூர் பெரியார் திடலிலுள்ள பெரியார் சிலைக்கு கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் சுப்பையா மாலை யணிவித்ததோடு தொடங்கியது. தோழர்கள் இரு சக்கர வண்டியில் கொடிகளை கட்டிக் கொண்டும் கார்களிலும் அணிவகுத்து வந்தது பொது மக்களை பெரிதும் கவர்ந்தது.

தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களைச் சந்தித்து கழக வெளியீடுகளையும், பெரியாரியல் புத்தகங் களையும் அன்பளிப்பாக வழங்கி, தொடர்ந்து கழகத் திற்கு தங்கள் ஆதரவை தர வேண்டுமென பொறுப் பாளர்கள் கேட்டுக் கொண்டனர். குழந்தைகள் மற்றும் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. போகும் இடங்களில் தோழர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியது, பெரும் மகிழ்வை கொடுத்தது. தி.மு.க., ம.தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சியினரையும் அமைப்பு சாராத பெரியாரியல் சிந்தனையாளர் களையும் நாம் தேடி சென்றது, அவர்களுக்கு வியப்பாக இருந்தது. ஓட்டு கேட்கத்தான் மற்ற கட்சிக்காரன் வருவான்; பெரியார் கொள்கையைச் சொல்ல, புத்தகம் வழங்க வந்தது, மகிழ்வை தருகிறது. பெரியார் இயக்கத்திற்கு தோல்வி என்பதே இல்லை என நமக்கு உற்சாகம் ஊட்டினர் தோழர்கள்.

அவர்கள் வீட்டுக்கு நாம் செல்வதற்காக வீட்டி லிருந்து நமக்கு அழைப்புக் கொடுத்து வாருங்கள் என அழைத்தனர். தி.மு.க. ஒன்றிய செயலாளர் கூ.சு.இராமச்சந்திரன் பல்வேறு நிகழ்வுக்கிடையில் நமது தோழர்களை சந்தித்து அளவளாவினார். தானாக முன்வந்து ரூ.500 நன்கொடையும் வழங்கினார். நாங்கள் நன்கொடைக்கு வரவில்லை என நமது நிலையை விளக்கினோம். அவர் மகிழ்வாக இந்த நிகழ்விற்கு எனது பங்களிப்பு என நம்மிடம் பணத்தைக் கொடுத்தார்.

மதியம் 2.30 மணியளவில் நெல்லை மாவட்ட அமைப்பாளர் சு. அன்பரசு தோட்டத்தில் மதிய உணவு விருந்தாக வழங்கப்பட்டது. அதன் பின் தோழர்கள், தாம் பெரியார் இயக்கத்திற்கு வந்தது குறித்தும், இனி அமைப்பை எந்த வகையில் கொண்டு செல்ல வேண்டும் என்றும், தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சந்திப்பின் நிறை குறைகள் பற்றியும் கருத்து தெரிவித்துப் பேசினர். கலாவதி பேசும்போது, “மாதம் நூறு ரூபாய் சந்தாவாக தோழர்கள் செலுத்த வேண்டும் எனவும், அடுத்த பெரியார் பிறந்த நாள் விழா குடும்ப விழாவாக, குழந்தைகள் கலை நிகழ்வுகளுடன் நடைபெற வேண்டும். மற்றும் தோழர்கள் தங்கள் வீட்டிலிருந்து பெண்களை கண்டிப்பாக இயக்க நிகழ்விற்கு அழைத்து வரவேண்டும்” என தனது கருத்தினை பதிவு செய்தார். பயிலரங்கம் மற்றும் பரப்புரைப் பயணம் குறித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

நிறைவாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், “பெரியார் இயக்கம் என்பது ஒரே குடும்பம் என்பதை தோழர்கள் உணரவேண்டும். தோழர்கள் பெண்ணுரிமை குறித்து புரிதல் இல்லாமல் இருப்பதுவும், வீடுகளில் பெண்களை நாம் நடத்தும் விதம்தான், நாம் பொது வாழ்விற்கு வருவதற்கு தடையாக இருக்கிறது. பெண்களை சக மனுஷியாக பெரியார் வழியில் பாருங்கள். பெண்களும் உங்களோடு இயக்க நிகழ்விற்கு வருவார்கள். சுய ஒழுக்கம் மிக்க ஒருவனால்தான் பொது ஒழுக்கத்தை காப்பாற்ற முடியும். குறைந்த அளவு நமது வீட்டில் நாம் அதனை நிறைவு செய்வோம்” என வலியுறுத்தினார்.

குடும்ப விழா நிறைவு பெற்றதும் மறைந்த கழக நெல்லை மாவட்ட முன்னாள் தலைவர் குறும்பலா பேரி வடிவேல் அய்யா வீட்டிற்கு தோழர்கள் அனைவரும் சென்று, அவர்கள் குடும்பத்தாருடன் அளவளாவினர். குளிர்பானம் கொடுத்து அனைவரையும் அய்யா வடிவேல் குடும்பத்தினர் வரவேற்றனர்.

சுயமரியாதை (திராவிடர் கழக) கோட்டையாகத் திகழும் கீழப்பாவூர், பாவூர் சத்திரம் பகுதியில் தோழர்களின் பயணம் மிக உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிகழ்வில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், நெல்லை மாவட்டச் செயலாளர் சி.ஆ.காசிராசன், நெல்லை மாவட்ட அமைப்பாளர் சு. அன்பரசு, கீழப்பாவூர் ஒன்றியத்தலைவர் மாசிலாமணி, ஒன்றிய செயலாளர் சுப்பையா, ஒன்றிய பொருளாளர் சங்கர், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் தமிழன், தோழர் கலாவதி, நெல்லை தோழர்கள் வெற்றிமணி, இலட்சுமணன், மெக்கானிக் தங்கத்துரை, சபாபதி, பெரியார் திலீபன், தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, மாவட்டச் செயலாளர் ரவிசங்கர், மாவட்ட அமைப்பாளர் பால். அறிவழகன், மாவட்டப் பொருளாளர் வீர பெருமாள், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, தமிழ்நாடு மாணவர் கழக தூத்துக்குடி மாவட்ட தலைவர் கண்ணதாசன், ஜெயாஸ்டின் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வை தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப் பாளர் தமிழன், மாவட்ட கழக அமைப்பாளர் சு. அன்பரசு, கீழ்ப்பாவூர் ஒன்றியத் தலைவர் மாசிலா மணி ஆகியோர் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய் திருந்தனர்.

### இராயக்கோட்டையில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை

கிருஷ்ணகிரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 29.09.2015 அன்று தந்தை பெரியாரின் 137ஆவது பிறந்த நாள் விழா, எங்கள் தலை முறைக்கு சாதி வேண்டாம் எங்கள் சந்ததிக்கு வேலை வேண்டும்; மக்களின் விளை நிலங்களை அபகரிக்கும் தனியார் நிறுவனங்களை கண்டித்தும் இராயகோட்டை பேருந்து நிலையத்தில் 29.09.2015 மாலை 4.00மணியளவில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு முனுசாமி தலைமை தாங்கினார். க.குமார், மாவட்ட செயலாளர் முன்னிலை வகித்தார். தி.குமார், மாவட்டத் தலைவர் வரவேற் புரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, எழுத்தாளர் வே. மதிமாறன், தமிழரசன், தமிழ்தேசக் குடியரசு இயக்கம், கலைச்செல்வி, பகுத்தறிவாளர் கழகம், பெங்களூரு, பிசிஆர் பள்ளித் தாளாளர் பிசிஆர். மனோகரன் ஆகியோர் சிறப் புரையாற்றினர். கூட்டத்தின் முடிவில் சங்கர் கெலமங்கலம் நன்றி யுரையாற்றினார். தி.வி.க. மாவட்ட அமைப்பாளர்கள் சிவ.மனோகர், ராஜேஷ், ஜெய ராமன், தோழமை இயக்கத்தினர் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர். கூட்டம் சிறப்பாக நடந்தது.

### தூத்துக்குடி, நெல்லையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிப்பு

தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் முன்புள்ள பெரியார் சிலைக்கு 17.9.15 காலை 7 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாலை அணிவிப்பு நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ச. ரவிசங்கர் மாலை அணிவித்தார். இந்நிகழ்வில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு, மாவட்டப் பொருளாளர் வீரபெருமாள், மாவட்ட அமைப்பாளர் பால். அறிவழகன், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, தமிழ் நாடு மாணவர் கழக மாவட்டத் தலைவர் கண்ணதாசன், மாணவர் கழக மாவட்டச் செயலாளர் பிரபாகரன் மற்றும் கழகத் தோழர்களும், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

**நெல்லை:** பாளையங் கோட்டை பேருந்து நிலையம் முன்புள்ள தந்தை பெரியார் சிலைக்கு நெல்லை மாவட்டக் கழகச் சார்பில் 17.9.2015 அன்று காலை 8.30 மணி அளவில் பெரியாரின் 137ஆவது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் மாலை அணிவிப்பு நிகழ்வு நடை பெற்றது. நெல்லை மாவட்டச் செயலாளர் சி.ஆ.காசிராசன் மாலை அணிவித்தார். பால். பிரபாகரன், அருணாபேரி, கலையரசன் மற்றும் தூத்துக்குடி நெல்லை மாவட்ட பொறுப் பாளர்கள் மற்றும் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### திருப்பூரில் கழகத்தின் சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா!

திருப்பூரில் தந்தை பெரியார் பிறந்தநாள் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இரு சக்கர வாகன ஊர்வலம் மற்றும் 20 இடங்களில் கொடியேற்று விழாவாக நடைபெற்றது.

04.10.2015 அன்று காலை 10 மணிக்கு திருப்பூர் இராயபுரத்தில் துவங்கிய இரு சக்கர வாகன ஊர்வலம் மற்றும் கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் முகில்ராசு தலைமை தாங்கி னார். மாநில பொருளாளர் துரைசாமி ஊர்வலத்தைத் துவங்கி வைத்தார். ஊர்வலத்தின் துவக்க உரையை சூலூர் பன்னீர் செல்வம் நிகழ்தினார். பறையிசை முழங்க இராயபுரம் பகுதி கழகக் கொடியை மாநகர செயலாளர் நீதிராசன் ஏற்றி வைத்தார்.

வாகன ஊர்வலம் திருப்பூரின் முக்கிய சாலைகளின் வழியாக இரயில் நிலையம், மாஸ்கோ நகர், கண்ணகி நகர், கொங்கனகிரி, பாலமுருகன் வீதி, திருவள்ளுவர் நகர், ஜீவா நகர், ரங்கனாதபுரம், சாமுண்டிபுரம், பெரியார் காலனி, அம்மாபாளையம், ஆத்துப் பாளையம், போயம்பாளையம், புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், சந்தைப் பேட்டை, இடுவம்பாளையம், முருகம்பாளையம், வீரபாண்டி பிரிவு ஆகிய இடங்களில் கொடியேற்றப்பட்டது. கொடியேற்றிய ஒவ்வொரு இடங்களிலும் கழகத் தோழர்கள் தெருமுனைப் பிரச்சாரம் செய்து கூடியிருந்த மக்களுக்கு திராவிட இயக்கக் கொள்கைகள், சாதனைகள், இயக்கத்தின் செயல்பாடுகளை எடுத்துரைத்தனர்.

இறுதியில் மாலை 7 மணியளவில் வீரபாண்டி பிரிவில் கொடியேற்றத்துடன் வாகன ஊர்வலம் நிறைவடைந்தது. மாதவன் நன்றியுரை ஆற்றினர்.

இந்த பெரியார் பிறந்த நாள் நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, அகிலன் உள்ளிட்ட 50 தோழர்கள் கலந்து கொண்டனர்.

## செயற்கைக் கருத்தரிப்பிலும் ஜாதி வெறி

பண்டைய பீகார், கல்வியில் மிகவும் சிறந்து விளங்கியது. அங்கேதான் ‘நாளந்தா’, ‘விக்கிரமசீலா’ போன்ற பௌத்தப் பல்கலை கழகங்கள் இருந்தன. ஆனால் இன்று, கல்வியில் பீகார் மிகவும் பின்தங்கியிருக்கிறது. வேலை கிடைக்காமல் பிழைப்பு தேடி, மாநிலம் விட்டு மாநிலம் அலையும் பீகாரிகளை எல்லா இரயில் நிலையங்களிலும் காண முடிகிறது. பீகாரிகளின் வாழ்க்கை அவலத்தை, சாதியக் கொடுமைகளைக் காண முடிகிறது. பௌத்த சமயம் வேர் ஊன்றிய பீகாரில் ஏன் இன்னும் சாதிப் பிரச்சினை அப்படியே இருக்கிறது ? காரணம், நிலப்பிரபுத்துவம் அப்படியே இருக்கிறது. விவசாயக் கிராமங்களில் இன்றும் உயர்சாதியினரே தலைவர்களாக இருக்கிறார்கள். சாதிய ஒடுக்குமுறை வெளிப்படையாகவே நடைபெறுகிறது.

பாட்னாவில் உள்ள விந்து வங்கிகளில் சாதிவாரியாக விந்து சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. ‘செயற்கைக் கருத்தரிப்பில்கூட சாதிக் கலப்பு வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள்’ என்கிறார் மருத்துவர் சின்ஹா. இதை உறுதிப்படுத்துவதுபோல ஒரு சம்பவம் கயா மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

செயற்கைக் கருத்தரிப்பு செய்து, கர்ப்பம் தரித்த மாலா என்கிற இளம் பெண் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட போது, அவளது கர்ப்பத்துக்குக் காரணமாக அமைந்த விந்து, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவருடையது எனச் சந்தேகித்த கணவன், குழந்தை பிறந்தவுடனேயே கொன்று, சாக்கடையில் எறிந்து விட்டான். அத்துடன் தாழ்ந்த சாதி கருவைச் சுமந்தாள் என்பதற்காக மனைவியையும் விலக்கி வைத்துவிட்டான். இப்படி பீகாரில் புரையோடிப்போன நோயாக சாதி வளர்ந்திருக்கிறது.

‘ஆனந்த விகடன்’ செப்.29, ஏட்டில் எழுத்தாளர் எஸ். இராமகிருட்டிணன்

DATE OF PUBLICATION 22.10.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# மாற்றுக் கருத்தினரையும் மதித்த மாண்பாளர் பெரியார்

*1939இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையிலடைக்கப்பட்ட பெரியாருடன் ஒரே சிறையில் இருந்தவர் மறைமலை அடிகளாரின் மகன் மறை. திருநாவுக்கரசு. பெரியாரின் மனித நேய உணர்வுகளை வியந்து பாராட்டி, இவர் எழுதிய கட்டுரை 1991ஆம் ஆண்டு 'இளந்தமிழன்' ஏட்டில் வெளி வந்திருக்கிறது.*

*கருத்து மாறுபாடுகளையும் கடந்த பெருந் தன்மையும், மனித நேயமும் தமிழினப் பார்வையில் உயர்ந்து நின்றதை பல்வேறு நிகழ்வுகளுடன் படம் பிடித்துக் காட்டுகிறது, இக்கட்டுரை.* (சென்ற இதழ் தொடர்ச்சி)

**சிறை குற்றவாளிகளிடம் கனிவு**

சிறைச்சாலையில் இருக்கும் பொழுது, அங்கிருந்த ஏழைக் குற்றவாளிகள் இவருடைய மீசை தாடியை பார்த்து இவர் ஒரு துறவியார் (சாமியார்) என்று நினைத்துக் கொள்வார்கள். எனவே அவ்வப்பொழுது அவர்கள் வந்து இவர் கால்களில் விழுந்து கும்பிட்டு, ஐயா ! பெரியவரே ! சாமி ! நாங்கள் ஏதோ பெரிய தீவினை (பாவம்) பண்ணிவிட்டு, சிறையிலே வந்து சேர்ந்திருக்கிறோம்; எங்களுக்கு மன்னிப்பு உண்டா ? கடவுள் எங்களது தீவினையை (பாவத்தை) நீக்குவாரா ? நீங்கள் எங்களுக்கொரு நல்ல வழி காட்ட வேண்டுமென்று கேட்பார்கள். அப்பொழுது இவர் நிரம்ப மனம் உருகி அவர்கள் மனம் கொள்ளுமாறு, சொல்லுவது போல் பேசுவார். 'என்னப்பா, எல்லாவற்றிலும் நம்ம செயல் என்ன இருக்கிறது; நீங்களா தப்பு செய்தீர்கள் ? எல்லாம் உள்ளே இருந்து கொண்டு நம்ம தீவினை (பாவம்) நல்ல வினைகளுக்கு (புண்ணியங்களுக்கு) ஏற்றபடி நம்மைக் குற்றங்களைச் செய்யச் சொல்கிறான். அவற்றையெல்லாம் குற்றமென்று சொல்ல முடியாதப்பா ! அவன் தானே நம்மையெல்லாம் ஏவுகிறான்'' என்பார். உடனே அந்தக் குற்றவாளி களெல்லாம், 'சாமி ! சாமி ! ஆமாம் ! ஆமாம் ! நீங்கள் சொல்லுகிறதெல்லாம் சரி !' என்று கண்ணீர் மல்கச் சொல்வார்கள். அதற்கு அவர் மீண்டும், 'வருத்தப்பட வேண்டா'ம்பா; மக்களாகப் பிறந்தால் நல்வினைத் தீவினைகளை நிறுத்த முடியுமா ? எல்லாம் என்ன ? எல்லாம் நம்ம தலையெழுத்து. அந்த தலையெழுத்துக்கூட அந்த முருகன் தானே நம்முடைய தலையிலே போட்டிருக்கிறான். அவனை மட்டும் மறக்காதே ! அவனைக் கும்பிட்டுக் கொண்டு இரு. இறுதியிலே நம்முடைய தீவினையெல்லாம் துன்பத்தை யெல்லாம் நீக்குவான்'' என்று சொல்லுவார் அவர்கள் மனம் அமைதியடைந்து போவார்கள்.

ஆனால், அப்பொழுதெல்லாம் அவர் அருகில் இருக்கும் நான் சிரித்துக் கொண்டு அவரிடம் அவர்கள் முன்னர் ஒன்றும் சொல்ல மாட்டேன். அப்புறம் அவர் என்னிடம் சொல்லுவார். 'அந்த அறிவில்லாதவர்களிடம் நாம் போய், சாமியில்லே; பூதமில்லே' என்று சொன்னால், அவர்கள் இன்னும் கொஞ்சம் வருத்தப்படுவார்கள். அந்த நிலைகளை இப்பொழுதெல்லாம் அவர்களிடம் விளக்க முடியுமா ? ஏதோ அவர்கள் துயரங்களை வந்து நம்மிடத்திலே சொல்லு கிறார்கள். அவர்களுக்கு ஓர் ஆறுதல் சொல்லுவோம் என்ற எண்ணத்திலே, சொன்னேன்' என்று.

இதையெல்லாம் நினைக்கையில் அவர்கள் மற்றவர்கள் மனம் மகிழ வேண்டும் என்பதற்காகச் சில சூழ்நிலைகளில் எத்தகைய பண்பாட்டோடு நடந்து கொண்டிருக் கிறார்கள் என்பதையறிந்து விளக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு அவரிடம் நான் கண்ட பல நலன்களுள் இன்னும் ஓரிரண்டையும் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

சிறையில் அவர்கள் இருந்தபொழுது, ஒரு நாள் அவர்கள் அறையில் ஒரு தாள் உறையில் யாரோ, அவர்களுடைய முக மயிர், கால் மயிர்களையெல்லாம் மழித்துப் போட்டுப் பொட்டலமாக மடித்து ஒருவன் வீசி எறிந்து விட்டுப் போய் விட்டான். ஆனால் அது போடப்படும் பொழுது அதை நாங்கள் பார்க்கவில்லை.

பெரியார் அதை எடுத்துக் கொண்டு வந்து, 'சாமி ! பார்த்தீர்களா; எனக்கு இங்கொரு பெரிய மதிப்பு (மரியாதை) கிடைச்சிருக்கு, என்று சொல்லி அதைப் பிரித்து, அதிலேயிருக்கும் முடியெல்லாம் காட்டிவிட்டுப் பின்வருமாறு 'என்னவோ, போகட்டும் ! என் மேலே அவர்களுக்கு வெறுப்பு; அதனாலே என்னை இப்படி அவமதிக்கிறார் களாம். இந்த வகையிலாவது அவர்கள் மகிழ்ச்சியாயிருந்து விட்டுப் போகிறார்கள்' என்று சொன்னார்கள். அதன் பொருட்டு அவர்கள் கவலைப்பட வில்லை. வருத்தமும் படவில்லை. பெரிய தலைவர்கள் அப்படித்தானே இருக்க முடியும். அதுபோல விருப்பு வெறுப்பற்று, உண்மையை உணர்ந்து, சூழ்நிலைகளுக்கேற்ப மனப்பான்மையை அமைத்துக் கொள்ளுகின்ற அவருடைய சிறந்த தன்மை இதனால் விளங்குகிறது. அந்த மனப்பான்மையில்தான் அவர்கள் மேல் சிறிதும் வருத்தப்படாததுடன், அவர்களை ஏசவும் இல்லை; குறையும் சொல்லவில்லை. இப்படிப்பட்ட அருமைகள் ஐயா அவர்களிடம் நிறைய உண்டு.

**பார்ப்பனர்களிடம் பெருந்தன்மை**

அக்காலத்தில் பத்மநாப ஐயங்கார் என்று ஒருவர் இருந்தார். ஏதோ திருட்டுக் குற்றத்திற்காக நாங்கள் சிறையிலிருந்த காலத்தில் அவரும் சிறையிலிருந்தார். அதே சமயத்தில் இன்னொரு ஐயங்கார் ஒரு வைப்பகத்தில் பணம் கையாடல் பண்ணி, அவரும் சிறையில் இருந்தார். இவர்களுடன் இன்னொருவரும் வேறு ஒரு குற்றத்திற்காக அவர்களுடன் இருந்தார். அந்த பத்மநாப ஐயங்கார் உச்சிக் குடுமி வைத்திருந்தார். நாளும் பகவத் கீதை படிப்பார். பட்டை நாமமெல்லாம் போட்டுக் கொள்வார்; அந்த மூன்று பேரும் பட்டம் படித்தவர்கள்தாம். ஐயா (பெரியார்) தம்மோடு சிறையிலிருந்த அண்ணாத்துரை மற்றும் இருந்தவர்களிட மெல்லாம் கூப்பிட்டுப் 'பிராமணன் கிராமணனெல்லாம் சிறைக்கு அப்பாலே, இங்கே யாருக்கும் மனம் நோக நடக்கக் கூடாது' என்று சொல்வார். இப்படிச் சொல்லிவிட்டு ஏதாவது பேசும் பொழுதெல்லாம் அவர்கள் பக்கமாகவே பேசிவிட்டு, அவருக்கு வெளியிலிருந்து வரும் பழங்களையெல்லாம் மற்ற அன்பர்களுக்குக் கொடுக்கும் பொழுது, அவர்களுக்கும் அவர்கள் இருக்கும் அறை அறையாகக் கொண்டுபோய்க் கொடுப்பார்.

சிறையிலிருக்கும் பொழுது ஐயா அவர்களுக்கு அறுபதாவது ஆண்டு விழா நடந்தது. அக்கால் நான் அங்கிருந்த 'குரோட்டன்' செடிகளையெல்லாம் பறித்து, மாலை கட்டி, அவரை உட்கார வைத்து அவர் கழுத்தில் போட்டு, நான், அண்ணாத்துரை, இன்னொருவர் (பெயர் நினைவில் இல்லை) மூவரும் அவரைப் பாராட்டிப் பேசினோம். அத்துடன் இந்த ஐயங்கார்களெல்லாம்கூட பேசினாரர்கள். அவர்கள் பேசுமபொழுது, 'நாங்கள் நூல்களில் படித்திருக்கிறோம். பெரியவர்கள் என்றால் இப்படி இப்படி இருப்பார்கள் என்பது பற்றியும், அவர்கள் அன்பு வடிவமாக இருப்பார்கள் என்றும் ! அதை இங்குக் கண்ணாலே காண்கிறோம்' என்றெல்லாம் மிக அழகாக உயர்வாகப் பேசினார்கள். அப்படி, அவர்கள் மனம் புண் படும்படி பெரியார் அவர்கள் ஒருநாள் கூட பேசினது இல்லை.

# ஜாதிகளை கடந்து மாற்றப்படும் உறுப்புகள்

தமிழகத்தில் ஒரு மாதத்துக்கு 30 உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக தமிழகத்தின் பல்வேறு மருத்துவமனைகளுடன் ஆலோசித்து வருவதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**மூளைச் சாவு :** தமிழ்நாட்டில், 'மூளைச் சாவு அடைந்தோர் உடலுறுப்பு கொடைத் திட்டம்' 2008, அக்டோபரில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடங்கிய பின் உடலுறுப்புகள் கொடை பெற்று பிற நோயாளிகளுக்குப் பொருத்தப் படுகின்றன.

மூளைச் சாவு அடைந்தவர்களிடம் இருந்து இருதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், கணையம், சிறுகுடல், இருதய வால்வுகள், கண்கள், தோல், இரத்தக் குழாய்கள் ஆகிய 10 உறுப்புகளை கொடையாகப் பெற முடியும். தமிழகத்தில் இதுவரை மூளைச்சாவு அடைந்த 676 பேர் தங்கள் உடலுறுப்புகளை கொடை அளித்துள்ளனர்.

தமிழகத்தில் ஒரு மாதத்துக்கு மூளைச் சாவு அடைந்த 15 முதல் 20 பேரின் உடலுறுப்புகளை அவர்களது உறவினர்கள் கொடையளிக்கின்றனர். ஆனால், மூளைச் சாவு அடைபவர்களின் எண்ணிக்கை இதைவிட பத்து மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது. மூளைச் சாவு அடையும் அனைவரும் தங்கள் உடலுறுப்புகளை கொடையளிக்க முன்வருவதில்லை. மேலும் உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் மருத்துவமனைகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

**தனியாரும் அரசும் :** தமிழகத்தைப் பொருத்தவரை உடலுறுப்பு மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கு அரசு மருத்துவமனைகளைவிட தனியார் மருத்துவமனைகளே அதிகம் தகுதி பெற்றுள்ளன. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்கு 50-க்கு மேற்பட்ட தனியார் மருத்துவ மனைகள் தகுதி பெற்றுள்ள நிலையில், 5 அரசு மருத்துவ மனைகள் மட்டுமே அந்தப் பட்டியலில் உள்ளன. கல்லீரல் மாற்று அறுவைச் சிகச்சை அரசு மருத்துவமனைகளில் தமிழ்நாட்டிலேயே ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மட்டும்தான் நடைபெறுகிறது. இருதயம், நுரையீரல், கணையம் ஆகிய முக்கிய உறுப்புகள் மாற்று அறுவைச் சிகிச்சைகள் எதுவும் தமிழக அரசு மருத்துவமனைகளில் செய்யப்படுவதில்லை. ஆனால், அரசு மருத்துவமனைகளில் மூளைச்சாவு அடைவோரின் உடலுறுப்புகள் அதிக அளவில் கொடையாகப் பெறப்படுவது குறிப்பிடத்தக்கது.

**தேவை அதிகம்:** இது ஒருபுறம் இருக்க, உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காகக் காத்திருப்போர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. உதாரணமாக, தமிழகத்தில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக 2000 பேர் பதிவு செய்து காத்திருக்கின்றனர். ஒரு மாதத்துக்கு அதிகபட்சமாக 40 சிறுநீர கங்கள் கொடையாகக் கிடைக்கின்றன. ஆனால், ஒரு மாதத்துக்கு 60 முதல் 70 பேர் சிறுநீரக கொடைக்காக புதிதாக தங்கள் பெயரைப் பதிவு செய்கின்றனர்.

இது குறித்து தமிழ்நாடு மூளைச் சாவு அடைந்தோர் உடலுறுப்பு கொடைத் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் டாக்டர் அமலோற்பவநாதன் கூறியதாவது:

தமிழகத்தில் மூளைச் சாவு அடைந் தோரிடம் இருந்து கொடையாகப் பெறப்பட்ட உடலுறுப்புகள் மாற்று அறுவைச் சிகிச்சைகள் ஒரு மாதத்தில் 15 நடைபெறுகின்றன. தினசரி ஒரு உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை என்ற கணக்கில் மாதத்துக்கு 30 அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் நோக்கில் பணியாற்றி வருகிறோம். இதற்காக பல்வேறு மருத்துவமனைகளுடன் கலந்தாலோசித்து வருகிறோம். பல்வேறு தனியார் மருத்துவமனைகளை உடலுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள ஊக்குவித்து வருகிறோம்.

இதற்காக மாநிலம் முழுவதுமுள்ள மருத்துவமனைகளுடன் அடிக்கடி ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறோம். பொது மக்களுக்கும் உடலுறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது என்றார்.

**3722 உடலுறுப்புகள் கொடை**

தமிழகத்தில் 2008ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 676 பேர் 3722 உடலுறுப்புகளை கொடை அளித்துள்ளனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வளர்த்தெடுக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு முன்நிபந்தனை முதல் நிபந்தனை இந்த கான்க்ரீட் பூமியை தகர்த்தெறிந்தாக வேண்டும். அதைத்தான் புரட்சியாளர் அம்பேத்கரும் பெரியாரும் செய்தார்கள். சமூக மாற்றத்திற்காகப் போராடக்கூடிய அனைவரும் இம்மாபெரும் சிந்தனையாளர்களின் அறிவாயுதத்தைப் பயன்படுத்தி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மிக்க சமூகத்தை உருவாக்குவோம் என கூறினார்.


கருத்தரங்கில் தூத்துக்குடியில் இருந்து வந்திருந்த தோழர் பால்ராஜ் மற்றும் திருவாரூர் ஆசாத் ஆகியோர் புத்தகங்கள் விற்பனை செய்தனர். அதில் ரூ. 8 ஆயிரம் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் சீனி ஜெகபர்சாதிக், அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட நிர்வாகிகள் கவிஞர் தம்பி, கவிஞர் கலைபாரதி, பெரியார் அம்பேத்கர் இளைஞர்மன்ற அமைப்பாளர் பிரகாஷ், மருதம் மீட்பு இயக்கம் அமைப்பாளர் வினோத், புதிய தமிழகம் கட்சி ஒன்றிய செயலாளர் சுரேஷ் கண்ணன், தமிழக மக்கள் முன்னேற்ற கழக ஒன்றிய செயலாளர் எஸ்.குமார் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். முடிவில் மன்னை நகர அமைப்பாளர் சசிக்குமார் நன்றி கூறினார்.

**செய்தி மன்னை இரா.காளிதாசு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 23rd October 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | அக்டோபர் 29, 2015 | புரட்சி 14 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00


## ‘அருந்ததினர்’ மீதான தாக்குதல் கடும் கண்டனத்துக்குரியது

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகிலுள்ள வெட்டல் நாயக்கன்பட்டியைச் சார்ந்த அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞர் பாலமுருகன் என்பவருக்கும் ஆதி திராவிடர் (பறையர்) சமூகத்தைச் சார்ந்த நதியா என்பவருக்கும் காதல் திருமணத்தை தமிழ்ப் புலிகள் அமைப்பைச் சார்ந்த மாவட்ட செயலாளர் போஸ் (இவர் அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்தவர்) நடத்தி வைத்துள்ளார்.

இதற்காக விடுதலை சிறுத்தைகள், புரட்சிப் பாரதம், பறையர் பேரவை அமைப்பைச் சார்ந்தவர்கள், அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த போஸ் என்ற தோழரை கொடூரமாக கொலை வெறியோடு தாக்கியதாக செய்திகள் வந்துள்ளன.

இதேபோன்று விழுப்புரம் கச்சிராப்பாளையம் அருகே உள்ள கரடி சித்தூரில் ஆதிதிராவிடர் பரிமளா என்பவரை (பறையர் சமூகம்) அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த இளைஞன் வீரன் என்பவர் காதலித்து இருவரும் ஊரை விட்டே ஓட நேர்ந்தது. தொடர்ந்து அருந்ததியர் சமூகப் பெண்கள் நான்கு பேரை மந்தையில் நிறுத்தி மானபங்கப்படுத்தி, 19 வயது வெள்ளையம்மாள் என்பவரை படுகொலை செய்ததாகவும், 17 வயது நதியாவை மனநோய்க்கு உள்ளாக்கியதாகவும் செய்திகள் வந்தன.

விழுப்புரம் கண்டமங்கலம் அருகே உள்ள பள்ளி நேயனூரை சேர்ந்த ஆதி திராவிடர் சாதிப் பெண் (பறையர்) கோகிலா என்பவரை அருந்ததியர் சாதி இளைஞன் கார்த்திகேயன் என்பவர் காதலித்து மணம் முடித்த காரணத்தால் சொந்த சாதி கோகிலாவை கவுரவப் படுகொலை செய்த தகவல் வந்தது.

தேனி சின்னமனூர் ஒன்றியம் காட்சிபுரம் பகுதியை சேர்ந்த 11 வயது அருந்ததியர் சிறுமி நந்தினியை மூன்று ஆதி திராவிடர் (பறையர்) சாதி இளைஞர்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கி படுகொலை செய்துள்ளார்கள்.

ஜாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக ஜாதி வெறியைக் கண்டித்துப் போராட வேண்டிய வர்கள், தங்களுக்கும் ‘கீழாக’ அருந்ததியரைக் கருதி அவர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்துவது ஜாதி எதிர்ப்புக் கொள்கைக்கே ஊறு விளைவிக்கும் செயல். தலித் மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிடும் ஆதிக்க ஜாதியினரின் செயலுக்கும் இதற்கும் எந்த வேறுபாடும் கிடையாது.

இப்படி தலித் மக்களுக்குள்ளேயே தங்களை ‘உயர்ஜாதி’ மனநிலைக்கு உள்ளாக்கிக் கொண்டு வன்முறையைக் கையில் எடுப்பவர்களை தலித் அமைப்புகளின் தலைவர்கள் ஏன் கண்டிக்காமல் மவுனம் சாதிக்கிறார்கள்? என்று ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் எழுப்பிய கேள்வியில் முழுமையான நியாயம் இருக்கிறது என்பதே நமது உறுதியான கருத்து.

தலித் அடையாளத்துக்குள் நிறுத்தப்பட்டுள்ள பறையர், அருந்ததினருக்கு இடையே மோதல்களும், மற்றொரு பிரிவினரான ‘தேவேந்திர குல வேளாளர்’ பிரிவைச் சார்ந்த சிலர் தாங்கள் ‘தலித்’ பிரிவினரை விட உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்ள விரும்புவதும், ஜாதியமைப்புக்கு வலிமை சேர்க்கும் போக்கே ஆகும்.

அம்பேத்கர் வாழ்நாள் முழுதும் போராடிய கொள்கைக்கு குழி பறிப்பதுமாகும்.

பார்ப்பனியத்தால் உந்தப்பட்ட ஆதிக்க ஜாதி வெறி சக்திகளுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் திராவிடர் விடுதலைக் கழகம், இந்த உண்மையை – அது கசப்பானதாக இருந்தாலும் வேதனையுடன் சுட்டிக் காட்டுகிறது. இதைக் கண்டும் காணாமல் மவுனம் காத்து, கடந்துபோக நினைப்பது, ஜாதி எதிர்ப்புக் கொள்கைக்கு நேர்மை சேர்ப்பதாகவும் ஆகாது.

இந்த உள்ஜாதி மோதல்களை தடுத்து நிறுத்த அருந்ததினருக்கு எதிரான வன்முறைகளைக் கண்டிக்க தலித் தலைவர்கள், முற்போக்கு ஜனநாயக சக்திகள் முன்வர வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

## தனியார் துறையில் இடஒதுக்கீடு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்

**டி. இராசா**

தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தியும், இடஒதுக்கீட்டுக்கு எதிராக பார்ப்பனியம் கூக்குரலிடுவதைக் கண்டித்தும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.இராசா, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ டில்லி பதிப்பில் கட்டுரை எழுதியுள்ளார். அதன் தமிழ் வடிவம்:

ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு, இப்போது விவாதத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று பேசத் தொடங்கியிருக்கிறார்கள். பட்டியல் இனப்பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் கிரிமிலேயரை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே இவர்களில் பலரின் விருப்பம். குஜராத்தில் பட்டேல் சமூகத்தினர் தங்களுக்கு இடஒதுக்கீடு கேட்டுப் போராடுவதையும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், இந்தக் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதையும் தொடர்ந்து இடஒதுக்கீடு தொடர்பாக கட்டுரைகள் ஏராளமாக குவிந்து கொண்டிருக்கின்றன.

சமூகத்தின் ‘மேல்தட்டு அறிவாளி’ப் பிரிவினருக்கு ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு உறுத்திக் கொண்டே இருக்கிறது. சமூகநீதி என்ற கருத்தே அவர்களுக்கு கசப்புதான். இடஒதுக்கீட்டின் பயன், சமூகத்தில் ஏழை மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றும், ஒரே சமூகத்தில் வசதி படைத்த பிரிவினர் தான் பயன் பெற்று வருகிறார்கள் என்றும் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். இப்படி அடித்தளத்து மக்களுக்காகக் கவலையோடு கண்ணீர் விடுவோர் எல்லாம் பிரபலமான தொழில் கல்வி நிறுவனங்களில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் படித்தவர்கள். இவர்கள் சமூகத்தில் பிரபலமானவர்களாகவும் மதிக்கத்தக்கவர்களாகவும் இருக்கும் எழுத்தாளர்கள், அறிவு ஜீவிகள், தொழிலதிபர்களாக இருந்தாலும்கூட இவர்களிடம் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் மீதான சமூகப் பொருளாதாரச் சுரண்டல்களைப் பற்றிய தெளிவான சமூகப் பார்வை இருப்பது இல்லை. சமூகநீதிக் கொள்கையை வெறுப்பாகவே பார்க்கிறார்கள். குறிப்பாக, பொதுத் துறை நிறுவனங்களில் இப்போது பின்பற்றப்படும் இடஒதுக்கீட்டை நிறுத்த வேண்டும் என்பதே இவர்களின் விருப்பம்.

குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன், 2000ஆம் ஆண்டிலேயே இது குறித்து எச்சரித்தார். சமூக மாற்றத்தை நோக்கிய பயணத்தில் அதற்கு எதிரான எதிர்ப்புரட்சி எந்த நேரத்திலும் வரக்கூடும் என்றார் அவர். உரிய தகுதி இல்லாதவர்கள் எல்லாம் அரசுப் பதவிகளின் அதிகாரமிக்க இடத்தை ஒதுக்கீடு கொள்கை வழியாகப் பிடித்துக் கொண்டு விட்டதாக கூறி வரும் இந்த “மேல்மட்ட அறிவாளிகள்” ஒரு உண்மையை மட்டும் பேசுவதே இல்லை. இப்போது வேலைகளுக்கான வாய்ப்புகளே அரசுத் துறைகளில் இல்லை. தனியார் துறைகளில் தான் உருவாகிறது என்பதே அந்த உண்மை. இதில் மவுனம் சாதிக்கிறார்கள். தனியார் கட்டுப்பாட்டிலுள்ள 500 தொழில் நிறுவனங்களில் (பி.எஸ்.ஈ. கம்பெனிகள்) அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பல அதிர்ச்சியான தகவல்கள் வந்துள்ளன. மக்கள் தொகையில் 14 சதவீதம் உள்ள முஸ்லிம்கள் இந்த நிறுவனங்களில் 2.67 சதவீதம் பேர் மட்டுமே மூத்த நிர்வாகிகளாக உள்ளனர். எண்ணிக்கையில் சொல்ல வேண்டுமானால், 2324 இயக்குனர்களில் முஸ்லிம்கள் 62 பேர் மட்டுமே. இதேபோல் தலித் பிரிவினர் பற்றிய ஆய்வு நடத்தப்படுமானால், அது இதைவிட மிக மோசமானதாகவே இருக்கும்.

தனியார் நடத்தும் தொழில் கல்வி நிறுவனங்களில் என்ன நடக்கிறது? கூடுதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவன் தனக்கு இடம் கிடைக்காத நிலையில் தன்னைவிட குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவருக்கு இடம் கிடைக்கும்போது ஆத்திரமும், விரக்தியும் வந்து விடுகிறது என்று இந்த ‘ஆய்வாளர்கள்’ வாதிடுகிறார்கள். இந்த ‘ஆய்வாளர்களிடம்’ நாம் ஒரு கேள்வியை கேட்க வேண்டியிருக்கிறது. இந்த தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை எப்படி நடக்கிறது? சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து ஏழ்மைப் பின்னணியில் உழலும் ஒரு மாணவன் அதை எப்படிப் பார்க்கிறான் என்பது இவர்களுக்குத் தெரியுமா? உதாரணத்துடன் விளக்குவோம். ஒரு அரசு மருத்துவக் கல்லூரியில் திறந்த போட்டியில் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு ‘கட் ஆப்’ மதிப்பெண் 98; பிற்படுத்தப்பட்டோருக்கு 97; பட்டியல் இனப் பிரிவினருக்கு 90. ஆனால், தனியார் கல்வி நிறுவனங்களில் குறைந்தபட்ச மதிப்பெண் 40 பெற்றிருந்தாலே பல கோடி ரூபாயை நன்கொடையாகக் கொடுத்து, இதே மருத்துவப் படிப்பில் சேர்ந்துவிட முடியும். இந்த நிலையில் 97.7 சதவீத கட் ஆப் மதிப்பெண் பெற்றும் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காத ஒரு மாணவன், 40 மதிப்பெண்கள் பெற்று, தனியார் கல்லூரிக்குள் நுழையும் மாண வனைப் பார்த்து ஆத்திரப்பட மாட்டானா? ஆத்திரம் வராதா? இந்த ‘ஆத்திரம் பற்றி’ இடஒதுக்கீட்டு ஆய்வாளர்கள் பேசுகிறார்களா?

இப்போது இடஒதுக்கீடு குறித்து நடக்கும் விவாதங்களில் தனியார் துறைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து பேசுவதே இல்லை. விவாதத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு வரப்படுவதே இல்லை. காரணம் இந்த தனியார் தொழில் நிறுவனங்களில் இடஒதுக்கீடு இல்லை என்பதால் ஒடுக்கப்பட்ட பிரிவினர் உள்ளே நுழைய முடியவில்லை. அனைத்து உயர் பதவிகளையும், ‘மேல்தட்டுப் பிரிவினரே’ வளைத்துப் போட்டுக் கொண்டு விடுகிறார்கள். எனவே ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்பியாக வேண்டும். அரசு தரும் பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த தனியார் தொழில் நிறுவனங்களை இதே போக்கிலேயே செயல்பட அனுமதிக்கலாமா?

‘தனியார் துறை’ நிறுவனங்களில், அவை தனியாருக்கு மட்டுமே உரித்தானவை என்று கூறக்கூடிய அம்சம் என்ன இருக்கிறது? ‘தனியார் துறை’ என்பதற்கான விளக்கம் என்ன? வரையறை என்ன? இந்தக் கேள்விகளை எழுப்பியாக வேண்டும். முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன், 2002ஆம் ஆண்டு ‘குடியரசு’ நாள் உரையில் இவ்வாறு கூறினார்:

> “இப்போதும் சரி – எதிர்காலத்திலும் சரி; இந்த நாட்டின் பொருளாதார அமைப்பில் தனியார் துறைகள் சமூகப் பார்வையோடு கொள்கைகளை அமுல்படுத்த முன்வர வேண்டும். நாம் கூறும் சமூகக் கொள்கை என்பது, சமூகத்தில் அடித்தட்டில் உழலும் மக்களை கைதூக்கிவிடக் கூடிய முற்போக்கான சமத்துவத்தை நோக்கிய கொள்கை. உரிமைகளும் சமத்துவமும் பறிக்கப்பட்ட மக்களை சமத்துவமான குடிமக்களாகவும் நாகரிக மனிதர்களாகவும் உயர்த்தக்கூடிய கொள்கை. இதன் அர்த்தம் தனியார் நிறுவனங்கள் சமதர்மக் கொள்கையை ஏற்க வேண்டும் என்று கேட்பது அல்ல. பல்வேறு பிரிவினரை யும் அங்கீகரித்து, புறக்கணிக்கப்படும் பிரிவினருக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்து, அமெரிக்காவில் உள்ளது போல சட்டங்களை இங்கும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்றுதான் கூறுகிறேன்.”

- இது குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன் வலியுறுத்திய கருத்து.

( 4 ஆம் பக்கம்)

# அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகளை நிறுத்து!

# கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்




**மன்னார்குடியில்:** *19.10.2015* திங்கட்கிழமை காலை மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் அரசு அலுவலகங்களில் மதசார்புடைய வழிபாடுகள் மற்றும் ஆயுத பூஜை கொண்டாட்டங்களை தடுக்ககோரியும், அவற்றிக்கு எதிரான அரசு உத்தரவுகளை நடைமுறைப்படுத்தக் கோரியும், திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், தமிழக அரசு அலுவலகங்களில் எவ்வித மதவழிபாடுகளும் ஆயுத பூஜை கொண்டாட்டங்களும் நடத்தக்கூடாது என்று தமிழக அரசு காவல்துறை உள்பட அனைத்து அலுவலகங்களுக்கும் ஆணைகள் மூலம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் அரசு ஆணைகளை முறையாக நடைமுறை படுத்தப்படாமல் அவற்றிக்கு எதிரான செயல்பாடுகள் அலுவலகங்களில் மிகுந்துள்ளன. ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும், கடவுள் படங்கள் சாமியார்களின் படங்கள் சிலைகள் வழிபாட்டுப் பொருள்கள் வைக்கப்பட்டு கோவில்களில் நடப்பதுபோல் சூடம்கொளுத்துதல், சாம்பிராணி புகைபோடுதல் தீபாராதனை போன்றவைகள் நடந்துவருகின்றன.

இதன் ஒருபகுதியாக ஆயுதபூஜை நேரங்களில் மிகவும் ஆடம்பரமாக ஒலிபெருக்கிகளை வைத்து வாழைமரம் கட்டி, புரோகிதர்களை அழைத்துவந்து மந்திர உச்சாடனங்கள் செய்து அரசு அலுவலகங்களில் ஆயுதபூஜைகள் கொண்டப்படுகிறது. அரசு ஆணைகளை செயல்படுத்தவேண்டிய காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் கொஞ்சமும் கட்டுப்பாடு இல்லாமல் மத வழிபாட்டு முறைகளை பின்பற்றுவது ஒரு குறிப்பிட்ட மதத்தை சார்ந்து அரசு இயந்திரம் இயங்குவது போல் உள்ளது. இதுபோல் நடப்பதை மதசார்பற்ற நாடு என்பதற்கு எதிராகவும், அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவும், அரசு ஆணைகளுக்கு எதிராகவும் உள்ளது என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

திராவிடர் விடுதலைக்கழக ஒன்றிய செயலாளர்கள் நீடா. முருகன், வலங்கைமான் செந்தமிழன், கோட்டூர் பன்னீர்செல்வம், மன்னை ரமேஷ், அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட செயலாளர் சேரன்குளம் செந்தில்குமார், மன்னை நகர செயலாளர் சசிக்குமார், தஞ்சை பெரியார் சித்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**ஈரோட்டில் :** அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடாதே ! என வலியுறுத்தி ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 19.10.2015 அன்று மாலை 5 மணியளவில் ஈரோடு கருங்கல்பாளையம் காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமை தாங்கினார், கழக வெளியீட்டு செயலாளர் கோபி இராம. இளங்கோவன் முன்னிலை வகித்தார்.

“அரசு அலுவகங்களில் மத வழிபாடுகளை நடத்தாதே! மதசார்பற்ற நாட்டில் அரசில் ஆயுத பூஜையை கொண்டாடாதே ! தமிழக அரசாணைக்கெதிராக செயல்படாதே! அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடும் அரசு ஊழியர்கள் மீது தமிழக அரசே நடவடிக்கை எடு” என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் விநாயகமூர்த்தி, தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட பொறுப்பாளர் குமரகுரு, கோபி குணசேகரன் மற்றும் ஆதரவு இயக்க தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




**கோவையில் :** மத சார்ப்பின்மைக் கொள்கைக்கு முரணாக பல்வேறு அரசுத்துறை, பொதுத்துறை அலுவலகங்களில் மத விழாக்களும், வழிபாடுகளும், பூஜைகளும் அண்மைக் காலங்களில் மிக அதிகமாக நடைபெற்று வருகின்றது மதச்சார்பற்ற அரசு அலுவலகங்களில் மத வழிபாடுகளை நடத்துவது அரசாணைகளை அவமதிப்பதாகும் அரசின் கொள்கைகளுக்கும் விரோதமாகவும் அமையும் ஆகவே மேற்கண்ட அரசு ஆணையை நடைமுறைபடுத்தாததைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, புறநகர் மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், மாநகர செயலாளர் நேருதாஸ், சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் தோழர்கள் பரிமளராஜன், அகிலன், மூர்த்தி, விஜயபாரதி, பாரூக், நிர்மல், லோகு, கிருஷ்ணன், ஸ்டாலின், கம்ப்யூட்டர் கார்த்திக், வீரபாண்டி ராஜேஷ், அன்னூர் முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




**திருப்பூரில்:** திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 19.10.2015 அன்று காலை திருப்பூர் பெரியார் சிலை அருகில் - “அரசு அலுவகங்களில் மத வழிபாடுகளை நடத்தாதே ! மதசார்பற்ற நாட்டில் அரசில் ஆயுத பூஜையை கொண்டாடாதே! தமிழக அரசாணைக்கெதிராக செயல்படாதே! அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடும் அரசு ஊழியர்கள் மீது தமிழக அரசே நடவடிக்கை எடு” என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாநகர செயலாளர் நீதி ராசன் தலைமை தாங்கினார். கழக பொருளாளர் துரைசாமி, மாவட்ட செயலாளர் முகில்ராசு, சூலூர் பன்னீர் செல்வம் உள்ளிட்ட கழகத் தோழர்கள் ஆதித்தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் சோழன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பல்லடத்தில் பெரியார் பிறந்தநாள்-ஊர்வலம், கொடியேற்று விழா

பல்லடத்தில் 25.10.2015 ஞாயிற்றுகிழமை அன்று காலை முதல் மாலை வரை திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தந்தைபெரியாரின் 137ஆவது பிறந்தநாள் விழா, வாகன ஊர்வலம், கொடியேற்று விழாவாக மிக சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. ஊர்வலம் காலை 11 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் கோவிந்தராஜ் தலைமையில் பல்லடம் தெற்குப் பாளையம் பகுதியில் துவங்கியது. கழகப் பொருளாளர் துரைசாமி துவக்கவுரை நிகழ்த்தினார். பல்லட நகரத் தலைவர் கோவிந்த ராஜ் தெற்குப்பாளையம் பகுதியில் கொடியை ஏற்றி வைத்தார். பறை இசை முழங்க எழுச்சியுடன் ஊர்வலம் துவங்கியது. மாநில அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, திராவிடர் கலைக் குழுவின் தோழர் சங்கீதா, ஊர்வலப் பாதை முழுவதும் பொது மக்களிடையே ஒலி பெருக்கியின் வாயிலாக பெரியாரின் போராட்டங்கள், சாதனைகள், திராவிடர் இயக்கக் கருத்துக்கள் ஆகியற்றை தொடர்ந்து மக்களிடையே விளக்கி வந்தனர்.

பல்லடம் மணிமண்டபம் பகுதியில் பல்லடம் சுந்தர்ராஜ் கொடியேற்றினார். அடுத்ததாக பல்லடம் வடுகபாளையம் பகுதியில் பல்லடம் வடிவேல் கொடியேற்றினார். அடுத்து ஊர்வலம் அனுப்பட்டிக்கு சென்றது. அப்பகுதியில் மூத்த பெரியாரியல்வாதியும், பெரியாரியலை வாழ்வியலாக கொண்டு வாழ்ந்து வருபவருமான சீனிசெந்தேவன் என்கிற வாசு அண்ணா மிக சிறப்பானதொரு உரை



நிகழ்த்தி கழகக் கொடியை அனுப்பட்டியில் ஏற்றி வைத்தார். மதிய உணவை செம்பறுதி தம்பி வெங்கடாசலம் தோட்டத்தில் மாட்டுக் கறி பிரியாணியை மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். தோழர்கள் மதிய உணவை அங்கு முடித்துக் கொண்டு ஊர்வலத்தை தொடர்ந்தனர். அடுத்து செட்டிபாளையம் பிரிவில் ராமசாமி, இலஷ்மி மில்ஸ் பகுதியில் பார்வதி, சந்தைப்பேட்டை பகுதியில் பல்லடம் சிவசங்கர், பேருந்து நிலையத்தில் பல்லடம் செம்பரிதி கழக கொடியை ஏற்றி வைத்தார்கள்.

இந்த கொடியேற்று விழாவிற்கான ஏற்பாடுகளை கழக மாவட்ட செயலாளர் முகில்ராசு, மாநகர தலைவர் நீதிராசன், அகிலன், தனபால், மாப்பிள்ளைசாமி ஆகியோர் மிக சிறப்பாக செய்திருந்தனர்.

பல்லடம் நகர தலைவர் கோவிந்தராஜ், செம்பரிதி ஆகியோர் பல்லடத்தில் ஊர்வலத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்து முன்னின்று நடத்தினர். வரப்பாளையம் குணபாலன், வினேஷ் ஆகிய தோழர்கள் நண்பர்களுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வல பணிகளுக்கு கழக ஆதரவாளர் அனுப்பட்டி பிரகாசு முன் வந்து உதவிகளை செய்தார். மிகுந்த எழுச்சியுடன் பல்லடம் பகுதியில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் 50க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் தங்கள் இரு சக்கர வாகனங்களில் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

## அம்பேத்கர் முன் வைக்கும் ஆழமான சிந்தனைகள்

# இந்தியாவை ‘தேசம்’ என்பது ஒரு மாயை

***ஜாதி – மொழி – தேசம் குறித்த அம்பேத்கரின் ஆழமான சிந்தனைகளை எடுத்துக்காட்டுகிறது இக்கட்டுரை.***



**கரு அசுரன்**

அம்பேத்கர் என்றவுடன் அவரை தீண்டப்படாதவர்களின் தலைவர் என்றே சமூகம் பார்க்கிறது. அவரின் ஆழமான சமுதாய சிந்தனையும், அறிவும் புறந்தள்ளப்படுகிறது. ஜாதியின் பெயரால் நாம் இழந்தது சுயமரியாதை, கல்வி, வேலை, இருப்பிடம், செல்வம் என்ற சமூக உண்மையை புரிய வைத்தவர் அம்பேத்கர்.

ஒரு பள்ளி சிறுவன், தனக்கு அம்பேத்கரை பிடிக்கும் என்கிறான். மற்றொருவன் தனக்கு அம்பேத்கரைப் பிடிக்காது என்கிறான். இந்த விருப்பு வெறுப்புக்கு காரணம் அவருடைய ஜாதியே. அரசியல்வாதிகள் அம்பேத்கரை ஒரு படமாக்குகிறார்களே தவிர, பாடமாக்கவில்லை. இதைப் பற்றி அம்பேத்கர்,

“இந்தியாவிலோ புனிதர்களையும், மகாத்மாக்களையும் வழிபடுகிறார்கள். வழிபடுவது மட்டுந்தான், அவர்கள் வழியில் நடப்பதில்லை என்ற போக்கு பொது மக்களிடம் இருப்பதால், அவர்களுடைய திட்டத்தால் பெரிய பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை” (அம்பேத்கர் நூல் தொகுப்பு-1, பக்.131) என்கிறார்.

தீண்டப்படாதவர்களின் தலைவர் என அக்காலத்தில் தான் புறக்கணிக்கப்பட்டதை அம்பேத்கர் விளக்குகிறார்:

“இந்துத் தலைவர் ஒருவர் இந்தியத் தலைவர் என்றே வர்ணிக்கப்படுவார். அவர் காஷ்மீர் பார்ப்பனராயிருந்தாலும் அவரை காஷ்மீர் பார்ப்பனர்களின் தலைவர் என்று கூற மாட்டார்கள். ஆனால், தீண்டப்படாதவரான ஒரு தலை வரைக் குறிப்பிடும் போது அவரது பெயரைக் குறிப்பிட்டு, தீண்டப்படாதவர்களின் தலைவன் என்று கூறுவர்.”

இது போன்ற பாகு பாட்டிற்குக் காரணம் இந்துக்களின் மனத் தில் தீண்டப்படாதவர்கள் தங்களைவிடத் தாழ்வானவர்கள் என்று ஊறிப் போயுள்ள எண்ணமாகும். தீண்டப்படாதவர்கள் எவ்வளவு தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் தீண்டப்படாதவர்களிடையே தான் பெரியவர்கள் என்பது இந்துக்களின் எண்ணம். அவர்கள் இந்துக்களில் உள்ளவர்களைவிடப் பெரியவர்களாகவோ அவர்களுக்குச் சமமானவர்களாகவோ ஒரு போதும் இருக்க முடியாது. இது இத்தகைய பாகுபாடு சமூகரீதியான பாகுபாடு என்றாலும் பொருளாதாரப் பாகுபாட்டைவிட எந்த வகையிலும் கொடுமையில் குறைந்ததல்ல.”

**இந்திய தேசியமும் அம்பேத்கரும்**

பெரியார் தனி நாடு கேட்டதற்கு அடிப்படையான காரணம் ஜாதி ஒழிப்பு; அதை முன்னிறுத்தியேயன்றி இரத்த தூய்மையோ, மொழித் தூய்மையையோ முன்னிறுத்தி அல்ல; “ஜாதியற்ற சமுதாயத்தைப் படைக்கிறேன் எனத் தீர்மானம் போடு, நான் அபராதம் கட்டிவிட்டு காங்கிரசில் சேருகிறேன்” என்றார் பெரியார்.

பெரியர் கூறினார்:

“... இனி காங்கிரஸ் திட்டம் என்ன? போடு திட்டம். பாப்பான், சூத்திரன், பஞ்சமன் என்பவர்கள் இருக்க மாட்டார்கள் என்று தீர்மானம் போடு. நாங்கள் ஓடி வருகிறோம். இனி உனக்குச் சமுதாயச் சீர்திருத்தம் தானே திட்டமாக இருக்க வேண்டும்? இந்த ஞானபூமியிலே, இந்த புண்ணிய பூமியிலே சூத்திரன் இருக்க மாட்டான்; பஞ்சமன் இருக்க மாட்டான்; பார்ப்பான் இருக்க மாட்டான்; மனிதர்கள்தான் இருப்பார்கள் என்று போடு உத்தரவை. நான் அபராதம் கொடுத்துவிட்டுக் காங்கிரசில் சேர்கிறேன்” (‘விடுதலை’ 20.6.1947) என்றார் பெரியார்.

“இப்போது இந்தியா ஒரு நாடாக இருக்கிறதா? இந்தியா – சாதிகள் காட்சி சாலையாக இருக்கிறதே ஒழிய வேறு என்னமாயிருக்கின்றது? இந்த நிலையிலுள்ள இந்தியா, விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? மற்ற நாட்டார்கள், தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி நம் நாட்டையும் அதோடு சேர்க்கப் பார்க்கின்றார்கள். யார், எந்த நாட்டோடு சேர்த்துக் கொள்ளுவதென்று போட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்” (‘குடி அரசு’ 1.6.1930) என்றார் பெரியார்.

இதே குரலில் அம்பேத்கரும் “ஆயிரக்கணக்கான ஜாதிகளாக பிளவுண்டிருக்கும் மக்கள், எப்படி ஒரு தேசமாக முடியும்?” என கேள்வி எழுப்புகிறார்.

அம்பேத்கரின் பார்வையிலும் இந்தியா ஒரு ஜாதி காட்சி சாலையாகவே தெரிகிறது. அம்பேத்கர் சொல்கிறார்:

“சமூக, பொருளாதார வாழ்க்கை முறைகளில் இன்னும் எத்தனை நாட்களுக்கு நாம் இன்னும் சமத்துவத்தை மறுக்கப் போகிறோம்? நாம் நீண்ட நாட்களுக்கு இதை மறுத்தால், அரசியல் ஜனநாயகத்தை ஆபத்தில் தள்ளுவதில் தான் அது முடியும். நாம் இந்த முரண்பாடுகளை மிக விரைவில் அகற்றியாக வேண்டும். இல்லையெனில், சமமற்றத் தன்மையால் பாதிக்கப்படும் மக்கள், நாம் மிகவும் சிரமப்பட்டு உருவாக்கிய அரசியல் ஜனநாயகத்தின் கட்டமைப்பையே தகர்த்தெறிந்து விடுவர். இரண்டாவது முக்கியத் தேவை, சகோதரத்துவக் கொள்கைக்கான அங்கீகாரம். சகோதரத்துவம் என்றால் என்ன? அனைத்து இந்தியர்களையும் சகோதரர்களாகக் கருதும் ஓர் உணர்வு – அனைவரும் ஒரு தாய் மக்கள் வாழ்க்கை முறையில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் அளிக்கும். இதை அடைவது அவ்வளவு எளிது அல்ல.

... அரசியல் எண்ணமுள்ள இந்தியர்கள், முன்பு ‘**இந்திய மக்கள்**’ என்று கூறப்படுவதை எதிர்த்தது எனக்கு நினைவிருக்கிறது. ‘**இந்திய தேசம்**’ என்று சொல்வதையே அவர்கள் விரும்பினர். நாம் ஒரு தேசம் என்று சொல்வதையே அவர்கள் விரும்பினர். நாம் ஒரு தேசம் என்று நம்புவதே ஒரு மிகப் பெரிய மாயை என்றே நான் கருதுகிறேன். ஆயிரக்கணக்கான சாதிகளாகப் பிளவுண்டிருக்கும் மக்கள், எப்படி ஒரு தேசமாக முடியும்? சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக நாம் இன்னும் ஒரு தேசமாக ஆகவில்லை என்பதை எவ்வளவு விரைவில் உணர்கிறோமோ, அந்தளவுக்கு நல்லது. அப்போதுதான், நாம் ஒரு தேசமாக வேண்டிய அவசியத்தை உணர்ந்தும் அதை அடைவதற்கான வழிமுறையைப் பற்றி கவனமாக சிந்திப்போம்...

.... சாதி தேசத்திற்கு எதிரானது மட்டுமல்ல, சாதிகளுக்கிடையேயும் அது பொறாமையையும் எதிர்வினையையும் உருவாக்குகிறது. நாம் உண்மையில் ஒரு தேசமாக விரும்பினால், இத்தகைய இடர்ப்பாடுகளை எல்லாம் கடக்க வேண்டும். ஒரு தேசம் உருவாகும் போதுதான் – சகோதரத்துவம் உண்மையாகும். சகோதரத்துவம் இல்லாமல் சமத்துவமும் சுதந்திரமும் வண்ணப்பூச்சு போல ஆழமற்றதாகவே இருக்கும்.” (25.11.1949 அன்று மக்களவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி, அம்பேத்கர் தொகுப்பு-2, பக்.188)

**சாதிய தமிழ்**

ஆனாலும் தமிழ்த் தேசியவாதிகளால் அம்பேத்கர் விவாதிக்கப்படுவதில்லை. அம்பேத்கரின் பெயரைச் சொல்லவே பயப்படுகிறார்கள். தீண்டப்படாதவர்களின் தலைவர் என எண்ணுகிறார்கள் என்பதை தவிர வேறு என்ன காரணம்? மொழியில் ஊடுருவியுள்ள ஜாதி வெறி பற்றியும் அம்பேத்கர் கூறுகிறார்:

“மலபாரில் (இது சென்னை மாகாணமாக உள்ள போது) - உள்ள ஒத்தப்பாலம் என்ற இடத்தில் ஈழவ சாதியைச் சேர்ந்த சிவராமன் என்ற 17 வயது இளைஞர், சாதி இந்து ஒருவரின் கடைக்குச் சென்று உப்பு வேண்டும் என்று கேட்டார். அவர் ‘உப்பு’ என்ற மலையாள வார்த்தையைப் பயன்படுத்தினார். மலபாரில் உள்ள வழக்கப்படி ‘உப்பு’ என்ற சொல்லைச் சாதி இந்துக்கள் தான் பயன்படுத்தலாம். அந்த இளைஞர் தாழ்த்தப்பட்டவர் என்பதால், அவர் ‘புளிச்சாட்டன்’ வேண்டும் என்றுதான் கேட்டிருக்க வேண்டும். இதனால் கோபமடைந்த உயர்சாதிக் கடைக்காரர், சிவராமனை பலமாக அடித்ததால் அவர் இறந்து போனார்.” (பம்பாய் சமார்சார், 1936 நவம்பர் 4ஆம் தேதி இதழில் வெளி வந்த செய்தி)

**இது சகிப்புத் தன்மையா? நேர்மை இன்மையா?**

இந்து மதம் சகிப்புத் தன்மை கொண்டது என்று பார்ப்பனர்கள் அவ்வப்போது பேசி வருகிறார்கள். அந்த சகிப்புத் தன்மையின் சந்தர்ப்பவாதத்தை அம்பேத்கர் படம்பிடித்துக் காட்டினார்:

“காக்கும் கடவுளான விஷ்ணுவுக்கும், அழிக்கும் கடவுளான சிவனுக்கும், அன்பின் தத்துவத்தை மனித குலத்திற்கு போதித்த மாபெரும் ஆசானாகிய கயையிலுள்ள புத்தருக்கும், தினமும் இரத்த பலி கேட்கும் காளிக்கும் பார்ப்பான் பூசாரியாக இருக்க முடியும்.

அவ்வாறே, சத்திரிய கடவுளான இராமனுக்கும், சத்திரியரை ஒழித்துக் கட்ட அவதாரம் எடுத்த பரசுராமனுக்கும், பார்ப்பான் பூசாரியாக இருக்க முடியும். நிஜ வாழ்க்கையில் இப்படி இல்லை என்று எவரும் மறுக்க முடியாது; இதுதான் உண்மை. ஒரு நேர்மையான மனிதன் எதிரெதிரான குணங்களைக் கொண்ட எல்லா தேவதேவிகளுக்கும் நேர்மையான பக்தனாக இருக்க முடியாது என்கிற போது, அவ்வாறு இருக்கும் பார்ப்பனர்களின் இந்த திறமையை என்னவென்று சொல்வது எனத் தெரியவில்லை. இந்த அசாதரணமான நிகழ்ச்சியையே இந்துக்கள் தம் மதத்தின் மாபெரும் சிறப்பு. அதன் சகிப்புத் தன்மை பரந்த நோக்கு ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டு என்கின்றனர்.

மேலோட்டமாகப் பார்த்தால் இவை இரண்டிற்குமிடையே வேறுபாடு காண்பது கடினம். ஆனால் உள்ளடக்கத்தில் இவை இரண்டும் வெவ்வேறானவை; நெருங்கி ஆராய்ந்து பார்த்தால்தான் இது விளங்கும். வெவ்வேறு வகைப்பட்ட கடவுள்களை வழிபடுவது சமரச நோக்கைக் காட்டுகிறது என்பதில் ஒத்துக் கொள்ளலாம். ஆனால், அது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நம் போக்கை மாற்றிக் கொள்ளும் நேர்மை யின்மையை குறிப்பதாக ஆகலாம் அல்லவா? இந்த சகிப்புத் தன்மை என்பது உண்மையில் நேர்மையின்மையே என்பது உறுதி.” (அ.நூ-1, பக்.135)

இப்படி பார்ப்பனர்களின் பச்சோந்தித்தனத்தை எடுத்துக்காட்டுகிறார் அம்பேத்கர்.


“தீண்டாதோரை அடிப்பது, அவர்கள் சொத்துக்களைக் கொள்ளையிடுவது, தீயிட்டுக் கொளுத்துவது மற்றும் பல்வேறு கொடுமைகளை அவர்களுக்கு இழைப்பது ஆகிய செயல்களை அவர்கள் மனசாட்சியின் உறுத்தல் கொஞ்சமுமின்றிச் செய்வதற்குக் காரணம், இந்து மதம் அவர்களுக்கு இந்த சமூகக் கட்டுக் கோப்பினை கட்டிக் காக்க எவ்விதப் பாவத்தையும் செய்வது தவறல்ல என்று போதிப்பதுதான்” என்கிறார் அம்பேத்கர்.

ஜாதி வெறியர்கள் இப்போது தலித் மக்களுக்கு எதிராக நடத்தும் படுகொலை, வன்முறை வெறியாட்டங்கள் - இந்து சமூக அமைப்பிலிருந்தே வருகிறது. சாதியை ஒழிக்க அம்பேத்கர் கூறும் வழி என்ன?

“ஜாதி கோட்டையில் உடைப்பு ஏற்படுத்த வேண்டும் என்றால் நீங்கள் வேதங்களையும் சாஸ்திரங்களையுமே வெடி வைத்துத் தகர்க்க வேண்டும். பகுத்தறிவு செயல்பட இடம் கொடுக்காத, ஒழுக்கம் செயல்பட இடம் கொடுக்காத வேதங்களையும் சாஸ்திரங்களையுமே நீங்கள் தகர்க்க வேண்டும். ஸ்ருதிகளையும் ஸ்மிருதிகளையும் அடிப்படையாகக் கொண்ட மதத்தை நீங்கள் அழிக்க வேண்டும். வேறு எதுவும் பயன்தராது. இந்த விஷயத்தில் இதுதான் என்னுடைய தீர்க்கமான முடிவு.” (அம்பேத்கர் தொகுப்பு,-1, ப.109)

வேதத்தையும் சாஸ்திரத்தையும் அடிப்படையாகக் கொண்ட இந்து மதம் எப்படி அம்பேத்கரை ஏற்றுக் கொள்ள முடியும் அல்லது அம்பேத்கரை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி வேதங்களையும் சாஸ்திரத்தையும் அடிப்படையாகக் கொண்ட இந்து மதத்தை ஏற்றுக் கொள்ள முடியும். பிறகு ஏன் இந்து அமைப்புகள் அம்பேத்கரை தூக்கிப் பிடிக்கின்றன? என்ற கேள்வி எழக் கூடும். அம்பேத்கர் பெயரைச் சொல்லி தலித்துகளின் உழைப்பை சுரண்டுவதற்கும் தலித்துகள் இந்து மதச் சிறையிலிருந்து விடுபடாமல் பூட்டி வைப்பதற்குமே, அம்பேத்கர் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். ●


**“ஈழத்தமிழ் அகதிகளின் துயரம்” நூல் வெளியீட்டு விழா !**



தோழர் பாலன் எழுதிய “சிறப்பு முகாம் என்னும் சித்ரவதை முகாம்” - “ஈழத்தமிழ் அகதிகளின் துயரம்” எனும் நூல்கள் வெளியீட்டு விழா 16.10.2015 வெள்ளிகிழமை மாலை 5.00 மணியளவில் கோவை அண்ணாமலை அரங்கில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். நூல் குறித்து தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர்.

DATE OF PUBLICATION 29.10.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# காஞ்சி மாவட்டத்தில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை





***எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்!***
***இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்!***

என்ற முழக்கத்தோடு காஞ்சி மாவட்டத்தின் சார்பில் 2 நாட்கள் பரப்புரைப் பயணம் அக்டோபர் 24 மற்றும் 25 தேதிகளில் மாவட்டத் தலைவர் செங்குட்டுவன் தலைமையில் செயலாளர் தினேசுகுமார் மற்றும் அமைப்பாளர் தெள்ளமிழ்து முன்னிலையில் நடந்தது

24.10.2014 காலை 10.30 மணியளவில் மறைமலை நகரில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் நிகழ்ச்சியை துவக்கி வைக்க சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தொடக்கவுரையோடு பரப்பரைப் பயணம் நடந்தது

அருள்தாஸ் ஜாதி ஒழிப்பு மற்றும் பகுத்தறிவு பாடல்களை பாட, உமாபதி பறையோடு இசைக்கூட்ட, அனைத்து மக்களும் ஆர்வமோடு வந்து குவிந்தனர். மேடவாக்கம் இரவி மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியில் சாமியார்களின் தில்லுமுல்லுகளை எடுத்துரைக்க மக்கள் ஆர்வமுடன் கேட்டு விழிப்புணர்வு கொண்டனர். ஜாதி தோற்றம், இழிவு மற்றும் ஜாதி ஒழிப்பின் அவசியத்தை இராமர் ஆதாரத்தோடு எடுத்து வைத்து உரை நிகழ்த்தினார்.

அதன்பின் சிங்கபெருமாள் கோயில், செங்கல்பட்டு மற்றும் மதுராந்தகத்தில் பரப்புரைப் பயணம் சிறப்பாக நடந்தது. பயணத்தில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த தோழர்கள் இராவணன், அருண், பிரபாகர், அசுரன், இயேசு மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தோழர்கள் பெரியார் வெங்கட், ஆனந்த பெரியார், முருகன், சாமிதுரை ஆகியோரோடு தோழர்கள் நாராயணன், விஜய்குமார் கலந்து கொண்டு மக்களிடையே துண்டறிக்கையை விநியோகித்து பிரச்சாரம் செய்தனர். நிகழ்ச்சியில் கழக வெளியீட்டு புத்தகங்களை அசுரன் விற்பனை செய்தார்

அனைவரும் இரவு செங்கல்பட்டு நகரில் தங்கி மறுநாள் 25.10.2015 காலை 10 மணியளவில் திருக்கழுக்குன்றத்தில் பரப்புரை மேற்கொண்டனர். அடுத்து திருப்போரூர், கேளம்பாக்கம் மற்றும் கண்டிகையிலும் நடைபெற்றது. ஒவ்வொரு ஊரிலும் 2 முதல் 3 மணிநேரத்திற்கு குறையாமல் பரப்புரை நடந்த து.

**பொதுமக்களின் பங்களிப்பு :** சிங்கபெருமாள் கோயிலில் பரப்புரை வண்டியின் ஜெனரேட்டர் சரிவர இயங்காததால் ஒலிபெருக்கி உபயோகப்படுத்த முடியாத சூழல் எழுந்தபோது, அருகில் இருந்த கடைக்காரர் தன் கடையில் இருந்து மின்சாரம் எடுத்து பரப்புரை செய்யுங்கள் என்று ஊக்கப்படுத்தினார்.

திருக்கழுக்குன்றத்தில் நமது கருத்துகளின் வீச்சை தாங்கிக் கொள்ள முடியாத சாதியவாதிகள் வந்து இன்னும் எவ்வளவு நேரம் ஒலி பெருக்கி வைத்து பரப்புரை செய்து கொண்டேயிருப்பீர்கள் சீக்கிரம் முடியுங்கள் என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தோழர்கள் பயணத் திட்டத்தை எடுத்துரைத்து அவருக்கும் துண்டறிக்கை கொடுத்து அனுப்பினார்கள்.

கேளம்பாக்கத்தில் உமாபதியின் பகுத்தறிவு கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு பேஷன் சாய்ஸ் டிரஸ் என்ற கடை ஊழியர்கள் பாராட்டை தெரிவித்து ரூ.500 நன்கொடையையும் கருஞ்சட்டையையும் அன்பளிப்பாக தந்து ஊக்கப்படுத்தினர்.

அடுத்தகட்ட பரப்புரைப் பயணம் விரைவில் வேறு பகுதிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**செய்தி :ஆதனூர்விஜய்**

# சென்னை மாநகர ஆணையரிடம் கழகம் மனு

அரசு ஆணைகளை புறந்தள்ளிவிட்டு, காவல் நிலையங்களை 'இந்து' வழிபாட்டு இடமாக்கி, ஆயுத பூஜை போடும் மதவாத நிகழ்வை நிறுத்தக் கோரி சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன் தலைமையில் மாநகர ஆணையரிடம் நேரில் தோழர்கள் மனு அளித்தனர். இது தொடர்பாக அரசு வெளியிட்ட ஆணைகளையும் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மாநகர காவல் துறை ஆணையராக புதிதாக பொறுப்பேற்றுள்ள அதிகாரி கருத்துகளை பொறுமையுடன் கேட்டு, உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். மாவட்டத் தலைவர் வேழ வேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, துணை செயலாளர் சுகுமார், அய்யனார் உள்ளிட்ட தோழர்கள் பலரும் உடன் சென்றனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இடஒதுக்கீட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட அரசியல் சட்டத்திருத்தங்கள் தனியார் துறைக்கும் பொருந்தாதா? அப்படி, இடஒதுக்கீடு சட்டம் பொருந் தாது என்றால், ஏன் மற்றொரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வரக்கூடாது?

இந்தக் கேள்விகள் - 'நிலவைப் பிடித்துத் தா' என்பதுபோலத் தோன்றலாம். காரணம், இப்போதுள்ள அரசாங்கத்தை நடத்துவதே கார்ப்பரேட் நிறுவனங்கள்தான். சமூகத்தின் 'மேல் தட்டு வர்க்கம்' நடத்தும் பள்ளிகளில் கல்வி உரிமைச் சட்டங்கள் காற்றில் பறக்க விடப்படுகின்றன. வாய்ப்புகள் மறுக்கப்பட்ட கீழ் மட்டத்தில் உழலும் குழந்தைகளுக்கு 25 சதவீத இடங்களை ஒதுக்க வேண்டும் என்று சட்டம் கூறினாலும் அவர்கள் பின்பற்றுவது இல்லை. தங்கள் வீட்டு மகனும் மகளும் இத்தகைய ஒடுக்கப்பட்ட பின்புலத்துப் பிள்ளைகளோடு சமமாக உட்கார்ந்து படிப்பதையே அவர்கள் விரும்புவதில்லை.

உயர்ஜாதியினருக்கும் கார்ப்பரேட் குழுக்களுக்கும் இடையே உள்ள நேர்மையற்ற உறவுகளை நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். பிற்படுத்தப்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் கீழ் நிலையில் தொடர்ந்து நீடிக்கவும், உயர்ஜாதி பணக்கார வர்க்கம் தங்களை மேலும் மேலும் வலுப்படுத்திக் கொள்ளவுமான நிலையே நீடிக்கிறது. இந்த நிலையில் இடஒதுக்கீடு கொள்கை அரசு நிறுவனங்களுக்குள் மட்டுமே முடங்கிவிடக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட மக்கள் வலியுறுத்தும் நேரம் வந்துவிட்டது.

தனியார் துறைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் சமூக நீதிக்கான இடஒதுக்கீட்டுக் கொள்கையை வலியுறுத்த வேண்டும்; அதற்காகப் போராட வேண்டும். சமத்துவமான சமூகத்தை அமைக்க இது ஒன்றே வழி. ஆம்! நாமும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றே வலியுறுத்து வோம். அது, தனியார் துறைக்கும் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்து என்பதுதான்!

**(கட்டுரையாளர் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர்.**
**தமிழில் – 'இரா')**

## கோபி இளங்கோ, தபசி குமரன்-வழக்கிலிருந்து விடுதலை



2009 ஆம் ஆண்டு ஈழத்தில் இன அழிப்புப் போர் உச்சத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இங்கு தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக அப்போதைய பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

ஈழத்தின் இன அழிப்பு குறித்து பெ.தி.க.வின் சார்பில் "இனி என்ன செய்யப் போகிறோம்?" எனும் தலைப்பில் காணொளி குறுவட்டு ஒன்று வெளியிடப் பட்டது. அதில் ஈழத்தில் நடைபெறும் போர் குறித்து தமிழக மக்களுக்கு உண்மைகளை விளக்கும் காட்சிகள் இடம்பெற்றிருந்தன.

அப்போது அக்குறுவட்டுக்களை வைத்திருந்ததாக கூறி தற்போதைய திராவிடர் விடுதலைக் கழகத்தின் வெளியீட்டு செயலாளர் கோபி இராம. இளங்கோவன், காப்புரிமைச் சட்டத்தின் கீழ் தமிழக அரசால் கைது செய்யப்பட்டு 2 மாதங்கள் கோவை சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு அந்த வழக்கில் கழகத்தின் தலைமை நிலைய செயலாளர் தபசி குமரனும் சேர்க்கப்பட்டார். இந்த வழக்கு கோபி குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த 6 ஆண்டுகளாக நடைபெற்றது. இவ் வழக்கின் தீர்ப்பு கடந்த 20.10.2015 அன்று கோபி நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது. இவ் வழக்கை தள்ளுபடி செய்து கழக தோழர்களை நீதிமன்றம் விடுதலை செய்தது. இவ் வழக்கில் மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் மற்றும் வழக்கறிஞர் குண சேகரன், வழக்கறிஞர் செல்வி ஆகியோர் வாதாடினார்கள்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 30th October 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN